# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 10 வியாழக்கிழமை (26.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 273


# அரசு எழுத்து மூலம் யோசனைகளை முன்வைக்கும் வரை பேச்சு இல்லை

## அரசமைப்புத் திருத்த விவகாரம் குறித்து ஐ.தே.க. திட்டவட்டம்



கொழும்பு, ஓகஸ்ட் 26

**அரசமைப்புத் திருத்த யோசனைகளை அரசு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எழுத்துமூலம் வழங்கும் வரை, அரசுடன் அரசமைப்புத் தொடர்பான பேச்சுகளில் தமது கட்சி ஈடுபடாது என்று அறிவிக்கப் பட்டுள்ளது.**

அரசமைப்புத் திருத்த யோசனைகளைத் தனித்து நின்று நடைமுறைப்படுத்தினால் ஏற்படப்போகும் பிரச்சினைகளைத் தவிர்ப் பதற்காகவே அரசு ஐக்கிய தேசியக் கட்சி யின் உதவியை நாடுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத் தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க இத னைத் தெரிவித்தார். அவர் இது தொடர் பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்த யோசனைகளுள் அடங்கியுள்ள நிறைவேற்று அதிகாரமிக்க

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொது எதிரணி அரசியல் கட்சிகள் நேற்றுக் கூடின

கொழும்பு,ஓக.25

அரசுக்கு எதிராகப் புதிய அணி ஒன்றை அமைக்கும் நோக்குடன் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் நேற்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரை யாடின.

இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன கலந்துகொண்டன.

## அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக மஹிந்த-ஹக்கீம் நேற்றுச் சந்திப்பு



கொழும்பு,ஓக.26

முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கண்டியில் சந்தித்து உத் தேச அரசமைப்புத் திருத் தம் சம்பந்தமாகக் கலந் துரையாடியுள்ளார்.

சந்திப்பின் பின்னர் ஹக்கீம் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் :-

முஸ்லிம் மக்களுக்கு இடையூறு தராத எந்த யோசனையையும் நாம் ஏற்கத் தயார். ஜனாதிபதியுடனான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து தாம் கட்சியின் உயர் மட்டக் குழுவினருக்கு இன்று விளக்கம் அளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மஹிந்த மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக வருவதற்கு அரசமைப்புத் தடைகளை நீக்க முயன்று வருகின்றார். இது முஸ்லிம் காங்கிரஸுக்குத் தடையாக அமையாதா? எனக் ஹக்கீமிடம் கேட் கப்பட்ட போது அந்தச் செயற்பாடுகளால் முஸ்லிம்களுக்குப் பாதிப்பு இல்லை எனக் கருதுகின்றேன். இப்போதும் ஒரு நல்லாட் சியைக் கொண்டு (24ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் டிசெம்பர் மாத முடிவுக்குள் வன்னியில் மீள்குடியேற்றம் பூர்த்தியாகும்

### புதுடில்லியில் வைத்து பஸில் வாக்குறுதி



புதுடில்லி,ஓக.26

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள எஞ் சிய தமிழர்கள் அனை வரும் இந்த வருடத்திற் குள் (அதாவது டிசெம்பர் மாதமுடி வுக்குள்) மீள் குடியமர்த்தப்படுவார்கள் எனப் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கு இடை யில் பொருளாதார அரசியல் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இந்தியா வந்தார்.

அதன்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை நேற்று பிற்பகல் சந்தித்து ஒரு மணி நேரம் ஆலோ சனை நடத்தினார்.

இச்சந்திப்பில் தமிழ் மக்களை மீள்குடி யேற்றம் செய்யும் நடவடிக்கையில் ஏற் பட்டுள்ள முன்னேற்றங்கள், இரு நாட்டு உறவுகள், மீனவர் விவகாரம் மற்றும் பல் வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டன.

இச்சந்திப்பின் பின்னர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ செய்தியாளர்களிடம் தெரிவித் தவை வருமாறு:-

''வடக்கில் மீள்குடியேற்றம் 90 சத வீதம் நிறைவடைந்துவிட்டது. தற்போது முகாம்களில் 10 ஆயிரம் தமிழர்கள் மட் டுமே உள்ளனர். அவர்களும் டிசம்பர் மாதத் திற்குள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தமிழர் களுக்கு தேவையான நடவடிக்கைகள் துரித மாக மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவது குறித்து பேச விரைவில் இலங்கைக்குச் செல்லவுள்ளேன்

### நாடாளுமன்றில் அமைச்சர் கிருஷ்ணா



புதுடில்லி,ஓக. 26

முகாம்களில் உள்ள தமிழர்களை மீள் குடிய மர்த்தும் நடவடிக்கை களை துரிதப்படுத்த, தாம் விரைவில் இலங்கை செல்ல உள்ளார் என இந் திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித் துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் இடம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் தொடர் பாக தி.மு.க. உறுப்பினர் ரி.ஆர்.பாலு கொண்டுவந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது கலந்துகொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்திய அரசு தொடர்ச்சியாக உதவி செய்து வருகிறது. மீள்குடியமர்த்தப் பட்டுள்ள தமிழர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு இலங்கை அரசை இந்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

போர் நடைபெற்ற பகுதியில் இந்திய அரசு தரமான வைத்தியசாலையை அமைத் துள்ளது. இதுவரை 50 ஆயிரம் பேர் அங்கு சிகிச்சை பெற்றுள்ளனர். பலருக்கு அறு வைச் சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. வைத்தியசாலை உலகத் தரத்தில் அமைந் துள்ளது. சூழ்நிலை மாற்றத்திற்கு ஏற்ப உண்டாகும் நோய்களைக் கட்டுப்படுத் தும் நிபுணர்களும் அங்கு உள்ளனர். இது தவிர ஏராளமான மருத்துவ உபகரணங் களும் தமிழர் பகுதிகளுக்கு வழங்கப்பட் டுள்ளன.

வேளாண் கருவிகள் வழங்கப்படும் இலங்கை தமிழர்கள் விவசாயம் உள் ளிட்ட தொழில்களில் மீண்டும் ஈடுபட்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுப் பகுதி மக்கள் 800 பேர் சொந்த இடங்களில் நேற்று மீள்குடியமர்வு

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

முல்லைத்தீவு,ஓக.26

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வவுனியா மெனிக்பாம் முகாமில் தங்கியி ருந்த மக்களில் 800 பேர் நேற்று அவர் களின் சொந்த இடங்களில் மீள்குடியேற் றம் செய்யப்பட்டுள்ளனர் என்று ஜனாதி பதி செயலகம் அறிவித்துள்ளது.

இவர்களைவிட மெனிக்பாம் முகாமில் இன்னும் 33 ஆயிரம் பேர் மட்டுமே தங்கி யுள்ளனர். அவர்களும் விரைவில் சொந்த

(24ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலிருந்து இளம் பெண்களை தென் பகுதிக்குக் கூட்டிச் செல்லும் முயற்சி

### உரிய தருணத்தில் தடுக்கப்பட்டது

கொழும்பு, ஓக.26

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளம் பெண்களை தென்பகுதிக்கு அழைத் துச் செல்லும் முயற்சி தடுத்து நிறுத்தப் பட்டது. தென்னிலங்கையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை வழங்குவதா கக் கூறி ஆடைத் தொழிற்சாலை நிறுவ னங்களைச் சேர்ந்த சிலரால் இப்பெண்கள் அழைத்துச் செல்லப்படவிருந்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட் டக்களப்பு மாவட்ட எம்.பி. பா.அரியநேந் திரனின் ஏற்பாட்டில் அது தடுக்கப்பட் டது.

முன்னர் கிளிநொச்சியிலிருந்தும் ஆடைத் தொழிற்சாலையில் வேலைசெய் வதற்கென இளம் பெண்களை அழைத்துச் செல்லும் முயற்சி கூட்டமைப்பு எம்.பிக் கள் சி.சிறிதரன், ஈ.சரவணபவன் ஆகியோ ரின் தலைமையீட்டால் தடுத்துநிறுத்தப்பட் டது.

மட்டக்களப்புச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றஉறுப்பினர் பா.அரியநேத் திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு; -

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை,

(24ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!

நல்லைக் கந்தனின்

உற்சவக் காலத் திருக்காட்சிகள்

தினமும் உங்கள் உதயனின்

வலைத் தளத்திலும்....

www.uthayan.com

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும் விழா நாயகியுமாகிய

# திருமதி இமெல்டா சுகுமார்

அவர்களுக்கு
வலிகாமம் தெற்கு பொது அமைப்புக்களும்
பொது மக்களும் இணைந்து அளிக்கும்

## வரவேற்பு விழா

இடம் : சுன்னாகம் பொது நூலக மண்டபம்
காலம் : நாளை (27.08.2010) வெள்ளிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3 மணி

பிரதம அதிதி: பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சி நிரல் :
★ மங்கள விளக்கேற்றல் ★தேசிய கீதம்
★ விழா நாயகி கௌரவம்

தலைமையுரை: திரு.இ.பேரின்பநாயகம்
(முன்னாள் ஆலோசகர், நீதி அரசியலமைப்பு விவகார,தேசிய ஒருமைப்பாடு அமைச்சு)

வரவேற்புரை: திரு.சி.குமரவேல்
(தலைவர்,சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)

நல்லாசிகள் :
★சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் ஸ்ரீகாந்தக் குருக்கள்
(பிரதம குரு, சுன்னாகம் கதிரமலை சிவன்தேவஸ்தானம்)
★வண.கலாநிதி ஜெபமோகன் ஜெபரட்ணம்
(சிரேஸ்ட விரிவுரையாளர், கிறிஸ்தவ இஸ்லாம் நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
★செஞ்சொற்செல்வர் சிவத்திரு ஆறு. திருமுருகன்
(தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)
அதிபர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
★சிவத்திரு சி.சக்திகிரீவன்
(செயலாளர், இந்து சமயப் பேரவை)

சிறப்பு விருந்தினர்கள்
★திருமதி சதீசன் மஞ்சுளாதேவி (பிரதேச செயலாளர், வலி.தெற்கு)
★திரு.ப.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)
★திருமதி மதுமதி வசந்தகுமார் ( உதவி உள்ளூராட்சி ஆணையாளர்)
★திருமதி சுலோச்சனா முருகநேசன்
(செயலாளர், வலி.தெற்கு பிரதேசசபை)
★திரு.பசுபதி சீவரத்தினம் (தலைவர், பனை அபிவிருத்திச் சபை)
★டாக்டர் அ.ஜெயக்குமார் (சுகாதார வைத்திய அதிகாரி, உடுவில்)

வாழ்த்துரைகள்
★திரு.சு.பரமநாதன் (முன்னாள் யாழ்.மாவட்ட சபை செயலாளர்)
★திரு.ரி.தேவராஜன் (ஓய்வுநிலை திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்)
★திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
(அதிபர், இராமநாதன் கல்லூரி,மருதனார்மடம்)
★திரு.எஸ்.பி.அரசகுமார்
(முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்)
★திரு.பொ.பரமநாதன் (கிராம அலுவலர்)
★திரு.சு.தம்பித்துரை (தலைவர், மத்தியஸ்தசபை, வலி.தெற்கு)
★திரு.செ.இலகுநாதன் (தலைவர், சமநல சேவை நிலையம், உடுவில், தலைவர், யா.மா.சி.கூ.ச)
★திரு.ந.சண்முகவேல் (ஜே.பி.,செயலாளர், சுன்னாகம் வர்த்தக சங்கம்)
★திரு.இ.பரமேஸ்வரலிங்கம் (தலைவர், தாவடி மத்திய சனசமூக நிலையம், இயக்குநர், சுன்னாகம் ப.நோ.கூ.ச.)
★திரு.இ.அரிகரன்
(உப தலைவர்,சனசமூக நிலையங்களின் சமாசம்)
★வலிகாமம் தெற்கு அபிவிருத்தி மகஜர் கையளிப்பு
★ விழா நாயகி ஏற்புரை

நன்றியுரை:
திரு.ஐ.இராமசாமி ஜே.பி. (உடுவில் மத்தியஸ்த சபை)

தேசிய கீதம்

அன்புடன் அழைக்கின்றோம்! அனைவரும் வருக!!

வரவேற்பு விழாக் குழு.

அனுசரணை: க.பொ.க.பாலசிங்கம் (ஜே.பி)
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

## 31 ஆம் நாள் நீங்கா நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம்: 17.01.1935
மறைவு: 26.07.2010

கடந்த 26.07.2010 திங்களன்று
சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்
அமரர்
செல்லையா வேலும்மயிலும்
(குட்டி)

அவர்களின் இறுதி நேரத்தின்பொழுது எமக்கு சாலவும் உதவிய உள்ளங்களுக்கும் தொலைபேசிகள் மூலமும் கடிதங்கள் மூலமும் எமது தாங்கொணாத் துயரில் எமக்கு ஆறுதல் கூறித் தேற்றியோருக்கும் மற்றும் இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையை நல்லபடியாக நடத்தித் தந்த சிவாச்சாரியர்களுக்கும் மற்றும் இந் நிகழ்வில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் யாவருக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாலபவன், சின்னாலடி. அல்வாய். (பி/570154) குடும்பத்தினர்.

## இந்தியர்கள், இஸ்ரேலியர்களுக்கு விசா அளிக்க மறுக்கின்றது பாக்.

இஸ்லாமாபாத், ஓக. 26

பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டுவரும் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட, பல்வேறு நாட்டு தன்னார்வ நிறுவனங்களுக்கும், பணியாளர்களுக்கும் விசா அளித்து வரும் பாகிஸ்தான் அரசு, இந்தியர்கள் மற்றும் இஸ்ரேலியர்களுக்கு மட்டும் விசா அளிக்க தொடர்ந்து மறுத்து வருகிறது.

பாகிஸ்தானின் சிந்துப் பகுதியில் சமீபத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால், இரண்டு கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவ பல்வேறு நாடுகளிலிருந்தும் தன்னார்வ அமைப்புகளைச் சேர்ந்தோரும், பணியாளர்களும் முன்வந்துள்ளனர்.

இதனால், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா முகமது குரேஷியின் அறிவுரைப்படி விசா வழங்குவதில் சில விதி முறைகள் தளர்த்தப்பட்டு வருகின்றன. பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகத்தின் உத்தரவின் பேரில் பல நாடுகளிலும் உள்ள பாகிஸ்தான் தூதரகங்கள் அதற்கான விசாக்களை வழங்கி வருகின்றன.

ஆனால், உள்துறை அமைச்சகம், வெளியுறவு அலுவலகத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில், வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட இந்தியர்கள், இஸ்ரேலியர்களுக்கு மட்டும் விசா வழங்கப்படக் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளது. (எ)

## சீனாவில் விமான விபத்து: 43 பேர் பலி; 48 பேர் காயம்!

பீஜிங், ஓக. 26

சீனாவில் செவ்வாய்க்கிழமை இரவு பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் 43 பேர் உயிரிழந்தனர். 48 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து ஹெய்லோங்ஜியாங் மாகாணம் இசுங் நகரிலுள்ள லிண்டு விமான நிலையத்தில் நடந்தது.

ஹர்பின் நகரிலிருந்து புறப்பட்ட இந்த விமானம், இசுங் நகரிலுள்ள லிண்டு விமான நிலையத்தில் தரையிறங்கும்போது பனி மூட்டம் காரணமாக ஓடுபாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்து நேரிட்டபோது விமானத்தில் 91 பயணிகள் இருந்தனர். விபத்துக்குள்ளான விமானம் ஹேனான் விமான நிறுவனத்துக்குச் சொந்தமானது. இந்த விமான நிறுவனம் சீனாவின் உள்நாட்டு சேவையில் ஈடுபட்டு வருகிறது. (எ)

## பாக். - இந்தியா இடையே ஆக்க பூர்வமான உறவு தேவை

### அமெரிக்கா வலியுறுத்து

வாஷிங்டன், ஓக. 26

இந்தியாவுடன் பாகிஸ்தான் ஆக்கபூர்வ உறவு வைத்துக்கொள்வது அவசியம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் பி.ஜே.குரோலி குறிப்பிடுகையில், ''பாகிஸ்தானுடன் ஆப்கானிஸ்தான் உறவு வைத்துக்கொள்ள வேண்டும். இது மிக மிக அவசியம். அதுபோல இந்தியாவுடன் பாகிஸ்தான் உறவு வைத்துக்கொள்வது மிகவும் நல்லதாகும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''இந்த அண்டை நாடுகள் தமக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு 2 கண்களும் போகட்டுமே என்ற மனோ நிலையை வளர்த்துக் கொள்ளக்கூடாது. இந்த நாடுகள் தமக்குள் நெருக்கத்தை வளர்த்துக் கொண்டால், அவற்றை எதிர் நோக்கியுள்ள பயங்கரவாத அச்சுறுத்தலைத் துணிவுடன் எதிர்கொண்டு ஒடுக்கமுடியும் என அமெரிக்கா கருதுகிறது'' என்றும் குரோலி குறிப்பிட்டுள்ளார். (எ)

### யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை பயிற்சிபெற்ற மகளிர்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் கல்வித்திட்டத்தின் கீழ் மனைப்பொருளியல் டிப்ளோமா, அடிப்படைப் பயிற்சி மற்றும் ஏனைய பயிற்சி பெற்று இதுவரை வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ளாத மகளிர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டு 27.08.2010 வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தின் 5ஆம் மாடியில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபக்
கட்டடத்தொகுதி, 2ஆம் மாடி,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை.

(இ/570159)

### தேவை

புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல், ஊர்க்கோழி என்பன நியாயமான விலையில் உடன் தேவை.

158/4, தாசன் பாம், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

உரும்பிராய், செல்வபுரம், சிவன்கோயிலடி அருகில் கிணற்றுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு : 0777910953, 0776063175

### விற்பனையாகிறது

G.C.E. (A/L) - 2011 மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்ப [GIT] பரீட்சைக்கான தமிழ் மொழி மூலமான மாதிரி வினாத்தாள் - விடைகளுடன் விற்பனையாகின்றன.

ஆசிரியர் : Mr. S.S. SELVA
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

### முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் அனைத்தும் தங்களுக்கும், தங்கள் பகுதியிலும் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களின் விவரத்தை 30.08.2010 இற்குள் பிரதேச சபைத் தலைமைப் பணிமனையில் ஒப்படைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல் : செயலாளர்,
சனசமூக நிலையங்களின் சமாசம்,
சாவகச்சேரிப் பிரதேசம், கொடிகாமம்.

### தவறிவிட்டது

19.08.2010 இரவு தனியார் வாடகை பஸ்ஸில் யாழில் இருந்து கொழும்புக்குப் பிரயாணம் செய்யும்போது செ.ஜெயந்தி [N 1819989], செ.ஆன்சோபியா [N 1819991], செ.கிஷாந் [N 1819990] என்பவர்களுடைய மூன்று கடவுச்சீட்டுகள் மற்றும் ஆடைகள் அடங்கிய பச்சைநிற சிறிய சூட்கேஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிகளில் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

செ.ஜெயந்தி,
[illegible]
தொ.பே.: 0212221232

N.Sathiyanathan,
42, Galpotta Street,
Kotahena,
Colombo-13.

(103455)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை



காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் 53/1, அரசடி வீதி, சீனியர் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை நேற்று (25.08.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம், நாகம்மா, பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருள்நாதன், சிவராசா, காலஞ்சென்ற முருகதாஸ், சிவசோதி ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவராசா, இராஜேஸ்வரி,ராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சினி, தர்மினி, பிறேமலதா, காயத்திரி, அஜந்தன், அனுசன், சுதர்சன், சுகந்தன், சிவநிதி, சிவரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2010) மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/1, அரசடி வீதி,
சீனியர் லேன், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் :-
0771175544 / 0217210121 (102463)

தகவல் :
குடும்பத்தினர்.

### இலிங்கப்பிள்ளை பரமநாதன்



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், சரவணை, பள்ளம்புலத்தை வசிப்பிடமாகவும், இந்தியாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இலிங்கப்பிள்ளை பரமநாதன் 23.08.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலிங்கப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியினரின் புதல்வரும், காலஞ்சென்ற இராசையாவின் பெறாமகனும், காலஞ்சென்ற நாகரத்தினம் - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், மங்கையர்க்கரசியின் கணவரும், காலஞ்சென்ற ராஜேந்திரன், சகுந்தலா (சித்திரா - அவுஸ்திரேலியா), வசுந்தரா (வசந்தி - ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் பார்த்தீபன் (அவுஸ்திரேலியா), முருகபூபதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் உலகநாயகி (லண்டன்), காலஞ்சென்ற ஜெகதாம்பிகை, இந்திராணி (பிரான்ஸ்), சங்கரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் சங்கரலிங்கம் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), சிவஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம் - அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அத்தானும், காலஞ்சென்ற நடராஜா (ஆசிரியர்), நாகராஜா (தலைவர் - இலங்கை), கந்தசாமி (குணம் - தபால் அதிபர், பிரான்ஸ்), கிருஸ்ணவேணி ஆகியோரின் மைத்துனரும், உலகநாயகி (அவுஸ்திரேலியா), விமலாதேவி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி - அவுஸ்திரேலியா), லோகேஸ்வரி ஆகியோரின் அண்ணனும் இலோகீசன், விகிர்தன், தனுஷன் ஆகியோரின் பேரனும் பஞ்சாட்சரம், தர்மலிங்கம், பத்மலோஜினி (பத்மா), பரமேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2010) வியாழக்கிழமை இந்தியாவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
பார்த்தீபன் [அவுஸ்திரேலியா- +61297646319]
முருகபூபதி [ஜேர்மனி- +496251948427]
சங்கரலிங்கம் [அவுஸ்திரேலியா- +61297641217]
சிவஞானம் [அவுஸ்திரேலியா- +61298911656]

தகவல் :
குடும்பத்தினர்.
(ஜேர்மனி).

(102387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நாட்டின் வளர்ச்சி நாடும் அமைச்சர்களை கண்டுபிடிப்பது எப்போது?

இலங்கையில் கல்விப்பகுதி எப்போதுமே பிரச்சினைகள்,பாகுபாடுகள், குழறுபடிகள் நிறைந்தது என்று பெயர்பெற்றது. அவ்வப்போது கல்வி அமைச்சர்களாகப் பதவியேற்பவர்கள் அவற்றைத் தாம் சீர் செய்வதாகக் கூறினாலும், புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டினாலும் பெறுபேறு மத்திமமாகவே இருந்து வந்திருக்கிறது.

கல்வி அமைச்சைப் பொறுப்பாக ஏற்றுக் கொள்பவர்கள் ஏற்கனவே உள்ள குறைபாடுகள், சீர்கேடுகளைப் படித்தறிந்து அவற்றை நேராக்க முயற்சிப்பதற்கு முன்னர், தங்கள் சிந்தனையில் உதிக்கும் புதியனவற்றை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து விடுவதே வழக்கம்.

காலத்திற்கேற்ப பழையன கழிதலும் புதியன புகுதலும் முன்னேற்றத்துக்கும், நாட்டு அபிவிருத் திக்கும் இன்றியமையாதவை. ஆனால் புதியவை திட்டமிட்ட முறையில் செயலாக்கப்பட வேண்டும். கல்வி அமைச்சர்களாக இருப்பவர்களும் அவர்களின் ஆலோசகர்கள் என்ற அங்கி அணிபவர்களும் தமக்குத் தெரிந்தவற்றை, அவற்றின் பிரதிபலன் கருதாது செயலாக்கத் துடிப்பது பல சந்தர்ப்பங்களில் நாட்டின் கல்வியைத் தலைகீழாக்கியதும் உண்டு. கல்விசார் திட்டங்களில் தத்தமது அரசியல் சித்தாந்தங்களையும் புகுத்தினால் நாட்டின் கல்வி நிலை கீழிறங்கிப் போகுமே அன்றி முன்னேற்றம் அடையாது.

எங்கள் நாட்டின் கல்வித்துறையில் காலத்திற்கு ஏற்ற வகையில் உள்ள வளங்களுக்கு, வசதிகளுக்கு அப்பாற்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட ''புதிய'' திட்டங்கள் மாணவர்களின் கல்வித் தரத்தையும் கல்வி நிலையையும் கீழிறக்கியதும் உண்டு.

கல்வி அமைச்சர் பொறுப்பைப் புதிதாக ஏற்றுள்ள பந்துல குணவர்த்தனா,கல்வித்துறையில் நூதனமான குறைபாடு நிலவுவதாக இப்போது கண்டறிந்துள்ளார். மாணவர்களின் தேவைக்கென, அவர்களுக்குக் கற்பிப்பதற்கென போதுமான ஆசிரியர்கள் கல்விப் பகுதியில் பணியாற்றுகிறார்கள். ஆனால் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வர்த்தகம் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது!

கடந்த காலத்தில் ஆசிரியர் நியமனங்கள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நடைபெறவில்லை என்பது புதிய கல்வி அமைச்சர் பந்துலவின் கண்டு பிடிப்பு. அதாவது இருபது தொடக்கம் இருபத்தைந்து மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பது சர்வதேச விதி முறையாக இருந்த போதிலும், முக்கிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் நியமனம் அந்த வாய்ப்பாட்டிற்கு ஏற்ப நடைபெறவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார் அவர்.

இத்தனைக்கும், பொதுத்தேர்தலுக்கு முன்னரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணியே பதவியில் இருந்தது. அதாவது அரசு ஒன்று அமைச்சர் பதவியில் இருவர் என்ற நிலையில் மேற்கண்ட குறைபாடு வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பந்துல குணவர்த்தனா அங்கம் வகிக்கும் அதே அரசாங்கத்தில் அவர் சுட்டிக்காட்டும் தவறு அல்லது குறைபாடு நிகழ்ந்துள்ளது. இதற்கு முன்னர் இந்தப் பதவியை வகித்த சுசில் பிரேம ஜயந்த இதற்குப் பதில் அளிப்பாரா? பொறுப்புக் கூறுவாரா? அத்தகைய ஒரு நிர்வாகமுறை , ஆட்சி முறை இந்த நாட்டில் இல்லையே!

✱கடந்த காலத்தில் ஆசிரியர் நியமனங்களுக்கான தெரிவு உரிய முறையில் நடைபெறவில்லை. நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் நடைமுறையில் வேறுபாடு பேணப்பட்டிருக்கிறது.

✱இலங்கையில் நூறுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட மூவாயிரம் வரையான பாடசாலைகள் இயங்குகின்றன. அந்தப் பாடசாலைகளில் ஏழு மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற வீதத்தில் கல்வி போதிக் கப்படுகின்றது.

✱மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் 86 பாடசாலைகள் நாட்டில் இயங்குகின்றன.

இவை மூன்றும் புதிய கல்வி அமைச்சர் அக்கறையுடன் கண்டறிந்த புள்ளி விவரங்கள்.

அதாவது ஒட்டுமொத்தத்தில் சிறிய பாடசாலைகளில் அளவுக்கு அதிக எண்ணிக்கையான ஆசிரியர்களும், பெரிய பாடசாலைகளில் தேவைக்கு குறைந்த எண்ணிக்கையினரும் ஆசிரியர் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.இதனால் பல பெரிய பாடசாலைகளில் 56 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் கல்வி புகட்டும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

கல்வி வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தியின் சுட்டெண். அது வருடாந்தம் உயர்ந்து செல்ல வேண்டியது. பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இந்த வகையில் வருடாந்தம் ஏறுமுகம் காட்டுகின்றன.

ஆனால் இலங்கையில் அரசாங்கம் மாறி மாறி ஆட்சிக்கு வரும் போது, கல்வி வளர்ச்சி அந்தந்தக் கட்சியின் அமைச்சரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப வீழ்ச்சி காண்கிறது. ஒரே கட்சி அரசாங்கம் ஆட்சியில் தொடர்ச்சியாகத் தொங்கினாலும் நிலைமையில் மாற்றமில்லை!

நாட்டு வளர்ச்சிக்காக மக்கள் நலனுக்காக உழைக்க வேண்டிய அரசாங்கங்கள் மட்டுமன்றி அமைச்சர்களும் தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கு உகந்ததாகவே அந்தந்தத் துறைசார்ந்த திட்டங்களை முன்னெடுக்கிறார்கள் என்பது இப்போது வெளிச்சமாகிறது.

மக்கள் நலன் கருதிய பொதுவான, நீண்ட காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, நாட்டை முன்னேற்றும் எண்ணம் அரசியல்வாதிகளுக்கு, குறிப்பாக ஆட்சிபீடம் ஏறுவோருக்கு எப்போது பிறக்கும் ?

# சட்டவிரோத மின்சார பாவனையாளர்களால் மின்சாரசபைக்கு 400 கோடி ரூபா இழப்பு

கொழும்பு,ஓக.26

சட்டவிரோதமான மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் காரணமாக ஆண்டொன்றுக்கு மின்சாரசபைக்கு 400 கோடி ரூபா இழப்பு ஏற்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என மின்சாரசபையின் பரிசீலனை முகாமையளர் எல்.சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் உள்ளடங்கலாக நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் கடந்த மூன்று மாத காலத்தில் மாத்திரம் 3ஆயிரத்து 50 சட்ட விரோத மின்பாவனையாளர்களைக் கைது செய்ய முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

இவ்விதம் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 5 கோடி ரூபாய்கள் அறிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், தற்போதும் நாடளாவியரீதியில் மின்சார சபை திடீர் சுற்றிவளைப்புகளை முடுக்கிவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (த)

# சிகிரியா ஓவியங்களைப் பரிசீலிக்க இத்தாலிய நிபுணர் இலங்கை வருகிறார்

கொழும்பு, ஓக.26

வரலாற்றுப் புகழ்மிக்க சிகிரியாக் குன்றிலுள்ள குகை ஓவியங்களின் வர்ணங்கள் மங்கிப் போனமை தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இத்தாலிய தொல்பொருள் பாதுகாப்பு நிறுவனமான அய்குரோம் (Iccrom) நிறுவனத்தின் நிபுணர் ஒருவர் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாக இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கலாசாரச் சொத்துகளைப் பாதுகாத்தல் மற்றும் உறுதிப்படுத்தல், ஆய்வுகள் தொடர்பான சர்வதேச மையம் எனக் குறிப்பிடப்படும் மேற்படி நிறுவனம் தொல் பொருள்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் சர்வதேச மட்டத்தில் முன்னணி வகிக்கும் உலகின் தலைசிறந்த நிறுவனமெனவும் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசினால் விடுக்கப்பட்ட அழைப்புக்கிணங்க இங்கு வரும் இத்தாலிய நிபுணர் இங்குள்ள தொல்லியல்துறை நிபுணர்களுடன் இணைந்து சிகிரியா குகை ஓவியங்களைப் பரிசீலிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## திராட்சைப்பழத்தின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஓக. 26

யாழ்.நகரில் திராட்சைப் பழத்தின் விலை திடீரெனக் குறைந்துள்ளது.

முன்னர் ஒரு கிலோ 500 ரூபா வரை விற்கப்பட்டு வந்த திராட்சைப் பழம் தற்போது ஒரு கிலோ 200 ரூபாவாகக் விலை குறைந்துள்ளது.

குடாநாட்டு விவசாயிகளினால் பயிரிடப்பட்ட திராட்சைப்பழம் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

இந்தத் திராட்சைப் பழம் அதிகளவில் தென்பகுதிக்கு ஏற்றுமதியாவதோடு குடாநாட்டுச் சந்தைகளி லும் விற்பனைக்கு வந்துள்ளது.

இதனை அடுத்து அவற்றின் விலைகளும் குறைந்துள்ளன. (த-26)

## புதிய தொழில் பயிற்சி ஆரம்பம்

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் அழகுக்கலை தேசிய தொழில்திறன் சான்றிதழுக்கமைய (NVQ III) ஆறு மாத கால கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொழில்திறன் பயிற்சியைப் பெற விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு நாளை வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## இந்தக் காலத்திலும் கடலுணவுகளின் விலை உச்சத்தில் தான்!

வண்ணை,ஓக. 26

கடலுணவுகளின் விலை அதிகரிப்புக்குக் காரணம் கடலில் 'மச்சங்களின்' நடமாட்டம் குறைந்துள்ளதே எனக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காற்று மற்றும் மழை என்பவற்றால் மாறுபட்ட இயற்கையின் சூழலும் குழம்பிப் போயுள்ளதால் கடல் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வருடா வருடம் நல்லூர், சந்நிதி திருவிழாக்கள் தொடங்கிவிட்டால் சந்தைகளில் கடலுணவுகள் கேட்பார் இல்லாமல் மலிந்து போவது வழமை.

ஆயினும் இவ்வருடம் சந்தைகளில் கடலுணவுகளின் தேட்டம் இல்லாமல் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

விவசாயம் மற்றும் தோட்டச் செய்கைகளில் இயற்கையின் தாக்கங்கள் ஏற்படுவது போன்றே கடலிலும் மாற்றங்கள் தோன்றுவதால் கடல்படு திரவியங்களும் அழிந்தும், அருகியும் வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-160)

## நாளை

ஆவணி 11 27.08.2010 வெள்ளிக்கிழமை

திதி: : திருதியை பி.இ.04.19 வரை

நட்சத்திரம் : உத்தரட்டாதி பி.இ. 05.24 வரை

[illegible] : 06.05-07.35 வரை

இராகுகாலம் : 10.35-12.05 வரை

## முதுமாணிக் கற்கை நெறிக்கு ஆரம்ப நிகழ்வு 4ஆம் திகதி

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் கல்வியியல் முதுமாணிக் கற்கை நெறிக்கான (2010/11 கல்வியாண்டு - அணி - VIII) ஆரம்ப நிகழ்வு அடுத்த மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

உயர் பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கம் மற்றும் கல்வித்துறைப் பேராசிரியர்கள், சிரேஸ்ட விரிவுரையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கற்கைநெறிக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அதிபர்கள், கல்வி நிர்வாகிகள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (த-16)

# 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் இம்முறை 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்குச் சான்றிதழ்

கொழும்பு, ஓக. 26

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாம் பரீட்சை ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

மஹரகமவில் நேற்று ஆரம்பமான இலவச பாடநூல் விநியோகிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்த வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படும்போது ஒரு புள்ளியால் குறைந்த மாணவரும் புலமைப்பரிசிலில் தோல்வியடைந்தவராகக் கருதப்படுகிறார்.

இது மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் மன உளைச்சல்களை ஏற்படுத்துகிறது.

எனவே, இதனைத் தவிர்க்கும் பொருட்டு பரீட்சையில் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் பெற்ற புள்ளிகளுடன் சான்றிதழ்கள் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ஒ-சி)

# நவீனமாகும் தேசிய அடையாள அட்டை

கொழும்பு, ஓக.26

முற்றிலும் கணனி மயமாக்கப்பட்ட பாதுகாப்பு மிக்க நவீனமான தேசிய அடையாள அட்டைகள் வெகுவிரைவில் புழக்கத்துக்கு வரவுள்ளன. ஆள்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் அலுவலகம் இதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

அது சம்பந்தமாக ஏற்கனவே கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும், வெகுவிரைவில் மக்களின் கரங்களில் கணனி மயப்படுத்தப்பட்ட அதியுயர் தொழில்நுட்பத்துடனான அடையாள அட்டைகள் கிட்டவுள்ளதாகவும் ஆள்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

இப்புதிய- கணனி மயப்படுத்தப்பட்ட அடையாள அட்டை, தேசிய பாதுகாப்புப் போன்றே, தனிநபர் பாதுகாப்புக்கும் கூட இன்றியமையாததொரு ஆவணம் எனவும், அது தொடர்பான முக்கிய செயற்பாடுகள் தற்போது திட்டமிடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-22)

# இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் உதவி

யாழ்ப்பாணம், ஒக.26

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்து வாழும் மக்களில் ஒரு தொகுதியினருக்கு தூள் தயாரிக்கும் இயந்திரங்களும், பொருள்களும், மீன்பிடி வலைகளும் அதுசார்ந்த உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாண்டவெட்டை நலன்புரி நிலையத்தில் பத்துப் பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகளும், அதுசார்ந்த உபகரணங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் பெரியமதவடி நலன்புரி நிலையத்தில் வைத்து பத்துப் பயனாளிகளுக்குச் சுயதொழில் வாய்ப்புகான தூள் தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தசூழ்நிலையால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு எமது நிலையம் தொடர்ந்து பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக இன்று இவர்களில் ஒரு தொகுதியினருக்கு மீன்பிடிவலைகள் மற்றும் உபகரணங்களும், கணவனை இழந்த பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படுகின்றன.

தொடர்ந்து இது போன்ற செயற்திட்டங்களை நாம் செயற்படுத்தவுள்ளோம். - என்றார். (த-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. கை.விக்னேஸ்வரன்**
(இலங்கை வங்கி,ஸ்ரான்லி வீதிக் கிளை, யாழ்ப்பாணம்.)

இலங்கை வங்கியில் 28 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றியமைக்காக இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தினால் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) 21.08.2010 அன்று பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டமையை இட்டு நாமும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

றாபன் மல்ரி சென்ரர், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/570157)
அல்டி எலக்ரோனிக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.






சொக்லட் மற்றும் வனிலா சுவை கொண்ட வெயிட் கெய்னர், அதில் அடங்கியுள்ள தீவிர செயற்பாட்டுச் சேர்வை மூலம் அவசியமான போஷாக்கை வழங்கி, உங்களது நேர்த்தியான உடல் வளர்ச்சிக்கு உதவும் மெலிந்த தோற்றமுடைய நீங்கள் முற்றிலும் வித்தியாசமான, புஷ்டியான உடலழகை பெறுவீர்கள்.

EDGE வெயிட் கெய்னர்

**Hotline 0777 536 796**
Manufactured under licence from Edge USA



## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி அன்புமலர் பேரின்பநாயகம்**
திதி: துதியை

மண்ணில் 17.03.1946
விண்ணில் 09.09.2006

எப்படியம்மா நினைப்போம் நீங்கள் இல்லை என்று
நேற்றைவிட இன்று இன்னும் நெருக்கமாய்
நாளை அதைவிட அதிகமாய் என்றுமே
எம்முள் வாழ்வாய் அம்மா......

உங்கள் நினைவில் வாழும்:
கணவர், மகள்மார்,
மருமக்கள், பேரன்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (102451)


## மோசமான வீதியால் மக்கள் சிரமம்

தென்மராட்சி, ஓக.26

வரணி படை முகாமுக்கு முன்பாக பொதுமக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்ட மணல் வீதி மிக மோசமாக குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

கடந்த இரண்டு தினங்களாகப் பெய்து வரும் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் வாகனங்கள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (ஒ-207)


## வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர விரும்புவர்களுக்கான இலவச நேர்முகத் தேர்வு

**Express International Studies and Consultants**

ஆகிய நாம் இதுவரை ஆயிரக்கணக்கான மாணவர்களை வெளிநாடுகளில் உயர் கல்வியினைக் கற்று பட்டதாரியாவதற்கு (Degree) அனுப்பியுள்ளோம். அந்த வகையில் யாழ் மாணவர்களின் நன்மை கருதி மாணவர்களின் எதிர்காலக் கல்வி சம்பந்தமான அறிவுரைகளுக்கும், ஆலோசனைகளுக்காகவும் இவ் நேர்முகத் தேர்வை நடாத்துகின்றோம்.

இத் தேர்விலே எதிர்வரும் **December – January Intake** இற்கான அனுமதிகளைப் பெற விரும்பும் மாணவர்களும், A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பயனடையமுடியும். இந்நேர்முகத்தேர்விலே பங்குபற்றுவதன் மூலமாக மாணவர்கள் தங்கள் தகுதியினை, சுயமதிப்பீடு செய்து. உயர் கற்கைநெறிகள் சமபந்தமான பூரண அறிவை அடைவார்கள்.

மாணவர்களுக்கான ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் துறைசார் அனுபவமுள்ள பிரபல சட்டத்தரணிகளினால் வழங்கப்பட உள்ளது

திகதி : 28.08.2010 , 29.08.2010
நேரம் : 10.00 - 04.00 வரை
இடம் : British College of Higher Studies (Cosy Hotel இற்கு மேலே)
*No:15, 2/1, Sirampiyady Lane, Off Stanley Road, Jaffna.*

தொலைபேசி.இல:
0777222422, 071429935,

குறிப்பு: நேர்முகத்தேர்விற்கு வருபவர்கள் தமது சுயவிவரக்கோவை மற்றும் கல்விச்சான்றிதழ்களைக் கொண்டு வருவது வரவேற்கத்தக்கது.


## டெங்கு பரம்பல் குறித்து பல்கலைக்கழக மாணவர் ஆய்வு

சண்டிலிப்பாய், ஓக.26

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்கு நோயின் பரம்பல் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர். இவர்கள் வீடு வீடாகச் சென்று வீட்டுச் சுற்றாடலைப் பார்வையிட்டு, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாவது குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

குடாநாட்டில் வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து, இது பற்றி ஆய்வு செய்வதற்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 4 ஆம் ஆண்டு மாணவர்கள் இனம் காணப்பட்ட கிராமங்களுக்குச் சென்று வீட்டுச் சுற்றாடலைப் பார்வையிடுவதுடன் நுளம்புகள் உற்பத்தியாவதற்குரிய தடயப் பொருள்கள் இருப்பது பற்றிய விவரங்களையும் சேகரித்து வருகின்றார்கள். (ஒ-115)

## கிருஷ்ண ஜெயந்தி விழா

தென்மராட்சி, ஓக.26

மட்டுவில் கிழக்கு புதரன்கேணி வளவு மாகாளி அம்மன் ஆலயத்தில் கிருஸ்ண ஜெயந்தி விழா எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். (ஒ-207)

## நெடுந்தீவுக்குப் புதிய டாக்டர் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.26

நெடுந்தீவுப் பிரதேச வைத்திய சாலைக்குப் பொறுப்பு வைத்திய அதிகாரியாகப் பதிவு வைத்திய உத்தியோகத்தர் திருமதி நன்னித்தம்பி மகேஸ்வரி புதிதாக கடந்த 19 ஆம் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆளுநர் அனுமதியுடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தொடர்ந்து ஒரு வருட காலம் வைத்தியசாலையில் தங்கியிருந்து தனது வைத்திய சேவையை வழங்குவார்.

வைத்திய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இதுவரை காலமும் மாதாந்தக் கடமைச்சுற்று அடிப்படையில் நியமிக்கப்பட்டு நெடுந்தீவில் வைத்திய சேவை நடத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)


### COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல.15 சிறாம்பியடி வீதி, (off Stanly Rd) யாழ்ப்பாணம்.
021 222 8250,0777222422,0774907444 Cosy Hotel 2nd floor

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு

**அதிரடிக் கட்டணக் கழிவு**

10/09/2010 க்கு முன் பதிவுகளுக்கு முந்துங்கள். பயன்பெறுங்கள்.

| | | செலுத்தவேண்டிய கட்டணம். |
|---|---|---|
| Dip. in computer science. | 4 மாதம் | 1000/= |
| Dip. in web page Designing. | 4 மாதம் | 1000/= |
| Dip. in Graphic Designing. | 4 மாதம் | 1000/= |
| Dip. in Desk top publishing. | 4 மாதம் | 1000/= |
| Dip. in Hardware Engineering. | 3 மாதம் | 1000/= |
| Dip. in Auto CAD. | 3 மாதம் | 1000/= |
| Dip. in MicroSoft Office. | 3 மாதம் | 1000/= |
| Dip. in Acc.Package.(MYOB,Accpac,Q Book,Tally) | 3 மாதம் | 1000/= |
| Honours Dip. in computer science. | 5 மாதம் | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing. 1000/=
Diploma in Multimedia. 1000/=

Batch:- 28/08/2010
Batch:- 29/08/2010
Batch:- 30/08/2010
Batch:- 01/09/2010

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
தொழிலில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புகள் நடாத்தப்படும்.



**TV விற்பனைக்கு**
புத்தம் புதிய LCD Sony TV 32" (BRAVIA BX3) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6095266, 077 1551517



**வகுப்பு**
German, Swiss மொழி வகுப்புகள் A/L Exam இற்கு ஏற்றவாறு CD மற்றும் புத்தக விளக்கத்துடன் நடைபெறுகின்றன. அடுத்த பிரிவு September மாதம் ஆரம்பமாகின்றது.
German Institute, 10, Palaly Rd, Jaffna.
T.P.: 0771604823. Kajenthini



**விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள Honda CD 200 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**077 0426285**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிப்பணம் செலுத்தாததால் கட்டுடைப் பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகம் திடீர் நிறுத்தம்

சண்டிலிப்பாய், ஓக.26

குடிதண்ணீருக்கான வரிப்பணம் செலுத்தாததினால் கட்டுடைப் பகுதி வாழ் மக்களுக்கு குழாய் மூலம் வழங்கப்பட்டு வந்த விநியோகம் திடீரென் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் நூறுக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் குடிதண்ணீரைத் தேடி அலைந்து திரிவதுடன் வெகுதூரம் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் பரிதாப நிலையை உணர்ந்த யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் கட்டுடைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து குடிதண்ணீரைப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டது. கட்டுடைச் சந்தி உட்படக் குறிப்பிட்ட சில இடங்களில் தொட்டிகளை அமைத்து, மேற்படி ஆலயக் கிணற்றிலிருந்து குழாய் மூலம் நீரை வழங்கி வந்தது. இதனால் இப்பகுதி மக்களின் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

பல மாதங்களுக்குப் பின் ஆலயக் கிணற்று நீர் சவர் நீராக மாறியதால் இப்பகுதி மக்களுக்கு மீண்டும் குடிதண்ணீருக்கு அலைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்பு சபையினால் சுன்னாகத்தில் இருந்து கந்தரோடைவரை குழாய் மூலம் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் கட்டுடைச் சந்தி வரை விஸ்தரிக்கப்பட்டது.

கட்டுடைச் சந்தியில் உள்ள நீர்த்தொட்டி வரை விஸ்தரிக்கப்பட்ட இத்திட்டத்தைக் கடந்த பொதுத் தேர்தலின் போது டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார். குடிதண்ணீருக்காக அலைந்து திரிந்த கட்டுடைப் பகுதி மக்கள் அன்று தொடக்கம் தொட்டியில் இருந்து நீரைப் பெற்று வந்தனர். இந்த நீர் விநியோகம் பின்னர் நவாலிவரை விஸ்தரிக்கப்பட்டது.

தற்போது குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால், மீண்டும் அம்மக்கள் அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-115)

## கூட்டம்

கொழும்புத்துறை,ஓக. 26

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கால் நடை வளர்ப்போர் சங்க விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் நா.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத் தில் சங்க அங்கத்தவர்கள் அனைவரை யும் கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

(201-135)

## பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.26

சவால்களை எதிர்கொள்ளும் இலங்கை பல்கலைக்கழகக் கல்வி எனும் கருப்பொருளிலான கருத்தரங்கொன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 'ஏ' பிரிவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் மேற்படி தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 'ஏ' பிரிவின் செயலாளர் கலாநிதி குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி கேட்டுள்ளார். (த-16)

## சுவாமியார் வீதி வடிகால்களை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பணம், ஓக.26

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் தூர்ந்து போயுள்ள வடிகால்களைப் புனரமைத்துத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐயர் கடையில் இருந்து குறிப்பிட்ட தூரம் வரை உள்ள இந்த வடிகால்கள் சேதமடைந்து தூர்ந்து போயுள்ளன.

மழை காலங்களில் இப்பகுதியில் தேங்கும் வெள்ளம் இந்த வடிகால் ஊடாக வடிந்தோடுவது வழக்கம்.

இந்த வடிகால்கள் தூர்ந்து போயுள்ளமையால் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வடிகால்களைப் புனரமைத்து வெள்ளம் தேங்கி நிற்பதைத் தவிர்க்க உதவுமாறு இப்பகுதி மக்கள் மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(த-26)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கான இந்த மாத நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.26

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து பின்னர் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான ஓகஸ்ட் மாதத்துக்கான இலவச உலர் உணவுப் பொருள்கள் இந்த வாரங்களில் வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரண விநியோகத்துக்கான வழங்கல் கட்டளைகளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்று விநியோகத்தை ஆரம்பிக்குமாறு யாழ்.செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை கடந்த 11.08.2006 இன் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச உலருணவு விநியோகத்தையும் இந்த வாரத்தில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த இரு நிவராண விநியோகத்துக்கும் அரிசி, கோதுமைமா, சீனி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவை விநியோகிக்கப்படவுள்ளன. (த-26)

## நெடுந்தீவுக் கூட்டுறவுச் சங்கத்துக்கு பொருள்களை எடுத்துச் செல்வதில் சிரமம்

### படகு பழுதடைந்தமையே காரணம்

யாழ்ப்பாணம்,ஓக.26

நெடுந்தீவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கடல் மார்க்கமாகப் பொருள்களை எடுத்துச் செல்லும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சங்க்த்தின் 'உதயதாரகை' படகைத் திருத்துவதற்கான முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் சங்கத்துக்குப் பொருள்களை எடுத்துச் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது தனியார் படகுகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு மேற்படி சங்கத்திற்குப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி சங்கத்தின் 'உதயதாரகை' படகு கடந்த மாதத்தில்இருந்து பழுதடைந்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-26)




## காலநிலை இன்று சீராகும்

யாழ்ப்பாணம்,ஓக26

யாழ்.குடாநாட்டில் கடந்த சிலநாள்களாக நிலவிய காலநிலை இன்று வியாழக்கிழமை முதல் வழமைக்குத் திரும்பும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு,

எமது பிரதேசத்தில் கடந்த சிலநாள்களாக சீரற்ற காலநிலை நிலவி வந்தது. இதன் காரணமாக வடமராட்சிப் பகுதியிலேயே அதி கூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதனால் நேற்று மட்டும் 21.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் வெப்பநிலை ஆகக் கூடியது 30.4 பாகை செல்சியஸாகவும் ஆகக் குறைந்த வெப்பநிலை 23.7பாகை செல்சியஸாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது - என்றார். (த-322)

## துர்க்கை அம்மன் ஆலயத்தில் பொலிஸ் சேவைக்குப் பாராட்டு

வலி.வடக்கு,ஓக.26

வரலாற்றுப் புகழ்மிக்க தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்தில் கடமையில் ஈடுபட்ட தெல்லிப்பழை பொலிஸாரின் சேவை பொதுமக்களினால் பாராட்டப்பட்டுள்ளது.

கடந்த பத்து நாள்களாக இடம்பெற்ற ஆலய உற்சவத்தின் போது தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நாளாந்தம் 50க்கும் அதிகமான பொலிஸார் ஆலய சூழலிலும், சுற்றாடல் பகுதிகளிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அடியவர்கள் அதிகம் கூடும் தேர்த்திருவிழா, தீர்த்தோற்சவத் தினங்களில் திருட்டுக்கள் இடம்பெறாமல் பொலிஸார் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இதேபோன்று பொதுமக்களுக்கு இடைஞ்சல்களை உருவாக்குபவர்களின் செயல்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காகத் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய நிர்வாகத்தினர், பொது மக்கள், பொது அமைப்புக்கள் பொலிஸாரின் சேவையைப் பாராட்டியுள்ளனர்.

(த-86)

## குடிதண்ணீர்,போக்குவரத்து பிரச்சினைகளால் நெடுந்தீவு வாழ் மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,ஓக26

நெடுந்தீவுப் பிரதேசத்தில் குடிதண்ணீர் மற்றும் உள்ளூர் போக்குவரத்துத்தடை ஆகிய பிரச்சினைகள் காரணமாக ஊர் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவின் ஒரு பகுதியில் உள்ள நன்னீர் கிணற்றில் இருந்தே இதுவரை நாளும் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

இந்த குடிதண்ணீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்புக்காரணமாக கடந்த 5 நாள்களாக விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூருக்குள் சேவையில் ஈடுபட்டுவரும் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் பழுதடைந்துள்ளது. இதனால் மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குடிதண்ணீர் மற்றும் போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதும் இதுவரை எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்மக்களுக்கு படகுப் போக்குவரத்துப் பிரச்சினையும் நீண்ட காலமாக இருந்து வருவதும் சுட்டிக்காட்டபட்டது.

(ஒ-எ-10)






ஆசிய அபிவிருத்தி வங்கியின் 'கார்ப்' திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மின் விநியோகம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கல்வயல் ஆயிலடிப்பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், இலங்கை மின்சார சபை வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் [illegible] அபிவிருத்தி வங்கி உப தலைவர் சியாவோ யூ சாவோ ஆகியோர் உரையாற்றுவதை இறுதி இருபடங்களிலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நிலங்களில் அந்நியரைத் திட்டமிட்டுக் குடியேற்றுவதற்கு எதிராக ஆரம்பம் முதல் ஆணித்தரமாகக் குரல் கொடுத்தவர் அமிர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கத்தின் 83 ஆவது பிறந்ததினம் இன்றாகும்.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆரின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு அந்த வேளையில் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமாகச் செயற்பட்ட திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலை குறித்து ஆற்றிய உரையின் சில முக்கிய பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.

### பாரதூரமான சட்டம்

இது மக்களின் ஜனநாயக உரிமையைக் கட்டுப்படுத்தும் மிகப் பாரதூரமான ஒரு சட்டம். மக்களின் இறைமையை எந்தவொரு வகையிலும் கட்டுப்படுத்தக் கூடாது என்றால் மக்கள் தங்கள் வாக்கினால் அரசியலமைப்பை ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் திருத்துவதற்கு உரிமையளிக்க, அரசியற் கட்சிகள் அந்த உரிமையைக் கேட்க ஏன் அரசியற் கட்சிகளுக்குச் சட்ட பூர்வமான தடை இருக்க வேண்டுமென் பதை நாம் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. ஆனபடியால் இதன் பலா பலன் மிகவும் பாரதூரமானதாக இருக்கும். இப்பொழுது கொண்டுவரப்போகும் தேர்தல் முறை, எந்தவொரு கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெறாமல் தடுத்துவிடும் என்பது எமக்குத் தெரியும். எந்தவொரு கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறாமல் தடுத்து விட்டு, அப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றாலும் எந்தவொரு கட்சியும் இந்த அரசியல் அமைப்பை, 12 ஆவது அத்தியாயத்தின்படி திருத்த இடமில்லாமல் செய்துவிட்டு 12 ஆவது அத்தியாயத்துக்கு வெளியே போய் அரசியலமைப்பைப் திருத்த வேண்டுமென்று கேட்பதே, கேட்க வேண்டுமென்று கூறுவதே சட்டவிரோதம். அப்படிக் கூறுபவரை அது பத்தாண்டு சிறைவாசத்துக்கு உள்ளாக்கும். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் அப்படிக் கூறுவது அவர் பதவியை இழக்கச் செய்யும் குற்றம், ஓர் அரசியற் கட்சி கூறினால் அது அந்தக் கட்சியினுடைய வேட்பாளர் பட்டியலையே இரத்துச் செய்யக்கூடிய குற்றம் என்று விதித்து வைத்து இந்த நாட்டிலே, வருங் காலத்திலே மிகவும் பாரதூரமான அரசியல்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விதியாக அது ஆக்கிவைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் கூறிவைக்க விரும்புகின்றேன். எங்கே கட்டு பலமாக இருக்கிறதோ- எங்கே ஜனநாயக ரீதியாகக் கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பு மறுக்கப் பட்டு இருக்கிறதோ-அங்கே வெடிப்பு ஏற்படுகிறது; உடைப்பு ஏற்படுகிறது; அங்கே பிரளயம் ஏற்படுகிறது; அங்கே புரட்சி ஏற்படுகிறது. அந்த விதமான ஒரு சூழ்நிலைக்கு உட்படுத்துகின்ற ஒரு விதியாக, தெரிவுக் குழுவினால் ஆராயப் படாத ஒரு விதியாக இது கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது

இவ்விதிகளை ஏட்டிலே போட்டு விட்டால் மட்டும் போதும் என்று யாரும் நினைத்துவிட முடியாது, எமது அனுபவம் அதற்கு மாறாக இருக்கிறது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்று தமிழிலே ஒரு பழமொழி இருக்கிறது. வெறுமனே சட்டங்களை ஆக்கினால் மாத்திரம் மக்களின் அபிலாசைகளைத் திருப்பதிப்படுத்த முடியாது.

சட்டங்கள் சரியான முறையில் அமுல்நடத்தப்பட வேண்டும். நான் ஒன்றை இச்சந்தர்ப்பத்திலே ஞாபகப் படுத்த விரும்புகிறேன். தமிழ் மொழி உபயோகம் பற்றி அரசியல் அமைப்பு விதிகள் அமுல்நடத்தப்படுவதற்கு ஏற்ற துணைவிதிகள் எதுவும் இந்த அரசியல் அமைப்பில் இல்லை. உதாரணமாக உத்தியோக மொழி, நிர்வாக மொழி பற்றிய சட்டத்தை நடத்த வேண்டியவர்கள் உத்தியோகத்தர்கள். தமிழில் கருமம் ஆற்றும் உரிமையுண்டு என்று சட்டத்தில் எழுதிவைத்துவிட்டால் போதாது, காரியாலயத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும். காரியாலய ஊழியர்களுக்குத் தமிழ் மொழி தெரிந்தால் தான் அதை அவர்களால் நிறைவேற்ற முடியும். ஆனால் அரசியலமைப்பிலே எந்த உத்தியோக்தரையும் தமிழ் மொழியைக் கற்குமாறு கேட்பதற்கு எந்தவிதமான விதியும் இல்லை. அதற்கு மாறாக தமிழ் மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் உத்தியோக மொழியாகிய சிங்களத்தைக் கற்க வற்புறுத்தி அரசியலமைப்பிலே விதி இடம்பெற்றிருக்கிறது.

தமிழ் மொழி பற்றி சட்ட விதிகளை அமுலாக்க எந்த உத்தியோகத்தரும் தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்று கேட்க விதியில்லாதவிடத்து யார் இந்தச் சட்டத்தை அமுல்நடத்தப் போகிறார்கள்? உண்மையில் நடைமுறையில் இது உயிரற்ற ஒரு சட்டமாக இருக்கும் ஆபத்து உண்டு என்பதைக் கடந்த கால அனுபவத்தைக் கொண்டு எமது மக்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

### சமத்துவம் இந்நாட்டில் இல்லை

பிரதமர் சமத்துவம், நீதி ஆகியவற்றின் அடிப்படையிலேதான் தாம் இயங்குவதாகக் குறிப்பிட்டார். ஆனால் சமத்துவம் இடம்பெறவில்லை என்பதைக் காட்டத் தான் நான் இவற்றைக் குறிப்பிட நேரிட்டது. இந்நாட்டிலே உள்ள பல்வேறு மதங்களுக்கு இடையில் சமத்துவம் இல்லை; இந்நாட்டிலே உள்ள பல்வேறு மொழிவாரி இனங்களுக்கு இடையில் சமத்துவம் இல்லை என்பதைக் காட்டத்தான் நான் இவற்றை எடுத்துக்கூறினேன்.

ஆளும் கட்சி தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகள் சிலவற்றை இனங்கண்டு குறிப்பிட்டிருந்தது. அவற்றில் ஒன்று, முக்கியமாகக் குடியேற்றம் பற்றியது. பாரம்பரியமாக ஒரு மொழியைப் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற ஒரு பிரதேசத்திலே வேற்று மொழி மக்களை திட்டமிட்டுக் குடியேற்றி அங்கே வாழ்கின்ற மக்களைச் சிறுபான்மையோராக்கி அவர்களுக்கு அரசியல் உரிமை, வேறு பாதுகாப்பு இல்லாத ஒருநிலை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் 1956ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் நாங்கள் முன்வைத்தோம். இதையொட்டிக் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா அவர்களோடு எங்கள் தலைவர் செய்த ஒப்பந்தத்திலே சில தெளிவான முடிவுகளுக்கு வந்தோம். 1957 ஆம் ஆண்டு யூலை மாதம் 20ஆம் திகதி கையெழுத்தான அந்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



அதன்பின் அதையொட்டி, ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியின் காரணமாக அதிலே சில மாற்றங்கள் செய்த நேரத்தில் காலஞ் சென்ற பண்டாரநாயக்கா 16.08.1957 இல் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதிலே அவர் எந்த நீதியான அரசாங்கமும் இந்த விஷயத்தில் கைக்கொள்ள வேண்டிய ஒரு அடிப்டைக் கொள்கையைத் தெளிவுறுத்தினார்.

இது 16.08.1957 இல் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா அவர்கள் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கை. ஐ.தே.கட்சித் தலைவர்களான டட்லி சேன நாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1965 ஆம் ஆண்டு திருவாளர் செல்வநாயகத்தோடு எழுதிய ஒப்பந்தத்தில் இதை ஏற்றுக்கொண்டனர்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்தலும்



**தோற்றம்: 13.05.1963 மறைவு: 28.07.2010**

எங்களின் அன்புத் தெய்வமாக விளங்கி உற்றார், பெற்றார், உறவினர்கள், ஊரார்கள் யாவர்க்கும் உற்றதுணையாகத் திகழ்ந்து அல்லும் பகலுமாக அடுத்தவர்கள் நலனுக்காகவே வாழ்ந்து அனைத்து மக்களின் இதயத்திலும் குடிகொண்டு எமையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்ட

## உயர்திரு.அமரர் கணேசலிங்கம் ரமேஷ்

அவர்களின் மரணச்செய்தி கேட்கப் பெற்றதும் உடன் நேரில் வந்து துயரத்தில் பங்குகொண்ட அனைத்து அன்பர்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் தந்திகள், கடிதங்கள் ஊடாகவும் தொடர்புகொண்டு தங்கள் துன்பத்தினைப் பகிர்ந்துகொண்ட யாவருக்கும் பல மாவட்டங்களிலும் இருந்து வருகை தந்து இரங்கல் செய்திகள் வழங்கி தோளோடு தோள் நின்று எல்லா வகையிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்பர்கள், மதகுருமார்கள், அமைச்சர்கள், அமைச்சின் அலுவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர், முன்னைநாள் ஆளுநர், செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அலுவலர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், அவர்தம் அலுவலர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் மேலும் காவல்துறை மா அதிபர், பிரதிமா அதிபர், சிரேஷ்ட அத்தியட்சகர் மற்றும் காவல்துறை அதிகாரிகள், மக்கள் வங்கி அதிகாரிகள், 'சிறா' நிறுவனத்தின் அதிகாரிகள், அலுவலர்கள், விளையாட்டுக் கழகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர் யாவர்க்கும் மற்றும் திருகோணமலை பொது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.75, இராஜவரோதயம் வீதி,
திருகோணமலை.

பிரிவால் வாடி நிற்கும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்திருவிழா கடந்த சில ஆண்டுகளின் பின்னர் அண்மையில் இடம் பெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இடிந்து அழிந்து முகப்பு மட்டும் எஞ்சிய நிலையில் உள்ள ஆலயத்தை முதல் படத்திலும், பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும், மாதாவின் திருச்சொரூபம் பவனியாக எடுத்து வரப்படுவதை மூன்றாவது படத்திலும், யாழ்.மறைமாவட்ட நிதிப்பரிபாலகர் அருட்திரு ஜே.பி.அன்ரனிதாஸ் உரை நிகழ்த்துவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: கர்ணன்)

# சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஒன்றை காரைநகருக்கெனத் தனியாக அமைக்க வேண்டும்

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

காரைநகர்,ஓக.26

காரைநகருக்கான தனியான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஒன்றை அமைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலஸ்ரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபொற்றுள்ளது.

காரைநகர் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுடன் இணைந்திருப்பதனால் தடுப்பு மருந்து விநியோகம் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இடர்பாடுகள் இருப்பதுடன் கடல் கடந்தே ஊர்காவற்றுறை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சென்று வரவேண்டி உள்ளது. இதனால் ஏற்படும் இடர்பாடுகளை நீக்குவதற்கும் இப்பகுதி மக்களுக்கு இலகுவாக சுகாதார சேவைகளை வழங்குவதற்கும் காரைநகருக்கு தனியான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அவசியம் என இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

காரைநகர் பிரதேசத்திற்கு முழுமையாக மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக கல்லந்தாழ்வு, மருதபுரம்,வேரப்பிட்டி, கொட்டப் புலம், ஊரி போன்ற கிராமங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. காரைநகரின் பிரதான வீதிகளுக்காவது வீதி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✱ காரைநகர் ஊரிக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

✱ பனை அபிவிருத்திச் சபையினால் 55 இலட்சம் ரூபா செலவில் காரைநகரில் அமைக்கப்பட்ட பல் தொகுப்பு நிலையம் தொடங்கப்பட்டு அரைகுறையாக உள்ளது. அதனை முழுமையாக்கி பல திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

✱ காரைநகரில் இருந்து ஆரம்பமாகும் பஸ் சேவையை அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பிப்பதனால் வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் அதிக நன்மை அடைவர்.

✱ காரைநகர் தற்போது ஊர்காவற் றுறை கோட்டக் கல்வி அலுவலகத்துடனேயே இணைந்துள்ளது. அதனை தனியான கோட்டக் கல்வி அலுவலகமாக அமைக்க வேண்டும்.

✱ காரைநகர் பாடசாலைகளில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அரசினால் ஒரு பாடசாலைக்கு 25 ரூபாவே குடிதண்ணீருக்கு வழங்கப்படுகின்றது. இதனால் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

✱ காரைநகர் கோவளப் பகுதியில் பழமையான வெளிச்ச வீடு ஒன்று யாரும் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது. அதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (த-250)

# அழிக்கப்படும் பனை மரங்கள்

கோப்பாய்,ஓக.26

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் பனை மரங்கள் அழிக்கப்படும் வீதம் உயர்வடைந்து செல்வதாகப் பிரதேச ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது பனை மரங்களுக்கு நல்ல விலை கிடைப்பதாகவும் அதனைத் தொடர்ந்து வெட்டவெளியாகவுள்ள பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படக்கூடியதாக நிலப்பகுதி பண்படுத்தப்படுவதாகப் பிரதேச பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (த-72)

# பாடசாலை மாணவர்களுக்கான 3 ஆம் தவணை உணவு விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்றிட்டத்தின்கீழ் 2010 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைக்கான உணவு விநியோகத்தினை மேற்கொள்ளும் பொருட்டு உரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு களஞ்சியங்களில் இருந்து உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழங்கற்கட்டளைகள் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவினால் கடந்த 23 ஆம் திகதியில் இருந்து வழங்கப்படுகின்றன.

எனவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கற்கட்டளைகளைப் பெற்று 31 ஆம் திகதிக்குமுன் உணவுப் பொருள்களை உரிய பாடசாலைகளுக்கு விநியோகித்து முடிக்குமாறு மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் பாடசாலை அதிபர்கள் உரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உணவுப் பொருள் விநியோகத்தை துரிதப்படுத்தி மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கலைச் சீரான முறையில் மேற்கொள்ளுமாறும் மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதிக்கு முன்னர் உணவுப் பொருள்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவின் தொலைபேசி இலக்கம் (0212229716)மூலம் தொடர்பு கொள்ளுமாறும், மேலும் பாடசாலை அதிபர்கள் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (த-26)

## ரம்ழான் சிந்தனை

ரம்ழான் மாதம் வருவதற்கு முன்பே நபி (ஸல்) அவர்கள் நபித் தோழர்களுக்கு இந்த மாதத்தின் சிறப்பையும் மகத்துவத்தையும் எடுத்து ரைப்பார்கள், அதன் அருள் வளங்களின் செல்வக் குவியல்களில் தத்தமது பங்குகளை முழுமையாக ஈட்டிக் கொள்வதற்காக கடுமையாக உழைக்குமாறு அறிவுறுத்துவார்கள்.

எம்.ஏ.காதர்

# நாவற்குழி கிழக்குப் பகுதியில் குடிதண்ணீருக்கு அலையும் மக்கள்

கைதடி,ஓக.26

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழுகின்ற மக்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களையும் துன்பங்களையும் அனுபவிப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பிரதேசத்தில் உள்ள கிணறுகள் யாவும் தற்பொழுது உவர் நீராக மாறி வருவதனால் குடிதண்ணீருக்காக இப்பிரதேச மக்கள் நீண்டதூரம் சென்று அங்குள்ள வயல் வெளிகளில் காணப்படும் நன்னீர்க் கிணறுகளில் குடிதண்ணீரைப் பெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

மாரி காலங்களில் இக்கிணறுகள் அமைந்திருக்கும் இவ்வயல் வெளிகள் செய்கை பண்ணப்படுவதனால் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுச் செல்ல விவசாயிகள் அனுமதிப்பதில்லை எனவும் இதனால் தாம் போத்தல்களில் அடைத்து கடைகளில் விற்பனை செய்யப்படும் நீரையே விலை கொடுத்து வாங்கிப் பாவிப்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே, இவ்விடயத்தில் அரச அதிகாரிகள் உடனடிக் கவனமெடுத்து இம் மக்களுக்கான குடிதண்ணீரை நிலத்தடிக் குழாய் மூலமோ அல்லது பவுஸர் மூலமோ பெற்றுக்கொடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கேரதீவு- சங்குப்பிட்டிப்பாதை மக்களின் உபயோகத்திற்கு விடப்படும் பட்சத்தில் இப்பிரதேசத்தின் குடிதண்ணீர்த் தேவை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாகவும், இதனால் குழாய் நீர்விநியோகமே இப்பிரதேசத்திற்கு சாலச்சிறந்தது எனவும் பலராலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரச அதிபருக்கான வரவேற்பு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,ஓக.26

வலிகாமம் தெற்கு பொதுஅமைப்புகளும், பொதுமக்களும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட புதிய அரச அதிபருக்கான வரவேற்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (த-9)




# காலநிலை மாற்றம் தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக.26

தேசிய கல்வி நிறுவனத்தினால் காலநிலை மாற்றம் தொடர்பான செயலமர்வொன்று நாளை மறுதினம் சனிக்கிழமையும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தப்படவுள்ளதாகத் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர்கள், பலாலி, கோப்பாய், ஆசிரிய கலாசாலை கல்வியியலாளர்கள், யாழ்.மாவட்ட வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள், முதன்மை ஆசிரியர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-16)

# சுயதொழில் கொடுப்பனவு காசோலைகள் வந்தன

கைதடி,ஓக.26

மாற்று ஆற்றலுடைய மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நான்கு குடும்பங்களுக்கு சுய தொழில் மேற்கொள்வதற்கான மூன்றாம் கட்டக் கொடுப்பனவுக்கான காசோலைகள் மேற்படி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சமூக சேவைத்திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பு.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவுக்காக நா.லலிக்குமார் (கட்டுடை, மானிப்பாய்), க.இராஜசுரேஸ் (மாகியப்பிட்டி,சண்டிலிப்பாய்), த.சறோஜினிதேவி (கல்வளை வீதி, சண்டிலிப்பாய்), பொ.லீதாமலர் (சண்டிலிப்பாய் கிழக்கு), ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்கள் எனவும், இவர்களுக்கு மூன்றாம் கட்டக் கொடுப்பனவாக தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-288)

# நல்லூர் ஆலயத்தின் புனிதத் தன்மை காக்கப்படுமோ?

உலகில் வாழும் சகல மக்களுக்கும் அவரவர்க்கென மதம், மொழி, நம்பிக்கை, கலாசாரம் என்பனவெல்லாம் இருப்பது போன்று உலகின் மூத்த இனங்களுள் ஒன்றாகத் திகழும் தமிழினத்துக்கும் இவையெல்லாம் உரித்துடையனவாகின்றன. மொழியால் தமிழ் பேசும் இனமாக தமிழ் இனம் தவிர இலங்கை, இந்தியாவில் முஸ்லிம்களும் உள்ளன்ர். இவர்கள் மொழியால் ஒன்றிய போதிலும் மதத்தால் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். தமிழினம் பின்பற்றும் மதங்களில் 'இந்து மதமே' பிரதானமானதாகும். எனினும் கால சூழல்களின் தாக்கத்தால் தமிழர்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றத் தொடங்கினர். இவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவத்தின் பல்வேறு பிரிவுகளைப் பின்பற்றுகின்றனர்.

''எல்லா நதிகளும் மலையின் வெவ்வேறு இடங்களில் இருந்து ஆரம்பமானாலும் அவை போய்ச் சேருமிடம் கடலாகக் காணப்படுகின்றது. அதேபோல் வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு வழிபாட்டு முறைகளைப் பின்பற்றிய போதும் அவை எல்லாம் மனிதனை முத்தி நிலைக்கே இட்டுச் செல்கின்றன என்பது ஆன்றோர் வாக்கு. நதிகள் கடலில் சங்கமமாகும் முன் தத்தமது பாதையிலேயே பயணிக்கின்றன. எந்த நதியையும் மற்றுமொரு நதியுடன் குறுக்கிடுவது இல்லை. தடைசெய்வதும் இல்லை. ஆனால் மனிதனின் மதங்களும் அவற்றைப் பின்பற்றுவோரும் அவ்வாறு இல்லாதிருப்பது வேதனையானது. அதற்காக ஒரு மதத்தினரை மற்றைய மதத்தினர் அணுகுதலோ கலந்து உள்மகிழ்தலோ தவறானது என்பது கருத்தல்ல. ஒரு மதத்தவரை மற்றைய மதத்தவர் அணுகுகின்ற போது, அவர்களது சம்பிரதாயங்கள், வணக்க முறைகள் போன்ற கலாசாரக் கூறுகளோடு இணைகின்ற போது அவர்களைப் போலவே தாமும் ஆகிவிடுதலே நாகரிகமானது.



தமிழினம் இந்தியாவையும் இலங்கையை யும் தம் தாயகமாகக் கொண்டு உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றது. இன்று உலகில் எழுத்து வழக்கோடு பேச்சு வழக்கும் கொண்ட மொழிகளிலே செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற ஆறு மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று என்பதில் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் பெருமை கொள்கின்றனர். இத்தகைய சிறப்பான தமிழ் மொழியைப் பேசும் இனத்துக்கு இருக்கக்கூடிய கலாசாரக் கூறுகளில் மதம் பிரதான இடத்தை வகிக்கின்றது. இம் மதத்தோடு இணைந்தாற்போல் கட்டடக்கலை, சிற்பக்கலை, உடைகள், நம்பிக்கைகள், ஒழுக்க நடைமுறைகள் போன்றன காணப்படுகின்றன.

இந்துக்களின் ஆலயக் கட்டட அமைப்பு உலக மக்களை வியப்பிலும் திகைப்பிலும் திளைப்பிலும் ஆழ்த்துகின்றன. இதனால் இந்தியாவில் பல ஆலயங்களுக்கும் சுற்றுலாப் பயணிகள் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளுகின்றனர். ஆனாலும் தமது வணக்கஸ்தலங்களின், தனித்துவம், புனிதத் தன்மை கெட்டுவிடாமல் அக்கோயில்களின் நிர்வாகத்தினர் பார்த்துக் கொள்கின்றனர்.

அதேபோல் யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசாமி ஆலயமும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற ஒரு இடமாகவே காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் என்றதும் தென்னிலங்கை, மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு நினைவில் வரும் விடயங்களில் ஒன்று நல்லூரில் அமைந்துள்ள முருகன் ஆலயம், நல்லூர்க் கந்தசாமி கோயில் இவ்வாறு சிறப்பான இடத்தைப் பிடிப்பதற்குப் பல்வேறு காரணிகள் துணை செய்கின்றன. யாழ்ப்பாணம் பல இராசதானிகளாகப் பிரிந்து கிடந்தபோது சிறப்பானதொரு இராசதானியாக நல்லூர் விளங்கியது. செகராசசேகரன், பரராசசேகரன் என்ற பெயர்களில் சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணம் நல்லூரை ஆட்சி பீடமாக வைத்து அரசாட்சி புரிந்தார்கள் என ஈழத்து இலக்கிய வரலாறு கூறும். அத்தகைய மன்னர்களின் இராசதானிகளின் எஞ்சிய அம்சங்களை நல்லூரில் காண முடிகின்றது. இவற்றைப் பார்வையிட யாழ்ப்பாணத்து நல்லூருக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

செல்வி:
**உமா தனபாலசிங்கம்**

அடுத்து நல்லூர் ஆலயம் அமைந்துள்ள இட அமைவு, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான சாலையில் யாழ்.நகரை அண்டியதாக இக் கோயில் காணப்படுகின்றது. இதனால் இவ்வாலயத்தைத் தரிசிக்க வருவது மிக இலகுவானது. விசாலமான மண்டப வசதிகளையும் அழகிய சுற்றுப்பிரகாரங்களையும் கொண்ட இவ்வாலயத்துக்கு வருகை தருவதற்கு நான்கு திசைகளிலும் சாலைகள் காணப்படுகின்றன.

யாழ்.மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்டுள்ளதால் சகல வெளி வசதிகளையும் சுற்றுப் பிரகாரத் தூய்மையையும் மாநகர சபையே கவனிக்கின்றது. விழாக்காலம் என்றாலே நல்லூர் கோயில் மட்டுமன்றிச் சுற்றுப் பிரகாரமும் களை கட்டத் தொடங்கி விடும். சன நெரிசலையும், கடைத் தொகுதியையும் பார்க்கும் போதெல்லாம் நல்லூர்க் கோயில் திருவிழா போல காணப்படுகின்றது என உவமை கூறுமளவுக்கு நல்லூர்க் கோயில் திருவிழா அமைந்து காணப்படும். சன வெள்ளம், சந்தடி, சத்தம், வியாபாரம் ஆரவாரம் சமய நிகழ்ச்சிகள் எனப் பலதும் இக்காலத்தில் அரங்கேறும். இக் காலத்தில் காவற்றுறையினரும் தம் பணி செய்ய விழாக்காலப் பணிமனை அமைப்பது வழமை.

இவ்வாலயத்தின் பிறிதொரு சிறப்பாகக் கருதத்தக்கது நேரந் தவறாமை ஆகும். ஆறுகாலப் பூசைகளும் இடம்பெறும் இக்கோயிலில் ஒவ்வொரு காலப் பூசையும் உரிய நேரத்தில் ஒரு நிமிடம் கூடப் பிசகாமல் இடம்பெறுவது பாரம்பரியமாகப் பேணப்படும் ஒரு நடைமுறை.

அது மட்டுமன்றி இவ்வாலயத்தில் காணப்படும் மற்றுமோர் தனிச்சிறம்சமாகக் கருதத்தக்கது இங்கு அர்ச்சனைக்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டு ஆகும். ஒரு ரூபா நாணயம் புழக்கத்திலிருந்து விடைபெற அனுமதி கோரி மனுப் போட்டுள்ள இக் காலத்திலும் கூட ஒரு ரூபா அர்ச்சனைச் சீட்டை வழங்கும் ஆலயமாக இது விளங்குகின்றது. ஏழைகளும் எம் பெருமானுக்குச் அர்ச்சனை செய்விக்க வசதியாக ஏற்பாடு செய்யப்பட்ட இந் நடைமுறை இடையில் எத்தனையோ இடர்பாடுகள் வந்த வேளையிலும் இடை நிறுத்தப்படாமலும், மாற்றத்திற்கு உள்ளாகாமலும் பேணிக் காக்கப்பட்டு வருவதை நாமெல்லாம் கண்டு இன்புற முடிகின்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## தெய்வீகப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்

அன்பு, பணிவு, பற்றின்மை, மனநிறைவு முதலிய தெய்வீகக் குணங்களை மனிதன் வெளிப்படுத்தியாக வேண்டும்; இல்லையேல் அவன் மிருகத்தைவிட மோசமானவனாகவும் பயங்கரமானவனாகவும் ஆகிவிடுவான். ராமன் அயோத்திக்குத் திரும்ப பயன்பட்ட விண்ஊர்தியில் தனக்கும் ஓர் இடம் வேண்டும் என்று நாயொன்று இராமனிடம் வேண்டியது. அந்த வேண்டுகோள் ராமனுக்கு வித்தியாசமானதாகப்பட்டது. எனவே அது எதற்காக அப்படிக் கேட்கிறது என்று வினவியபோது, மனிதன் புழு, பூச்சிகளை விடக் கேவலமானவனாக மாறிவிட்டான். மனிதனிடம் நன்றியுடன் பணியாற்றும் நாய்களை அவன் கொடுமைப்படுத்த ஆரம்பித்துவிட்டான் என்று கூறியது.

ஒருவரது செயல் மற்றவர்களுக்குத் துன்பம் தராத வகையில் அமையவேண்டும். தன்மீது அன்பு செலுத்தியவரிடம் எப்போதும் நன்றி உடையவராக இருத்தல் வேண்டும். ஜமதக்னி முனிவர் கார்த்தவீரியனுக்கு மிகச் சிறந்த உபசரிப்பு அளித்தார். ஆனால் அந்தக் கெட்டவனோ சிறப்பான உபசரிப்பிற்குக் காரணமாயிருந்த காமதேனுவையே கவர்ந்து சென்றுவிட்டான். பத்ரகிரி தன் அரசியின் சாவுத் துயரத்தைத் தாங்க முடியாமல் பல நாள்கள் மயான மண்ணில் அழுதுகொண்டும் புலம்பிக் கொண்டும் இருந்தான். ஆறுதலுக்கப்பாற்பட்ட அவனது சோக நிலையைக் கண்ட முனிவர் ஒருவர் கையில் மண்பானை ஒன்றுடன் அவன் முன் வந்து நின்றார். துயரில் தத்தளிக்கும் பத்ரகிரியின் முன் முனிவரின் பானை கையிலிருந்து நழுவி விழுந்துவிட்டது. தரை கெட்டியாக இருந்ததால் பானை உடைந்துவிட்டது. முனிவரின் அழுகையும் புலம்பலும் ஆறுதல் அளிக்க இயலாத நிலையை அடைந்தது. எவ்வளவு அழுதாலும் உடைந்துபோன பானை ஒன்று சேரப்போவது இல்லை என்று பத்ரகிரி அவருக்கு ஆறுதல் கூறினான். திடீரென்று தான் அபத்தமாக நடந்து கொண்டதை உணர்ந்து அழுகையை நிறுத்தினான். முனிவர் வந்ததன் நோக்கம் அவனை ஆறுதல் படுத்தவே.

நீங்கள் புட்டப் பர்த்திக்கு வருகிறீர்கள். சொற்பொழிவைக் கேட்கிறீர்கள், தலையை அசைக்கிறீர்கள். கைத்தட்டிப் பாராட்டுகிறீர்கள். ஆனால் வீட்டுக்குத் திரும்பும் போது, இந்த வாயிலைத் தாண்டியவுடன் எல்லாவற்றையும் காற்றில் கலக்கவிட்டு விடுகிறீர்கள் அல்லது இங்கு கற்றபோதனைகளைத் தவறாகப் பயன்படுத்தித் துன்பப்படுகிறீர்கள். வியாபாரி ஒருவர் உபந்யாசங்களைக் கேட்க வருவது வழக்கம். பசுக்கள் தமது தீவனங்களைத் தின்னும் போது துரத்தக்கூடாது என்று ஒரு சொற்பொழிவில் கேட்ட அவர், தன் கடையில் விற்பதற்கு வைத்திருந்த உணவுப் பொருள்களின் பெரும்பகுதியை ஒரு பசு தின்ன அனுமதித்துவிட்டார். அதன்பின்பு, சொற்பொழிவில் கூறப்படும் ஒவ்வொரு கருத்தையும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று அவரிடம் எடுத்துக் கூறப்பட்டது. இதற்குப் பிறகு அவர் தன் மகனிடம் என்ன அறிவுரை கூறினார் தெரியுமா? ''இங்கே பார். சொற்பொழிவு கேட்கும்போது உட்காருமிடத்தில் ஒரு துண்டைப் போடுகிறாய் இல்லையா? பேச்சு முடிந்தவுடன் எழுந்து விடுகிறாய்; அப்போது துணியில் ஒட்டியுள்ள மண் போவதற்கு காற்றில் ஓங்கி உதறுகிறாய் அல்லவா? அதைப் போல நீ சொற்பொழிவில் கேட்ட கருத்துக்களையும் அறிவுரைகளையும் மனம், மூளையிலிருந்து உதறிவிட்டு வீட்டுக்கு வருவாயாக'' என்றான். அந்த வியாபாரியின் அறிவுரைக்கேற்ப நீங்களும் நடப்பீர்களானால் இங்கு வருவதாலும், தங்குவதாலும், சொற்பொழிவைக் கேட்பதாலும், பரிவுடன் பேசுவதாலும் நீங்கள் அடையும் நன்மை யாது?



**சாயி சிந்தனை**


## வாக்குரிமையைப் பாதுகாப்போம்

### உங்களுக்குத் தெரியுமா....?

★இத்தினங்களில் வாக்காளர் பதிவுப் புத்தகம் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன...

★வாக்காளர் பதிவுப் புத்தகத்தில் உங்களது பெயர் இடம்பெறவில்லை என்றால் எதிர்வரக்கூடிய தேர்தலின்போது உங்களது வாக்குரிமை இழக்கப்படும்.

### இதுபற்றி நீங்கள் அறியாமல் இருந்தால்

★உங்களது பிரிவின் கிராமசேவகர் உங்களுக்கு உரிய பத்திரத்தை வழங்கியிருக்கவேண்டும்.

★இதுவரைக்கும் அந்தப் பத்திரம் கிடைக்கவில்லை என்றால் உங்களது பிரிவின் கிராமசேவகரை சந்தித்து உரிய பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.



★ நீங்கள் உங்களது பிரதேசத்திற்கு மீள்குடியேறியவர் என்றால் அது தொடர்பில் கிராம சேவகரிற்கு உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்து வாக்காளர் பதிவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும்.

★கிராம சேவகர் உங்களுக்கு வாக்காளர் பதிவுப்பத்திரத்தை கொடுக்க மறுப்பின் அதுபற்றி உங்களது பிரிவின் பிரதேச செயலாளருக்கும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் தகவல் கொடுக்கவும்.

குறிப்பாக உங்களது வீட்டிற்குரிய வாக்காளர் பதிவுப்பத்திரத்தை நிரப்பி கிராமசேவகரிடம் ஒப்படைக்கும்போது பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்
Compaign for free & fair elections
CaFFE

ஒரு நபர்... ஒரு வாக்கு... ஒரேபெறுமதி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை, அம்பாறை, கொக்கலவில் 3 விமான நிலையங்கள் அபிவிருத்தி

## சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் ஏற்பாடு

திருகோணமலை, ஓக. 26

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்படவிருக்கும் 13 உள்நாட்டு விமான நிலையங்களில் முதலில் திருகோணமலை உட்பட மூன்று விமான நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஏனைய இரண்டும் அம்பாறை, கொக்கல பகுதிகளில் உள்ள விமானநிலையங்களாகும்.

அபிவிருத்திக்காகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஏனைய விமான நிலையங்கள் மட்டக்களப்பு, வவுனியா, பலாலி,




இரத்மலானை, பொலன்னறுவை, ஹிங்குராக்கொட, வீரவில, கட்டுக்குருந்த, சிகிரியா ஆகிய இடங்களிலுள்ளவையாகும்.

இவ்விமான நிலையங்களின் ஓடுபாதைகள் அகலமாக்கப்பட்டு நவீன வசதிகள் செய்யப்படும். உள்நாட்டு உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்த அபிவிருத்தித்திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. (ளி)

# திருகோணமலை நகர சபை பதில் தலைவராக செல்வராஜா.

திருகோணமலை, ஓக. 26

திருகோணமலை நகர சபையின் பதில் தலைவராக கே.செல்வராஜா கடந்த திங்கட்கிழமை பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். திருகோணமலை நகர சபையின் உப தலைவராகப் பணியாற்றி வரும் இவரைப் பதில் தலைவராக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமித்தார்.

நகர சபைத் தலைவராகப் பணிபுரிந்த எஸ்.கௌரிமுகுந்தன் மூன்று மாத காலத்துக்குப் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமையை அடுத்தே இவர் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# இனியபாரதிக்கு எதிரான வழக்கு கல்முனை மேல்நீதிமன்றத்தில்

அம்பாறை, ஓக.26

ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரான இனியபாரதிக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரநேரு சந்திரகாந்தனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முழு நேர விசாரணை கல்முனை மேல் நீதி மன்றத்தில் நீதிபதி சந்திரமணியால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வழக்காளியுமான சந்திரநேரு சந்திரகாந்தன் பின்வருமாறு தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்:

நாடாளுமன்ற உறுப்பினராக நான் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த போது கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் சந்தைக்கட்டடம் ஒன்றை அமைப்பது தொடர்பாக திருக்கோவில் சந்தை வளாகத்தில் பொது மக்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு வைத்து இனியபாரதி என்னை சுட்டுக் கொலை செய்ய முயற்சித்தார்.

சந்திரகாந்தன் தனது வாக்குமூலத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் சந்திரநேரு சந்திரகாந்தனுக்கு அப்போது பாதுகாவலராக இருந்த நால்வரில் மன்றுக்கு சமுகமளித்த இருவரும் இனிய பாரதிக்கு எதிராக சாட்சியமளித்தனர்.

சாட்சியங்களை செவிமடுத்த நீதிவான் சந்திரமணி முழு நேர இரு நாள் விசாரணைக்காக செப்ரெம்பர் மாதம் 28, 29ஆம் திகதிகளில் இவ் வழக்கை விசாரிப்பதென்றும், குறித்த காலத்தில் சந்திர காந்தனுக்கு பாதுகாவலராக இருந்த மன்றுக்கு வருகைதராத ஏனைய இரு காவலர்களையும் வாக்குமூலம் பதிவுசெய்ய அழைப்பு விடுக்குமாறும் உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார். (ளி)

# மண்டானை மீள்குடியேற்றக் கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை அமைக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, ஓக. 26

திருக்கோயில் பிரதேசத்திலுள்ள மண்டானையில், மீள் குடியேற்றக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி, மீள் குடியேற்றப் பிரதியமைச்சர் முரளிதரனின் துரித நடவடிக்கையால் பாடசாலையொன்று அமைக்கப்படவுள்ளது.

ஆழிப்பேரலையின்போது இருப்பிடங்களை இழந்து முகாம்களில் இருந்த 350 குடும்பங்கள் திருக்கோயில் பிரதேசத்திலுள்ள மண்டானையில் தொண்டர் நிறுவனங்களால் அமைக்கப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப்பட்டன.

குடியமர்த்தப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகியும் முழுமையான அடிப்படை வசதிகள் எதுவும் செய்துகொடுக்கப்படவில்லை. முக்கியமாகத் தமது எதிர்காலச் சந்ததியினரின் கல்வி முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இக்குடும்பங்கள் மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் வி.முரளிதரனின் கவனத்திற்கு கொண்டுவந்தன. இதைத் தொடர்ந்து பிரதியமைச்சரின் துரித நடவடிக்கையால் பாடசாலைக் கட்டடமொன்று அமைக்கப்படவிருக்கிறது.

இந்தப் பாடசாலை முதல் கட்டமாக ஆரம்பக் கல்விக்கான ஆரம்பப் பாடசாலையாக செயற்படவிருக்கிறது. பின்னர் படிப்படியாக ஏனைய வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பாக நடவடிக்கைகளை திருக்கோயில் கல்வி வலய அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

அதேவேளை, மீள்குடியேறியுள்ள 350 குடும்பங்களையும் சேர்ந்தவர்களில் திருக்கோயில், தம்பிலுவில் பாடசாலைகளில் கல்வி கற்பதற்குச் செல்லும் மாணவர்களுக்கு ஒரு தொகுதி சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளன. ஏற்கனவே ஒரு தொண்டர் அமைப்பு ஒரு தொகுதி சைக்கிள்களை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வழங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதத்திலிருந்து வாரமொரு முறை நடமாடும் வைத்தியசேவைகளும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. திருக்கோயில் ஆயுர்வேத வைத்தியசாலை இந்த நடமாடும் வைத்தியசேவையை ஏற்கனவே ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(ளி)

# உள்நாட்டு டெங்கு ஒழிப்பு பக்றீரியாவை மத்திய மாகாணத்தில் விசிற வேண்டாம்

## மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அமைச்சிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.26

டெங்குநோய் ஒழிப்பிற்கென உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள பக்றீரியாக்கள் மத்திய மாகாணத்திற்கு அவசியமில்லை என மத்திய மாகாண டெங்கு நோய் நிவாரணக்குழு சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தியான இந்த பக்றீரியாவை முதலில் மத்திய மாகாணத்தில் விசுறுவது என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக சுகாதார பிரதியமைச்சர் கடந்த சனிக்கிழமை கண்டி மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் இதுவரை டெங்கு நோயால் நால்வர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து எண்ணூறுபேர் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகினர் என மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சாந்தி சமரசிங்க சுட்டிக்காட்டினார்.

கடந்த வருடத்தை விடவும் இவ் வருடம் மாகாணத்தில் டெங்குநோய்ப் பீடிப்பு 70 சதவீதம் குறைந்துள்ளது என்றும் சுட்டிக் காட்டிய பணிப்பாளர், இதனால் பக்டீரியா விசிறப்படவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்தார். (ளி)

# 69 போலி நாணயத்தாள்களுடன் கேகாலையில் இரண்டுபேர் கைது

கொழும்பு, ஓக.26

அறுபத்தைந்து போலி இரண்டாயிரம் ரூபா நாணயத்தாள்களை வைத்திருந்த வியா பாரிகள் இருவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை கேகாலைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட் டுள்ளனர் என பிந்தெனிய பொலிஸார் தெரி வித்தனர்.

இது குறித்துக் கூறப்பட்டவை வருமாறு:-

கொட்டியாக்கும்புர பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிலையத்தில் தமது வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பிய இவர்கள் 2,000 ரூபா நாணயத்தாளைக் கொடுத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

அதில் சந்தேகம்கொண்ட பணியாளர் பொலிஸ் அவசர அழைப்பிற்குத் தகவல் வழங்கினார். இதையடுத்து மேற்கொள்ளப் பட்ட துரித தகவல் பரிமாற்றத்தின் பயனாக விரைந்த பிந்தெனிய பொலிஸார் அப்பகுதி யில் பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தை வழிமறித்து சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோத னைகளில் வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 31 இரண்டாயிரம் ரூபா தாள்களும், 38 ஆயிரம் ரூபா தாள்களும் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட வியாபாரிகள் இருவ ரும் அவிசாவளை மற்றும் ஹோமாகம பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவ்விருவரும் நடத்திவந்த ஹோட்டல்கள் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்ததால் அதனை நிவர்த்தி செய்வதற்காக போலி நாணயத்தாள்களை அச்சிட்டு மாற்றி வந்துள்ளனர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ளி)

# ரயிலில் சென்ற சிப்பாய் தவறிவீழ்ந்து படுகாயம்

கொழும்பு, ஓக 26

கொழும்பு-பதுளை இரவு தபால் ரயிலில் பயணித்த இராணுவச் சிப்பாயொருவர் ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

ஹாலி எல மஹாவத்தேகம பிரதேசத்திற்கருகில் ரயில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இவ்வனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான சிப்பாய் பதுளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

கலவுட பிரதேசவாசியான இவர் குருநாகல் போயஹனே இராணுவமுகாமில் பணிபுரிபவரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)




# மலையகப் பிரதேசங்களில் அடைமழை லக்ஸபான நீர்த்தேக்க வான்கதவு திறப்பு

நுவரேலியா, ஓக.26

மலையகப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் முதல் அடைமழை பெய்துவருகின்றது. மின்னல், காற்றுடன் கூடிய மழை பெய்வதால் பொதுமக்கள் மிகுந்த அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

இம்மழை காரணமாக மலையகப் பகுதிகளிலுள்ள காட்டாறுகள் பெருக்கெடுத்துள்ளன.

நீரேந்துப் பகுதிகளான மவுசாகலை, காசல்ரீ, விமலசுரேந்திர, கென்யோன் மற்றும் லக்ஸபான ஆகிய பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்களுக்கு நீர்வரத்து அதிகமாகியுள்ளதால் அவற்றின் நீர்மட்டங்கள் உயர்ந்துவருகின்றன.

லக்சபான நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உச்சநிலையை அடைந்துள்ளதால் அதன் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தோட்டத் தெழிலாளர்கள் தொழில்களுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் அவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இப்பகுதியைச் சூழ்ந்துள்ள கடும் பணிமூட்டம் காரணமாக வாகனச்சாரதிகள மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என ஹட்டன் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(ளி)

# குளவிகள் கொட்டியதில் பதினைந்துபேர் பாதிப்பு

கொழும்பு, ஓக.26

லுணுகலை தோட்டத்தில் நேற்று முன்தினம் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவர்கள் மீது குளவிகள் கொட்டியதில் 15 தொழிலாளர்கள் பதிக்கப்பட்டுள்ளனர். கழுகு ஒன்று குளவிக் கூட்டைக் கலைத்ததாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொட்டகலை ட்ரைட்டென் தோட்ட கே.ஓ தோட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை குளவிகளால் கொட்டப்பட்ட இருவர் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொட்டகலை ட்ரைட்டென் தோட்ட கே. ஓ. தோட்டத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபரொருவரை திடீரென வந்த நூற்றுக்கும் மேற்பட்ட குளவிகள் சூழ்ந்து கொட்டியுள்ளன.

இவ்விருவரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுமா பொருளாதார அபிவிருத்தி?

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொருளாதார அபிவிருத்தி முடக்கிவிடப்பட்டிருப்பதாக அரசுகூறிவருகின்றது, ஆனாலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை.

இது குறித்து 'டைம் சி.என்.என்' என்ற ஆங்கில இணையத்தளத்தில் வெளியான செய்தி ஆய்வு இங்கு தரப்படுகிறது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அழகுசாதனப் பொருள்கள் தொடக்கம் கைத்தொலைபேசிகள் வரையிலான பொருள்களின் பிரமாண்டமான விளம்பரப் பலகைகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. அத்தோடு இதுபோன்ற புதிய பல பலகைகள் முளைத்துக்கொண்டிருக்கின்றன.

15 மாதங்களுக்கு முன்னர் ஆட்லறிகளும் எறிகணைகளும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்த இந்த மண்ணில் பிரமாண்டமான விளம்பரப் பலகைகளில் சிரித்தவாறிருக்கும் பெண்கள் அழகுசாதனப் பொருள்களுடன் காணப்படுகிறார்கள்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் மற்றும் நிர்வாக மையமாக விளங்கிய கிளிநொச்சி நகரின் மத்தியில் தலையிழந்து சரிந்து விழுந்திருக்கும் பாரிய நீர்த்தாங்கி போரின் அழிவுகளைச் சித்தரிக்கும் ஒன்றாக விளங்கியது.

ஆனால், தற்போது இந்தத் தண்ணீர் தாங்கியின் முன்னால் எழுப்பப்பட்டிருக்கும் பிரமாண்டமான விளம்பரப்பலகையில் 'கைலண்ட்' பால்மாவினது விளம்பரம் காணப்படுகிறது.

உடைந்து விழுந்த தண்ணீர் தாங்கி கடந்த காலத்தின் மோசமான நிலையை நினைவில் நிறுத்தும் அதேநேரம் அதற்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் இந்த விளம்பரப்பலகை எதிர்காலத்தின் செழிப்பை காட்டுவதாக அமைகிறது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டின் பிற பாகங்களிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த இந்தப் பிராந்தியத்திற்கு தற்போது வர்த்தகம் வந்து சேர்ந்திருக்கிறது.

2009ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த வன்னிப் பகுதியிலும் தற்போது வியாபாரம் புதுவேகம் கண்டிருக்கிறது.

ஒரு முயற்சியாளனாக மாறியிருக்கும் வைரமுத்து சிங்கமுத்து என்ற இடம்பெயர்ந்த மீனவர் தற்போது வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

கிளிநொச்சி நகரத்திற்கு தெற்காகவுள்ள புளியங்குளம் என்ற கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் 2008ஆம் ஆண்டு அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தார்.

தொடர்ந்துவந்த போரின் விளைவாகத் தொடரான இடப்பெயர்வைச் சந்தித்த சிங்கமுத்துவும் அவரது மனைவியும் மூன்று பிள்ளைகளும் ஈற்றில் அரசால் நிர்வகிக்கப்பட்ட முகாம்களைச் சென்றடைந்தார்கள்.

அரசிடமிருந்தும் இதர தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் கிடைத்த 220 டொலர் நிதியுதவியுடன் இவர்கள் டிசெம்பர் 2009இல் முகாம்களிலிருந்து வெளியேறி தங்களது சொந்த இடங்களில் குடியேறினார்.

இதனைத் தொடர்ந்த ஜனவரி 2010இல் யாழ்ப்பாணக் குடாநாட்டை நாட்டினது ஏனைய பாகத்துடன் இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலை பொதுமக்களின் போக்குவரத்திற்காக மீளவும் திறக்கப்பட்டது.

இந்த நெடுஞ்சாலை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டுக்குப் பஸ்கள் படையெடுப்பதற்குத் தனக்குச் சிறந்தொரு எதிர்காலத்தைப் பெற்றுத்தரும் என 58 வயதான இவர் நம்பினார்.

தனக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்ட பணத்தைக்கொண்டு வீதியோரத்தில் தேனீர் கடை ஒன்றை அமைப்பதற்குச் சிங்கமுத்து முடிவெடுத்தார். ''எனது வாழ்க்கையில் நான் மேற்கொண்ட சிறந்த முடிவு இதுவாகத்தான் இருக்கும்'' என்கிறார் அவர்.

இந்த வீதி ஊடகப் பயணிப்பவர்களுக்கும் அருகே கடமையில் இருக்கும் படையினருக்கும் கைத்தொலைபேசி அட்டைகள், தேனீர் மற்றும் சிற்றுண்டிகளை விற்பனை செய்வதன் மூலம் இந்த முதியவர் மாதமொன்றுக்கு 300 டொலர் பணம் வரை சம்பாதிக்கிறார்.



மீனவரான இவரது படகு வெறுமனே கிடக்கிறது. ''நான் மீளவும் மீன்பிடித்தொழிலுக்குச் செல்வேன் என நம்பவில்லை, தேநீர்க் கடை அதிக வருமானத்தைத் தருவதோடு இலகுவான பணியாகவும் இருக்கிறது'' என இந்த வியாபாரி கூறுகிறார்.

இவரைப் போலவே தாங்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த தொழில்களைக் கைவிட்டு தற்போது நிலைமைக் கேற்றால்போல் புதிய வாய்ப்புக்களில் தங்கியிருப்ப வர்கள் பலர்.

''ஏ - 9 வீதி மீளவும் திறக்கப்படுவதற்கு முன்னர் இங்கு பொருள்களின் விலை பெரிதும் அதிகரித்திருந்தது. ஆனால் இன்று நாங்கள் நியாயமான விலையில் பொருள்களை விற்பனை செய்கிறோம்.

அத்துடன், பொருள்களுக்கான தட்டுப்பாடும் குடாநாட்டில் இல்லை'' என யாழ்பாணத்தைச் சேர்ந்த தளபாட விற்பனை முகவரான முருகேசு ராஜகோபால் கூறுகிறார்.

தேனீர்க்கடை வைத்திருக்கும் சிங்கமுத்துவையும் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்தினையும் பொறுத்தவரையில் ஏ-9 நெடுஞ்சாலை மீளவும் திறக்கப்பட்டமையானது உண்மையில் ஒரு மைல்கல்லே. ஆயிரக்கணக்கான உல்லாசப்பயணிகளும் பொது மக்களும் குடாநாட்டுக்குப் படையெடுக்கிறார்கள்.

இலங்கையில் அதிக வாடிக்கையாளர்களைக் கொண்ட கைத்தொலைபேசி நிறுவனமான 'டயலொக்' போன்ற பாரிய நிறுவனங்களும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் தங்களது சேவைகளை விரிவுபடுத்தியுள்ளன. போர் முடிவுக்கு வந்து 90 நாள்களுக்குள்ளேயே இந்தப் பிராந்தியத்தில் 'டயலொக்' நிறுவனம் புதிய கோபுரங்களை அமைத்துச் சேவையினை விரிவுபடுத்த ஆரம்பித்துவிட்டது.

'டயலொக்' நிறுவனத்தின் சந்தாதாரர்கள் மற்றும் சேவையைப் பயன்படுத்துபவர்களது எண்ணிக்கை பெரிதும் அதிகரித்தி ருக்கிறது'' என 'டயலொக்' நிறுவனத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ஹான்ஸ் விஜயசூரிய கூறுகிறார்.

இலங்கையில் அதிக பிரபல்யமான மதுபானத்தைத் தயாரிக்கும் லயன் புறூவறி என்ற நிறுவனமும் பெரிதும் நன்மையடைந்திருக்கிறது.

''எங்களது உற்பத்திப்பொருள்களின் வளர்ச்சி வீதம் மிகச் சிறப்பாக உள்ளது.'' என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுரேஸ் கேசா கூறுகிறார். கடந்த ஜனவரி தொடக்கம் எந்தவிதமான தங்குதடையுமின்றி குடாநாடு நோக்கிய தரைவழிப்போக்கு இடம்பெறுவதற்கு ஆரம்பித்தது முதல் இந்தப் பிராந்தியத்திற்கான பொருள்கள் மற்றும் சேவை களின் தேவைகள் இரட்டிப்பாகியிருக்கிறது என அனைவருமே கூறுகிறார்கள்.

இருப்பினும் இந்த நிலைமாற்றம் தொடர்பில் அனைவரும் திருப்திகொள்வதாகத் தெரியவில்லை. வடக்கு தொடர்ந்தும் ஓரங்கட்டப்பட்டு வருகிறது என அபிவிருத்திக்கான பருத்தித்துறை நிறுவனம் என்ற அமைப்பைச் சேர்ந்த பொருளாதார வல்லுநரான முத்துக்கிருஸ்ணா சர்வானந்தா கூறுகிறார்.

இலங்கையில் மோதல்கள் முளைவிடுவதற்கு முன்னர் விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகியனவே வடக்கின் பொருளாதாரத்தின் ஆதாரமாகத் திகழ்ந்தன. இந்தப் பிராந்தியத்தில் மோதல்கள் தீவிரம்பெற, நாட்டின் இதர பாகங்களில் இடம்பெற்றுவந்த வேகமான தொழில்துறைவளர்ச்சி நாட்டின் வடக்குக்கு மறுக்கப்பட்டது எனலாம்.

மத்திய வங்கி வெளியிடும் மாகாண ரீதியிலான புள்ளி விவரங்களின் அடிப்படையில் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் வட மாகாணத்தின் பங்கு 2010ஆம் ஆண்டு அளவில் சிறிய அதிகரிப்பையே கண்டிருக்கிறது. 3.2 சதவீதமாக இருந்த வடக்கின் பங்களிப்பு வீதம் 3.3 ஆக அதிகரித்திருக்கிறது.

மத்திய வங்கியின் இந்தப் புள்ளி விவரம் வடக்கின் பொருளாதார வளர்ச்சி மந்தகதியில் இருப்பதைக் காட்டுகிறது. குடாநாட்டுக்கான வழங்கல்கள் பெரும்பாலும் கடல் மார்க்கமாகவே மேற்கொள்ளப் பட்டமையினாலும் பொருள்களுக்கான தட்டுப்பாடு, பொருள்களின் அதிக விலை மற்றும் இரட்டை வரிவிதிப்பு அதிகரிப்பதற்கான காரணமாகவும் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் குடாநாட்டில் இதுபோன்ற சுதந்திர வர்த்தகமே இடம்பெற்று வந்ததாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

''குடாநாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என எனக்குத் தெரியவில்லை'' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகிறார். தெற்கிலிருந்து நாட்டின் வடக்குப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் அனைத்துமே பொலிஸாராலும் இராணுவத்தினராலும் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்துடன், வன்னியின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்குச் செல்வதற்கான அனுமதி இன்னமும் மறுக்கப்பட்டிருக்கிறது.

அச்சுறுத்தல், வர்த்தகத்தில் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட ஏகாதிபத்தியம் மற்றும் லஞ்சம் பெறுவதற்காக வர்த்தகர்கள் கடத்தப்படுவது என்பன தொடர்பான முறைப்பாடுகள் தொடர்ந்தும் கிடைக்கின்றன என கூறுகிறார் சர்வானந்தா.

ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களது சொந்த இடங்களில் வேகமாக மீள்குடியேறி வருகின்ற போதும் இவர்களுக்கான நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் அதன் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன.

நிரந்தர வேலைகளுக்கான தேவையும் அதிகமுள்ளது. இது தவிர தங்களது மட்டுப்படுத்தப்பட்ட வருவாயை வெளியார் வந்து உறிஞ்சி இழுத்துவிடுவார்களோ என்ற அச்சமும் குடாநாட்டு மக்கள் மத்தியில் அதிகமுள்ளது. குறித்த வெளிநாட்டு வங்கியொன்று யாழ்ப்பாணத்தில் தனது கிளையை ஆரம்பித்த ஓரிரு மாதங்களில் மாத்திரம் அந்த வங்கியில் 80 லட்சம் டொலர் பணம் வைப்பிலிடப்பட்டிருக்கிறது.

அதேநேரம் இந்த வங்கி குறித்த இந்தக் காலப்பகுதியில் ஒரேயொரு வங்கிக் கடனை யேனும் வழங்குவதற்குத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும், குடாநாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய திட்டங்கள் இந்த நிலையை மாற்றும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தி நிறுவனமான மாஸ் இன்ரிமேற்ஸ் என்ற நிறுவனம் வன்னியின் தென்முனையிலுள்ள ஓமந்தைப் பகுதியில் 30 லட்சம் டொலர் செலவில் ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணித்து வருகிறது.

இந்தத் தொழிற்சாலையானது ஆயிரத்து 500 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கும். இந்தத் திட்டத்தை வெற்றிபெற வைக்கும் நோக்குடன் 600,000 டொலர் பணத்தை 'யுஸ் எயிட்' இந்த நிறுவனத்திற்கு வழங்குகி றது. இதுபோன்ற திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக வட மாகாணத்தில் மாத்திரம் 10,000 வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் எண்ணத்துடன் தொண்டு நிறுவனங்கள் செயலாற்றுகின்றன.

இதுபோன்ற உதவித் திட்டங்களை போரினால் பாதிக்கப்பட்ட மக்களும் அமைதியின் பலாபலன்களைப் பெறுவதற்கு வழிசெய்யும் அதேநேரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போரின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதாகவும் அமையும். *

**தமிழில்: வண்ணமதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை யாருக்கு

ஒரு ஊரிலே ஒரு மன்னர் இருந்தார். ஒருநாள் அவரும் அவர் மனைவியும் அரண்மனையில் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் அரண்மனை அதிகாரி அங்கே வந்தார். '' மன்னா.... நமது மண்டபத்திலே நீதி விசாரணை நடத்த வேண்டிய நேரம் இது... எல்லோரும் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். '' எனக்குப் பதிலாக நீங்களே விசாரணை நடத்துங்கள்'' என்றார் மன்னர்.

வந்தவர் மகாராணியைப் பார்த்தார். மகாராணி சூழ்நிலைப் புரிந்துகொண்டாள்.

'' நீதிமன்றத்திற்கு வரனும் போல எனக்கு ஆசையாக இருக்கு....! ''

'' சரி .... போகலாம் வா!''

அரசனும் அரசியும் நீதிமன்றத்திற்கு வந்தார்கள்.

முதல்லே ஒரு மனிதனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

'' இவன் என்ன செய்தான்?''

'' திருடினான்...''

'' நீ திருடியது உண்மைதானா?''

'' உண்மைதான் ஆனால்...''

ஒன்றுக்கு மேலே விளக்கம் எதுவும் தேவையில்லை...

திருட்டுக் குற்றத்திற்கு என்ன தண்டனையோ அதை நீ அனுபவித்துத்தான் தீரணும்!''

அரசி சொன்னாள் '' ஒருகுற்றத்தைத் தண்டிப்பது முறைதான் ஆனாலும் குற்றம் சாட்டப்பட்ட ஆள் என்னதான் சொல்கிறான் என்று கேட்போமே''

'' சரி நீ என்ன சொல்ல வாராய் அதைச் சொல்லு!''

'' மன்னா! நான் சின்ன வயசுலே இருந்து பிரியமா என் குதிரையை வளர்த்துக் கொண்டு வாறேன்.

அதுக்காக நம்ம அரசாங்கம் ரேஷன் கடையிலே என்ன கொடுக்குதோ அதைத்தான் கொடுத்துவிட்டு வாறேன். ஆனா நம்ம அரசாங்கம் கொடுக்கிற அளவு குதிரைக்குப் போதுமானதல்ல. வர வர மெலிந்து கொண்டே வருகுது. அதைப் பார்த்துவிட்டு என்னால் சும்மா இருக்கமுடியல்ல.

அதனால் அரசாங்கப் பண்டகசாலையிலிருந்து கொஞ்ச தானியத்தைத் திருடிவிட்டேன். செய்தது தப்புத்தான் மன்னியுங்கள்.

'' எந்தக் குற்றத்தையும் மன்னிப்பது வழக்கம் கிடையாது'' என்றார் மன்னர். அரசியைப் பார்த்து நீ என்ன நினைக்கிறாய்? என்றார்.

'' அந்தக் குதிரையை மண்டபத்திற்குக் கொண்டு வரச் சொன்னாள் அரசி. குதிரை வந்து சேர்ந்தது.

வந்ததும் .... அது தலையைத் தூக்கி அங்கேயும் இங்கேயுமாகப் பார்த்து... அதை வளர்த்தவன் பக்கத்திலே போய் ஆசையாய் நின்றது.

'' சரி.. இப்ப சொல்லு குற்றவாளிக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்'' அரசி சொன்னார்..

'' தண்டனை அவசியம்தான் குற்றவாளி யார்? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்!''

'' குற்றவாளி குதிரையின் சொந்தக்காரர் அல்ல. இந்தக் குதிரையைப் பட்டினி போட்ட அரசாங்க அதிகாரிதான் குற்றவாளி.

அவருக்குத்தான் தண்டனை கொடுக்க வேண்டும்!

பற்றாக்குறையான ரேஷனை வழங்கியதுதான் இந்தக் குற்றத்துக்குரிய மூலகாரணம்.

மன்னர் யோசனை பண்ணினார். அவனை விடுதலை செய்தார்.

சோ. சுவாமிநாதன்

# கவலைப்படாதே சகோதரா

வாழ்க்கையில் முன்னேற விரும்புபவர்கள் பிறந்து கருத்துக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பது உண்மை. இதற்குரிய எல்லையைக் கண்டு கொண்டவர் மட்டுமே பிறரால் பாதிப்படையாமல் மகிழ்ச்சியாக இருக்கலாம். அளவுமீறி பிறரது விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் தர ஆரம்பித்தால் குழப்பமும் வரும், அதேநேரம் முன்னேற்றமும் தடைப்படும்.

எம்மை எல்லோரும் பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் காணப்படும். இளைய தலைமுறைக்கு இந்த ஆசை அதிகம். அதேநேரம் ஒரு செயல் நடக்காவிட்டால் தளர்ந்து போவது இளைய தலைமுறைக்குரிய இயல்பான விடயம்.

எம்மீது அக்கறையுடன் விமர்சிப்பவர்கள் விமர்சனத்தை மதிக்கலாம். ஆனால் அதற்காக எல்லோரின் விமர்சனத்தையும் மதக்க வேண்டியதில்லை. இந்த அணுகுமுறை நமது வெற்றி மாளிகையின் முக்கியமான படிக்கட்டென்று நான் கருதுகிறேன் சரியா?

முற்றும் துறந்து முனிவனாகப் போனால் கூட உலகம் அவனைக் கேலி செய்யும். இதற்கு உதாரணமாக ஒரு கதை உண்டு.

பட்டினத்தார் எத்தனை பெரிய துறவி. அவரையே உலகம் என்னபாடுபடுத்தியது தெரியுமா? நடந்த களைப்பால் வயலில் பட்டினத்தார் இறந்து போனவரைப் போலப்படுத்திருந்தார்.

அந்த வழியால் போன இரு பெண்கள் வரப்பு வழியால் நடந்து போகமுடியாதபடி பட்டினத்தார் வரப்பு மீது தலைவைத்துப் படுத்திருந்தார். அதைக் கண்ட ஒரு பெண் '' யாரோ மகான்'' என்று நினைத்து வணங்கி வரப்பிலிருந்து இறங்கி நடந்தாள். ஆனால் மற்றப்பெண், '' ஆமாம் ஆமாம் இவர் பெரிய சாமியார்...

தலையணை வைத்துத் தூங்குவதைப் போல வரப்புமேல் தலை வைத்துத் தூங்குகிறார் பார்... ஆசை பிடித்தவர்'' என்று கடுஞ்சொல்லை வீசினாள். அவர்கள் அங்கிருந்து சென்றவுடன் எழுந்து உட்கார்ந்த பட்டினத்தார். '' ஆஹா... எனக்கு இந்த அறிவு இன்றுவரை இல்லையே' என வருந்தி வரப்பில் இருந்து தலையை கீழே வைத்துப்படுத்தார்.

சற்று நேரத்தில் அந்த இரு பெண்களும் அதேவழியாக திரும்பிவந்தனர். தலையை கீழே வைத்துப்படுத்த பட்டினத்தாரை பார்த்த முதல் பெண் பரிதாபப் பட்டு,''பார்த்தாயா?.... நீ சொன்னதை கேட்டு உடனே கீழே இறங்கிப் படுத்திருக்கிறார்... இப்பொழுதாவது ஒத்துக்கொள்.... இவர் ஒரு மகான் தானே...! என்றாள்.

உடனே மற்றப்பெண், அடி போடி... இவரெல்லாம் ஒரு சாமியாரா? தன்னைப்பற்றி யார் என்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக் கேட்கிறார். அதைப் பற்றிக் கவலைப்படுகிறார். இவரெல்லாம் ஒரு சாமியாரா? என்று திருப்பிக் கேட்டாள். பட்டினத்தாருக்கு தலை சுற்றியது.

அப்படி இருந்தாலும் உலகம் நம்மை விமர்சிக்கும். இது பேருண்மை. தரமானவர்களின் தரமான விமர்சனத்தை மதிக்க வேண்டும், விமர்சிக்க வேண்டும் என்கிற வெறியுடன் விமர்சனத்தை புறக்கணித்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

சுகி.சிவம்

# அரசாளும் தகுதி யாருக்கு

வாரிசு இல்லாத அரசர் ஒருவர் யாரேனும் ஓர் இளைஞனைத் தகுதி பார்த்து அரசனாக்க நினைத்தார். இளைஞர்களுக்கான நேர்முகத் தேர்வை ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏற்பாடு செய்திருந்தார். படித்த பலமுள்ள,பண்புள்ள இளைஞர்களை அங்கே வரும்படி அறிவித்து அழைப்பு விடுத்தார்.

ஆற்றல் மிக்க இளைஞர் பலர் தேர்வு மண்டபம் நோக்கி அணிவகுத்துச் சென்றனர். வழியில் ஒரு துயரக்காட்சி வயது முதிர்ந்த நோயாளி ஒருவன் பிச்சைப் பாத்திரத்தை குலுக்கியபடி நெளிந்து கொண்டிருந்தார். திடீர் என்று வலிப்பு நோய் வந்து துடித்தார்.

அவரைப் பார்க்கும் அவசரத்தில் போய்க் கொண்டிருந்தார்களே தவிர பாவமான ஏழையைப் பார்த்து பரிதாபப்பட யாருமே நிற்கவில்லை.

அந்தக் கூட்டத்திலும் ஒருவனது கண்கள் மட்டும் அந்த அவலத்தைப் பார்த்து நோயாளியை உடனே மடியில் எடுத்து வைத்து தண்ணீர் கொடுத்து கிழவனின் நெஞ்சைத் தடவினான்.

தனது அங்கவாய்.... கிழவனின் அழுக்கு முகத்தைத் துடைத்தான். பால் வாங்கி பருகக் கொடுத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருந்தும் வாங்கிக் கொடுத்தான்.

நேர்முகத் தேர்வுக்கு காலம், இடம், தராது என்று கணக்கிட்டுவிட்டு அதைப்பற்றி கவலைப்படாமல் கிழவனுக்குப் பணிவிடைகளை செய்து விட்டு உங்களை எங்கே கொண்டு போய் விடுவது என்று கேட்டான். நீ கவலைப்படாமல் போய் நான் போய்விடுவேன் என்றார். கிழவன் இளைஞன் புறப்பட்டுப் போனான்.

ஆனால் அரண்மனைக்குத் தேர்வுக்குப் போன இளைஞர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. அரசர் வேறு பணிகள் காரணமாக தேர்வை ஏற்ற செய்திருந்தார். மறுநாள் வரும்படி தகவல் தரப்பட்டது.

மறுநாள் எந்தத் தேர்வும் இன்றி அந்த இளைஞனை சிம்மாசனத்தில் அமரச் செய்து மணி முடியை சூட்டினார்.



எல்லோருக்கும் ஆச்சரியம்

நேற்றையதினம் நோயால் துடித்த முதியவரை இரக்கம் காட்ட யாரும் இல்லை. இவன் மட்டுமே இரக்கம் காட்டினான் என்றார் அரசர். மக்கள் மீது இரக்கம் தான் முதல் தகுதி.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



ஆதாயகரமான பணவரவுகளை அல்லது பொருள் வரவுகளை பெறலாம். பழைய சம்பவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். புதிய திட்டம் ஒன்றை செயற்படுத்துவீர்கள். பால்ய நண்பர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள்.

### இடபம்



தொழிலில் சுறுசுறுப்பான நிலைமை காணப்படும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். உங்களின் வேலை ஒன்றை சக ஊழியர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். உங்களின் செல்வாக்கை மற்றவர்கள் மத்தியில் காட்ட முற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

### மிதுனம்



திட்டமிட்ட காரியம் ஒன்றில் திடீரென மாற்றம் செய்யலாம். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்றொருவரையும் கூட்டிக் கொண்டு அலையலாம். மறைமுக எதிர்ப்புகளைச் சந்திக்கலாம்

### கடகம்



நம்பிய சிலரே கடைசி நேரத்தில் காலை வாரி விடலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். திடீரென ஏற்படும் செலவுகளால் கைப்பணம் கரையலாம். நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாக செயற்படுவீர்கள்.

### சிங்கம்



விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும் நாள். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். தந்தை தொடர்பான விஷயங்களில் சிறு சிரமங்களுக்கு ஆள்படலாம். மறக்க முடியாத புதிய அனுபவம் ஒன்றை பெறலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

### கன்னி



பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கலாம். எதிர்பாராத வகையில் சிலரை சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். உடற்பயிற்சி மற்றும் தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

### துலாம்



சில வேலைகளில் ஆரம்பத்தில் தடை ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். நண்பர்கள் சிலர் உங்களிடம் அவசர உதவி கேட்கலாம். பணிபுரிவோர் அதிகாரிகளின் கட்டளைகளை மறக்காமல் நிறைவேற்ற வேண்டும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும்.

### விருச்சிகம்



திட்டமிட்ட வேலைகளை சரியான நேரத்தில் செய்து முடிப்பீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களை பெறலாம். உடல் உபாதைகளை தவிர்க்க வீண் அலைச்சலைத் தவிர்க்க வேண்டும். குடும்ப தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நீங்கள் விரும்பாத பொருள் ஒன்றை மற்றவர்களுக்கு கொடுப்பீர்கள்.

### தனுசு



இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று திடீரென முடிவுக்கு வரலாம். செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். உடன் பணிபுரியும் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். பழைய நண்பர் ஒருவர் திடீரென உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

### மகரம்



உறவினர்களுக்காக, குடும்பத்தினருக்காக தாராளமாக செலவு செய்வீர்கள். வழக்கமாகச் செய்யும் வேலை ஒன்றை இன்று திடீரென செய்ய முடியாமல் போகலாம். பல நாள்களாக மனதில் புதைத்து வைத்திருந்த ரகசியம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள். சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு அதை கடைசி நேரத்தில் மாற்றிக் கொள்வீர்கள். மறதியால் அவதியுண்டு.

### கும்பம்



எதிலும் துணிச்சலுடன் செயற்பட்டு சாதனை படைக்கும் நாள். வெளிநாட்டு தொடர்பு உடையவர்கள் அனுகூலமான செய்திகளை கேட்கலாம். நீங்கள் கேட்காமலேயே சிலர் உங்களுக்கு உதவி செய்யலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். மற்றவர்களை பார்த்து சில விடயங்களில் ஆதங்கம் அடைவீர்கள்.

### மீனம்



ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். நண்பர்கள், சக ஊழியர்கள் உங்களிடம் கடனுதவி கேட்டு தொந்தரவு செய்யலாம். நீங்கள் சொல்லும் யோசனை ஒன்றுக்கு குடும்ப உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். தொழில் ரீதியான விமர்சனங்களுக்கு ஆள்படலாம்.

---

# 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்:
18.03.1942

ஆண்டவன் அடியில்:
28.07.2010

## அமரர் சிவகுருமூர்த்தி தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற மதிப்பீட்டு பரிசோதகர்
மாநகரசபை, கொழும்பு,
உரிமையாளர் - சுஜீவா வீடியோ விஷன்
& சுஜீவா ஸ்ரோர்ஸ்
வல்வை வர்த்தகர் சங்க செயலாளர்
வல்வை மாவட்ட வைத்தியசாலையின்
முன்னாள் அபிவிருத்தி சங்க செயலாளர்
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின்
முன்னாள் அபிவிருத்தி சங்க செயலாளர்)

*அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
கடமைமிகு தலைவனாயிருந்து நேர்மையாக வாழ்ந்து
புதல்வியர் மூவரையும் தரணியிலே தலைநிமிரச்செய்து
வெற்றிகள் பல பெற வித்திட்ட தன்னிகரில்லா தந்தையே
கடமைகள் யாவும் முடித்துவிட்டாயென கால்பிடித்த கந்தன்
தன் காலடியில் ஒரு நொடியில் அழைத்துவிட்டானோ
உங்கள் ஆன்மாவை எங்கள் இதயங்களில்
சுமந்தபடி தவிக்கும் உறவுகள்*



28.07.2010 அன்று அமரத்துவம் அடைந்த எம் அன்புத்தந்தையின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு எல்லா வகையிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மின்னஞ்சல், தொலைபேசி, தந்திவழியாக ஆறுதல் கூறிய அனைவருக்கும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (27.08.2010) வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

'சுவர்ணலதா பவனம்',
தெணியம்பை வீதி, வல்வெட்டித்துறை.
தொ.பே: 021 2264391

குடும்பத்தினர்.

(102239)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

## செல்வன் கருணாகரன் மாதுளன்



துளிராய்
1994.10.29



விதையாய்
26.08.2009

*மாதுளனே! மாதுளனே! மாதங்கள் பன்னிரண்டு
மாயமாய் மறைந்ததை யார் கண்டார் ஐயா
மனம் கனிந்த புன்சிரிப்பு மனதை விட்டகலுமோ - ஐயா
விடிவின்றி விழிநீரும் வான்மழைபோல் சொரியுதய்யா
பாசமுள்ள அப்பா அம்மா உன் நினைவில் நாள்தோறும்*

*ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் தான் போனாலும்
ஆறிடுமோ எம்மனம்- ஐயா
வேகமாக ஓடிவிட்டதே ஓராண்டு- ஐயா
ஓராண்டு ஆயினும் உன் பிரிவை ஏற்க மறுத்து
தவிக்கின்ற உடன் பிறப்புகள்.*

*உன் இழப்பைத் தாங்காமல் தவிக்குதய்யா உறவுகள்
இக்கணமும் உன் நினைவால் ஏங்க வைத்துப் பிரிந்தாய் ஐயா
ஆண்டவனின் காலடியே தஞ்சமெனச் சென்றவனே மாதுளா- நின்
ஆன்மாவின் சாந்திக்காய் இறையருள் வேண்டி நிதம் இறைஞ்சுகின்றோம்.*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

54/12, பண்டியன் தாழ்வு,
கொழும்புத்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவுகள், நண்பர்கள்.

(102438)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பின்பு 1985 இல் சாமிஅப்பாவும் தொடர்ந்து பழனியப்பாவும் நற்பேறு எய்தினார்கள்.

இதன் பின்பு ஆலயப் பொறுப்பை தற்போது முகாமையாளராக உள்ள பாக்கியம்மாவின் இரண்டாவது புதல்வன் தேவராசா ஏற்று நடத்தி வருகின்றார். இவரின் பொறுப்பில் பிரதம குருவாக காந்தியம்மாவும் ஏனைய ஞானக் குழந்தைகளும் நடத்தி வந்தனர். ஞானக்குழந்தைகளான பாக்கியம்மா 1987 இலும் அன்னபூரணம் 1994 இலும் நற்பேறு எய்தினார்கள். தொடர்ந்து காந்தியம்மா வழிபாடுகளை நடத்தி வந்தார். தனது வாக்கு வன்மையால் மக்களின் தீராத நோய்களைத் தீர்த்து மக்களின் மனக்கவலையை குருநாதர் காட்டிய தீபவழிபாட்டின்படி தீர்த்து வைத்தார்.

1991 ஆம் ஆண்டில் வசந்த மண்டபம் அமைக்கப்பட்டு 1991 சித்திரை 2 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1992 ஆவணியில் வரலக்ஷமி பூசையன்று சீதேவி, பூதேவி சமேத நாராயணர் வசந்த மண்டபத்தில் எழுந்தருளினார். இங்கு உதயத்தில் உள்ள (வடமராட்சி) வல்லிபுரநாராயணர் கோயிலிருந்து எடுத்து வரப்படும் திருமண்ணே நாராயணன் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

பிரதம குருவாக இருந்து தமிழ் முறைப்படி பூசை வழிபாடுகளை செய்து கோவை மக்கள் மட்டுமன்றி அயல்பிரதேச மக்கள் மற்றும் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வந்த மக்களை தீப வழிபாட்டின் மூலம் துன்பங்களை அகற்றி பெரும் தொண்டாற்றிய பெருமாட்டி காந்தியம்மா 2001 ஆடி 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அட்டமி திதியில் பரந்தாமன் பாதார விந்தங்களை சென்றடைந்தார்.

தற்போது பாக்கியம்மாவின் புத்திரர்கள் தேவராசா குடும்பமும் அழகேஸ்வரன் குடும்பமும் அன்னபூரணத்தின் மகளான கெங்காதரன் ருக்மணியும் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டு பூசை வழிபாடுகளை நடத்தி வருகின்றனர்.

இவ் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி தினத்தில் உறியடி உற்சவம் வரும் வகையில் 12 நாள்கள் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

இவ் ஆலயத்தில் புதிய சித்திரத்தேர் 21.08.2008 இல் அமைக்கப்பெற்று சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இடம் பெற்றது. தேர்த்திருவிழா கிருஷ்ண ஜெயந்தி அன்று காலை இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு சிறப்பம்சம் வாய்ந்த ஆலயத்தில் ஆலய வரலாறு தொடங்கியதிலிருந்து ஒவ்வொரு மாதமும் தமிழ் மாதம் பிறந்து 2 ஆம் நாள் அன்றும் மஹோற்சவ காலங்களிலும் அன்னதானம் வழங்கப்பட்டு தமிழர்களின் பாரம்பரியங்களை நிலை நிறுத்துவதில் இன்றும் முன்னோடியாக செயற்பட்டு வருகின்றது.

*(முற்றும்)*






# வலி.கிழக்கு விதாதா வளநிலையம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

விதாதா நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நாட்டிற்கு உகந்த ஆராய்ச்சிகள் திறனாய்வுகளை மேற்கொள்ளுவதற்கு விஞ்ஞானிகள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்களை ஈடுபடச் செய்தல் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை வலுவுறச் செய்தல்.

தொழில் நுட்பத்தை கிராமத்துக்கு வழங்கி கிராமத்து மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதலும்; அதற்காக அவர்களை ஊக்குவித்தலும்; கிராமிய மக்களின் பரம்பரைத் தொழில் நுட்பத்தை முறையாக இனங்கண்டு அவற்றை மேம்படுத்தி மீண்டும் கிராமத்தின் அபிவிருத்திக்காக பயன்படச் செய்தல்

கிராமப்புறங்களில் இருந்து தரமானபொருள்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை சந்தைப்படுத்துவதன் மூலம் அவர்களின் வருமானத்தை நிலையானதாக உறுதிப்படுத்தல்.

என்பனவற்றை வலி.கிழக்கு விதாதா வளநிலையம் கணிசமான அளவு நிறைவு செய்து வருவதே யாழ்.மாவட்ட நிலையிலும் வடக்கு மாகாண நிலையிலும் முதலிடம் பெறுவதற்கு வைத்துள்ளன.

வலி.கிழக்கு விதாதா வளநிலையம் அமைந்திருக்கும் வீட்டின் முன்பு உள்ள 1/3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலமும் வீட்டை சூழவுள்ள பகுதியும் முழுமையாக பச்சைப்பசேல் என காட்சி தருகின்றன. திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வீட்டுத் தோட்ட மாதிரி**

மஞ்சள், இஞ்சி, வல்லாரை, தூதுவலை, பருத்தி, செம்பருத்தி, கத்தாளை, பொன்னாங்காணி, கண்டங்கத்தரி, தசை நெகிட்டாள், கொடித்தோடை, தேசி என்றவகையில் சகலவகையான மூலிகை பயிர் இலைக்கறிவகை, பழப்பயிர்கள், அலங்காரத் தாவரங்கள், பூமரங்கள், மரக்கறி பயிர் இவைகள் உள்ளிட்ட அனைத்தும் உண்டாக்கப்பட்டிருப்பதோடு அவற்றின் பராமரிப்பும் நேர்த்தியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வீட்டுத்தோட்ட மாதிரியைப் பயிரிடும் அனைவரையும் அதே போன்ற ஒரு தோட்டத்தை தமது இல்லங்களிலும் உருவாக்க வேண்டும் என்ற உள்ளுணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

**விவசாயப் பயிர் செய்கைக்கான நாற்றுமேடை**

நவீன முறைகளை உள்ளடக்கிய விவசாய பயிர் செய்கைக்கான நாற்று மேடை அமைப்பு விவசாயிகளையும் பொது மக்களையும் பாடசாலை மாணவர்களையும் குறித்த துறைசார் நிலை விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் "பச்சை வீட்டுத் திட்டத்தை" உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது.

நவீன முறையில் நாற்று மேடைகளை உருவாக்கல் நல்லின பயிர் வகைகளை உற்பத்தி செய்தல் இலகு முறையில் பராமரித்தல், நோய்கள் பீடைகளின் தாக்கத்தை எதிர்கொண்டு நல்ல விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வகை செய்தல் என்றவகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

**தோட்டப் பயிர்ச் செய்கை**

பாரம்பரிய முறைகளில் ஊறிப்போன யாழ்.மாவட்ட விவசாயப் பயிர்ச் செய்கையில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த தக்க வகையில் பயிர் வகை மாதிரிகள் கலப்பினப் பயிர்ச் செய்கை, சேதனைப் பசளை உற்பத்தி, பயன்பாடு மண்புழு பசளை ஆக்கம் என்பனவற்றோடு தொடர்புபடுத்தி நவீன நீர்ப்பாசன முறைகள் ஊடாக மேற்கொள்ளுவதற்கு வழிப்படுத்து வனவாக மேற்கொள்ளப்பட்டிருப்பது பார்வையிடும் அனைவரையும் அந்தத்துறையின்பால் ஈர்ப்பதற்கு வகை செய்கின்றது.

*(தொடரும்)*




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுட்டுக் கொல்லப்பட்ட ஈழத் தமிழர்களை புதைக்க வழியின்றி பருந்துகள் கொத்தின

## இந்தியக் கம்யூ. பாண்டியன் தெரிவிப்பு

சென்னை, ஓக. 26

இலங்கையில் நான்கரை லட்சம் தமிழர்கள் வாழ்ந்த பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களை புதைக்க வழியின்றி சடலங்களைப் பருந்துகள் கொத்தித் தின்றன. 40 ஆயிரம் தமிழர்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். 2 ஆவது உலகப் போரைவிட இது கொடூரமானது.

- இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

வேலூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற தமிழ்மாநில கட்டட நிதி, கட்சி வளர்ப்பு நிதியளிப்பு பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் பல லட்சம் ஈழத்தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை எந்த ஊடகமும் படம் பிடித்து வெளிச்சம் போட்டுக் காட்டவில்லை.

நான்கரை லட்சம் தமிழர்கள் வாழ்ந்த பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களை புதைக்க வழியின்றி சடலங்களைப் பருந்துகள் கொத்தித் தின்றன.

40ஆயிரம் தமிழர்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். 2 ஆவது உலகப் போரை விட இது கொடூரமானது. ஆயுதம் வழங்கப்பட்டும் இந்திய இராணுவத்தின் துணையோடும் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தியாவில் 100 கோடி பேர் உள்ளனர். தமிழ்நாட்டில் 6 கோடி பேர் உள்ளனர். இலங்கையில் இரண்டரைக் கால் கோடி பேர் உள்ளனர். எதற்கும் இலங்கை பயப்படவில்லை.

நம்முடைய பல வீனத்தை யோசிக்க வேண்டும். வீரத்தை - தன்மானத்தை - பண்புகளை நாம் இழந்து வருகிறோம்.

- இப்படி அவர் கூறினார். (அ-சி)

# இராணுவத் தளபதியை உதாசீனம் செய்வோர் என்னை ஏளனம் செய்வது ஆச்சரியமல்ல!

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொண்ட இராணுவத் தளபதியை உதாசீனம் செய்த ஆளும் கட்சியினர், பயங்கரவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க 23 மாதங்கள் ஆதரவளித்த தம்மை ஏளனம் செய்வது ஆச்சரியத்திற்குரியதல்ல.

- இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஆளும் கட்சியின் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கருத்து வெளியிடுகையில் கரு ஜயசூரிய அர சிற்கு எதிராக ஆதாரமற்ற அறிக்கைகளை வெளியிடுகிறார் எனத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாகப் பதிலளிக்கையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய இவ்வாறு கூறினார்.

அரசு பொது எதிர்க்கட்சிக் கூட்டமைப்புப் பற்றிக் கவலை கொண்டுள்ளது. நாம் எவரையும் ஐக்கியதேசியக் கட்சியில் இணையுமாறு கேட்கவில்லை. நாம் நாட்டிலுள்ள அழுத்தமான பிரச்சினைகள் பற்றியும் சரத் பொன்சேகா பற்றிய முடிவுகள் தொடர்பான தர்க்கங்கள் பற்றியுமே கருத்து வெளியிட்டோம் - என்று கரு ஜயசூரிய கூறினார்.

தாம் யுத்தத்தை முடிவடையச் செய்வதற்காக 23 மாதங்கள் அரசுக்கு ஆதரவளித்தார் என்றும் அவர்கள் அதனை ஏளனம் செய்துவிட்டனர் என்றும் சொன்னார். வெற்றியைப் பெற்றுக்கொடுத்த இராணுவத் தளபதியை இவர்களால் மறக்கமுடியுமானால் தாமளித்த ஆதரவையும் மறந்துவிடுவார்கள் என்றும் அவர் கூறினார். (சி)

நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள் கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கால்மிதி பேசன்கள் போன்றவற்றை தரமான மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0215672061, 077 7578277.

# ஈர விழிகளுடன் ஈராண்டு



அமரர் செல்வன்
**சிவானந்தசுந்தரம் பிரேமதர்சன்**
(யூனியனடி, உடுப்பிட்டி)

மலர்வு 05.05.1988 — துயரில் 26.08.2008

திதி: அபர ஏகாதசி
(04.09.2010)

அன்புச் செல்வமே ஆருயிர் தர்சனே
முத்தான முத்தே முதல் முத்தே
வித்தாகி ஆண்டுகள் இரண்டானதுவோ
அன்பு, பண்பு, பக்தி, அறிவு கொண்ட உனை
காலன் கவர்ந்தழைத்தானோ
உன் அன்பு வதனம் சுட்டுப் பொசுக்கப்பட்டாலும்
எம் இதயத்தில் வீற்றிருக்கும் தெய்வம் நீ
உன் நினைவுகளும் எம் நெஞ்சை கனக்க வைக்கிறது
நாம் கையெடுத்த தெய்வங்களும் இரங்கவில்லை
உன் உயிர்துறப்பை தடுக்கவில்லை
பெற்றவர்களையும் உடன் பிறந்தவனையும் விட்டு
கற்பனைக்கெட்டாத் தூரத்திற்குச் சென்றாயோ
ஐயா எமக்கோ இவ்வுலகம் இருண்டுவிட்டது
உமைப் பிரிந்த பாவிகள் நாம் இங்கே........

நெல்லியோடை,
அச்சுவேலி.
(102426)

பிரிவுத்துயரில் தவிக்கும்
அப்பா, அம்மா, தம்பி.

# ஆஸியில் புகலிடம் மறுப்பு ஈழத் தமிழர் இருவர் வழக்கு

ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டிருக்கின்றமையை ஆட்சேபித்து ஈழத் தமிழர்கள் இருவர் அந்நாட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

அந்நாட்டு சட்டவிரோதமான முறையில் பிரவேசித்திருந்தமைக்காக இருவரும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் கிறிஸ்மஸ் தீவில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இப்போது அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட உள்ளார்கள். இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டால் அவர்கள் உயிராபத்தைக் கூட எதிர்கொள்ள நேரலாம் என்று இருவரும் நீதிமன்றுக்கு முறைப்பாடு செய்துள்ளார்கள். (சி)

# மணி விழா நாயகனை வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையில் 10 ஆண்டுகள் சேவை செய்து 25.08.2010 அன்று தனது சேவையிலிருந்து ஓய்வுபெறும் கணித ஆசான்

உயர்திரு
**சின்னத்தம்பி இராசேந்திரம்**
(பயிற்றப்பட்ட விசேட கணிதம்)
S.L.T.S-I

அவர்களையும் அவர்தம் சேவையையும் பாராட்டி வாழ்த்துவதில் பாடசாலைச் சமூகத்தினராகிய நாம் பெருமையடைகின்றோம். மேலும் அவர் ஓய்வுக் காலத்தில் நோய்நொடிகள் இன்றி சீரும் சிறப்பும் பெற்று அவர்தம் குடும்பத்தினருடன் பல்லாண்டு காலம் நலமாக வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சமூகம்
யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

# தம்புள்ள மைதானம் டெங்கு பரவும் வலயம்

கொழும்பு, ஓக. 26

தம்புள்ள சர்வதேச விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பிரதேசம் டெங்கு நுளம்புகள் பரவும் பிரதேசமாக இனங்காணப் படுகிறது என பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ள சர்வதேச விளையாட்டு மைதானத்தில் முக்கோண கிரிகெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

முன்னதாக போட்டிகளில் பங்குபற்றும் இந்திய வீரரான யுவ்ராஜ்சிங் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த திங்கட்கிழமை அந்தப் பிரதேசத்தில் சோதனைகளை மேற் கொண்டனர்.

இதன்போது பிரதேசத்தில் பல இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்கான ஏதுநிலைகள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து விளையாட்டு மைதானத்தை அண்டிய பகுதிகளை உடனடியாகச் சுத்தம் செய்யுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். (சி)

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் முருகேசு கனகசபை (ஆசிரியர்)

திதி: அபரபக்க துதியை

பதினைந்து ஆண்டுகள் சென்றால் என்ன
அப்பா உங்கள் அன்பினையும்,
அரவணைப்பினையும் இனி என்று
காண்போமோ.....
வாழ்க்கையின் ஆயிரம் விதமான அர்த்தங்கள்
புரியவைத்த நீங்கள் இன்று
நாம் வாழும் வாழ்க்கையை காணவில்லையே.
என ஏங்கும் மனைவி, பிள்ளைகள்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(102[illegible])

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அம்பலவாணர் குலசேகரம் J.P**
(இளைப்பாறிய நிலஅளவையாளர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

தோற்றம் 26.8.1937 — மறைவு 24.07.2000

என்றும் உங்கள் நினைவுடன்....
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.
(102409)

விரைவான பயண ஒழுங்கு

ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் வேலையுடனும்/வேலை இல்லாமலும் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
★ முற்பணம் இல்லை. ★ மிகக்குறைந்த செலவு.
உடன் தொடர்புகொள்ளவும்.
0724670551

தேவை

கைதடியில் இயங்கும் Lanka Filling Station ற்கு விற்பனை நிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு முகாமையாளரும் மற்றும் ஓய்வுபெற்ற கணக்காளரும், பம்பில் வேலை செய்பவர்களும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
Lanka Filling Station, Kaithady
([illegible] தொடர்பு கொள்ளவும்)
0777863024

# மரண அறிவித்தல்

## ஏகாம்பரம் மகாலிங்கம்



யாழ்/ அரியாலையை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் மகாலிங்கம் (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசமணியின் அன்பு மருமகனும், இரஞ்சினிதேவியின் அன்புக் கணவரும், குமரநாத், காயத்திரி, விதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல் -
சி.இராசமணி, (மாமியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் வைத்தியசாலைகளுக்கான சட்ட மூலங்கள் விரைவில் திருத்தப்படும்

கொழும்பு, ஓக.26

தனியார் மருத்துவமனைகளின் நிர்வாக சட்டமூலம் விரைவில் திருத்தப்படும். அதன்பின் அந்த மருத்துவமனைகளின் நிர்வாகத்தில் தலையிட சுகாதார அமைச்சுக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் - என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிரிசேன தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவமனைகளின் இயக்கத்துக்கான சட்டமூலமொன்று தற்போது அமுலில் இருந்த போதிலும் அவற்றின் நிர்வாகத்தில் சுகாதார அமைச்சு தலையிட வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் அதில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடெங்கும் இயங்கும் ஏராளமான தனியார் மருத்துவமனைகள் தன்னிச்சையாக செயற்படுகின்றன. கட்டண அறவீடு, தரம்குறைந்த மருந்துகள், கட்டணத்துக்கேற்ற வசதிகள் வழங்கப்படாமை போன்ற குறைபாடுகளுடன் இயங்கு கின்றன.

தற்போதுள்ள சட்டவிதிகளின்படி இந்த மருத்துவமனைகளின் நிர்வாகத்தில் தலையிட சுகாதார அமைச்சருக்கோ அமைச்சு அதிகாரிகளுக்கோ அதிகாரமில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவமனைகளில் தான் தோன்றித்தனமான கட்டணங்கள், தரம் குறைந்த மருந்துகள் பாவனை, கட்டணங்கள் பற்றிய பட்டியல்கள் காட்சிப்படுத்தாமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவ்வப்போது அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே சட்ட மூலத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(சி)

# உள்ளூராட்சித் தேர்தல் முறையில் திருத்தம்; அமைச்சரவையில் சமர்ப்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஓக. 26

உள்ளூராட்சிசபைத் தேர்தல் முறைமைகள் தொடர்பான சீர்திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தின் விசேட அமர்வின் போது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைகளின் திருத்தம் குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் இதனை அடிப்படையாக கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசு பேச்சு நடத்தியது. இத்னிடையே, நாளை அமைச்சரைவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதன்போது குறித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறை சீர்திருத்தம் தொடர்பான சீர்திருத்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

புதிய சீர்திருத்தத்தின் மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புதிய சீர்திருத்த யோசனையை அமைச்சரவை அங்கீகரிக்கும் பட்சத்தில் அது நாடாளுமன்ற அனுமதிக்காக முன்வைக்கப்படும்.

இதனடிப்படையில் மாநகரசபை, நகரசபை, மற்றும் பிரதேச சபை ஆகிய உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(அ-சி)

# சன்.சி. கப்பல் அகதிகளில் போரில் கையிழந்த பெண்

கொழும்பு, ஓக. 26

எம்.வி.சன்.சி. கப்பலில் கனடா சென்றிருக்கும் ஈழத் தமிழ் பெண் ஒருவர் யுத்தத்தின்போது ஒரு கையை இழந்துள்ளார்.

இப்பயணிகளில் குழந்தைகள் தவிர்ந்தோர் தனியாகச் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு சிறை வைக்கும்போது ஒவ்வொருவருக்கும் கனேடியப் பொலிஸார் கைகளில் விலங்குகளை மாட்டும் பணியில் ஈடுபட்டனர். பெண் ஒருவர் முன்பாக சென்று கைகளை நீட்டச் சொல்லி இருக்கின்றனர். அவர் ஒரு கையை மாத்திரம் நீட்டி இருக்கின்றார்.

மற்றக் கையையும் நீட்டச் சொன்னார்கள். அவரின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. போரில் மற்றக் கை துண்டிக்கப்பட்டு விட்டது என்று அவர் கதறிக் கொண்டே கூறினார் என்றும் கனேடியப் பொலிஸார் அவரின் அவலத்தை புரிந்துகொண்டு அவருக்கு விலங்கு மாட்டாமலேயே சென்றனர் என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரி விக்கின் றன.

(சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.26

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி சுகன்யா புலேந்திரகுமாரின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

திருமதி மதுரா பாலச்சந்திரன் வயலினும், பிரம்மஸ்ரீ கே.சுவாமிநாதசர்மா மிருதங்கமும், ஏ.செல்வரத்தினம் கடமும் வாசிப்பர்.

மேலும் செல்வி கிருஷ்ணி றமேஷ், செல்வி கார்த்திகா றமேஷ் ஆகியோரின் இசைக்கச்சேரி விசேட நிகழ்வாக இடம் பெறும்.

ஏ.ஜெயராமன் வயலினும்,ரமேஷ் சாய்ராம் மிருதங்கமும், செல்வன் என்.மாதவன் கஞ்சிராவும், எஸ்.செந்தூரன் முகர்சிங்கும் வாசிப்பர்.

(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழா காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'நக்கீரர் வாழ்வில் முருகன்' என்னும் தலைப்பில் நி.பகீரதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

அரியாலை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, பெரியவிளான் வடகேசரிப் பிள்ளையார் அற நெறிப் பாடசாலை, நாவற்குழி அறிவொளிமன்ற அற நெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு முத்தமிழருவி பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்த [illegible] ணம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## நல்லை ஈசனுக்குத் தலை தாழ்த்துவோம்

பர மனுக்கே குருவாகி உபதேசம் பண்ணினான் - வனப்
பாவை வள்ளியைத்தன் மனத்தினிலே எண்ணினான்
சூர பயங்கரன் எனத் தோன்றினான் - ஒளிச்
சுடர்விடும் வேலினைக் கையினில் தாங்கினான்
நீரச நயன விழி பூத்தவன் - தம்
நிலைகெட்ட தேவரைக் காத்தவன்
ஏரகச் செல்வனை வாழ்த்துவோம் - நல்லை
ஈசனுக்கே தலை தாழ்த்துவோம்

கா.கார்த்திகேசு,
நல்லூர்.

## அருளிட வாராயோ

'பரம்' என்று உனைத்தொழ
பாதையோ தெரியவில்லை
கரம் கூப்பி வரம் கேட்க - என்
கலக்கமும் தீரவில்லை - உன்
அருள் நாடி ஓடி வர இயலாமல் நான்

கதிகலங்கி நிற்கிறேன் - வேலா
பசி தீர்க்க உணவில்லை
படுத்துறங்க வீடில்லை
ஏரோடும் சீரோடும் வாழ்ந்த நாளின்று
வேரோடு சாய்ந்துவிட்டேன்

தொலைந்த என் வாழ்வும்
தொடரும் என் துன்பமும்
கலைந்து போகவே கதிர்வேலா
அருளிட வாராயோ!

திருமதி செ.பாக்கியநாதன்
வட்டுக்கோட்டை

## துள்ளி வருவான் துயர் துடைக்க

வண்ண மயிலேறும் வள்ளி மணாளனவன்
வெள்ளி வேலெடுப்பான் எம் துயர் - போக்கவே
அள்ளித் தருவான் நாம் தொழுதால் என்றுமவன்
துள்ளி வருவான் நம் துயர் துடைக்க விரைந்தோடி

து.ஜெயரூபன்
கந்தரோடை.

## நல்வரம் அளித்தே எனைக் காப்பாய்

அருள்தர வேண்டு மையா
பெருந்துன்பம் நீங்கி நல்லவாழ்வுபெற
அருள் தர வேண்டுமையா..

மருள் நிறை வாழ்வினில் மூழ்கியே தத்தளித்து
இருளெனும் ஆணவம் நீங்கவே என்றென்றும்
அருள் தர வேண்டுமையா..

பேராசை பிணியது பிடித் தலைந்திடாது
தீராத தீவினை என்னை அலைத்திடாது
நேரான நல்வழி தன்னையே பெற்றிட
சீரான நல்வரம் அளித்தே எனைக்காப்பாய்

கவிமணி கந்த முருகேசதாசனார்.

## இரு கையும் கூப்புவாய்!

நல்லை முருகனின் நாமம் உரைத்திடின்
இல்லை வருத்தம் இகமதில் - தொல்லை
தருபவர் தொலைதூரம் தானோடி மாய்வார்
இருப்பாய் துணிவுடன் இனி!

பக்கம் இருதேவியர் பன்னிரு கரங்களில்
எக்கும் அணிகலன்கள் எல்லாம் - பக்கபலம்
இடிவிழுந்த எங்களின் இன்னல் அனைத்தும்
பொடிப்பொடி எனப்போகும் பார்!

கற்பூரச் சட்டிகள் கால்பதிக்கும் இடமெலாம்
அற்புதமாம் அங்கப் பிரதட்டை - பொற்பதம்
முருகனின் பாலெம் முழுமனதை ஒப்படை
அருகிடும் துன்பங்கள் அறி!

துன்பம் இருக்கெனில் துலங்குதல் இன்பமோ
தன்மையை காட்டிடும் தகுதிகள் - என்றென்றும்
முருகையன் தார்ப்பரியம் முன்னால் தவிடுபொடி
இருகையும் கூப்பு வாய் இனிதே!

மூலபாரதி

## பார் உறங்கிப் போகாதே!

கார் உறங்கும் மலைகளிலே
கழனி எங்கும் நெல்லுறங்கும்
நீர் உறங்கும் குளங்களில்
நின்று உறங்கும் தாமரைப்பூ
பார் உறங்கிப் போகாமல்
பார்த்து அருளும் நல்லூர்க் குமரா வுன்
சீர் உறங்கும் பாதமதைச்
செயல் ஒடுங்கி வணங்குகிறேன்

செ.பரமநாதன்
மண்டைதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாத மேடை

## பஞ்சாபி அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

### தவறானது

பஞ்சாபி அணிந்து ஆலயங்களுக்கு செல்வது பற்றி பல கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. எனது கருத்து யாதெனில் பஞ்சாபி அணிந்து ஆலயங்களுக்குப் பெண்கள் செல்வது தவறானது என்பதே. பெரிய விழாக்களின் போதாவது நமது தமிழ் பண்பாட்டைப் பின்பற்ற வேண்டாமா. நமது இனம், மொழி, மண், கலாசாரம் இவையாவும் இழக்கப்பட கூடியவையா? எமக்கு வேண்டாதோர் இவற்றில் ஒன்றையேனும் அழிக்க முற்பட்ட வேளைகளில் நாம் எதிர்த்து போராடவில்லையா? அப்படியான நமது இனம் இன்று நமது கலாசாரத்தை அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டு நிற்பதா?

எமது தமிழ் மங்கைகளுக்கு சேலையின் அழகும் புனிதமும் வேறெந்த உடையிலும் கிடைக்குமா? நம் சிறுமியர் பாவாடை-தாவணி, பட்டுச்சட்டைகளில் பறந்து திரிகையில் கிடைக்கும் அழகும் ஆனந்தமும் இன உணர்வும் வேறெந்த உடைகளில் கிடைக்கும். உங்களுக்கு இவ்வுடைகள் தவிர்ந்த மேல்நாட்டு உடைகள் தான் விருப்பம் என்றால் நாம் என்ன செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்தில் 'தமிழ்வாழ்கிறது தமிழன் வாழவில்லை' என்று இந்திய அறிஞர்களும், அரசியல் வாதிகளும் கூறுகின்றனர். அவ்வகையில் தமிழை வாழவைத்த நாம் நம் தமிழ் கலாசாரத்தை அழிய விடலாமா? நாமே கலாசாரத்தை அழிப் பதா. நீங்கள் ஆலயம் தவிர்ந்த வேறெங்கும் உங்களுக்கு வசதியான விருப்பமான உடைகளை அணியுங்கள். கலாசாரம், பண்பாடு என்று நான் கூச்சல் போடவில்லை, புதுமைக்கேற்றபடி மாறுங்கள், புதுமை புகுமை இயல்பே எனினும் ஆண்டவன் சந்நிதியில் மட்டும் கலாசாரத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள். பொழுதுபோக்கு , களியாட்டங்களில் உங்களை யார் கலாசார உடை அணியச் சொல்வது. ஆனால் ஆண்டவனுக்கு மதிப்பளியுங்கள். சந்நிதானத்தின் புனிதத்தை பேணுங்கள். 'தாய்ப்பாலில் கிடைக்கும் சத்துக்களும், பாசமும் அயல்நாட்டு தயாரிப்புப் பாலில் கிடைக்குமா? அதுபோல் நம் இன உணர்வு பஞ்சாபியில் வெளிப்படுமா?

**க.மயூரன்**
மாதகல் வடக்கு, மாதகல்.

### சரியானது

ஆலயம் என்பது மனிதனது ஆன்மீகத் தூய்மைக்காக அமைக்கப்படுகின்ற இடம். இங்கு மனிதனது ஆடைக் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இடம் அல்ல. ஆன்மீகம் கவர்ச்சிக்குரியதாக, அழுக்காறு நிறைந்ததாக இல்லாதிருத்தல் அவசியமானது.

ஒரு நாட்டில் இனமொழி, சாதிபாகுபாடு இருத்தல் கூடாது எனக் கூறிவிட்டு பின் ஆலயங்களுக்குள் தமிழ்ப் பண்பாட்டு முறையில் நுழைதல் வேண்டுமெனக் கூறுதல் தவறானது. ஏனென்றால் இன்று பஞ்சாபியை விட நம் பண்பாட்டு ஆடைதான் கவர்ச்சிக்குரியதாக அமைகின்றது.

மாறும் உலகிற்கேற்ப தெய்வத்தின் ஆடை அலங்கார வர்ணனைகள் மாறும் பொழுது பெண்களது ஆடையில் சிறுமாற்றம் ஏற்பட்டு அது முழுமைப்படுத்தப்பட்ட பஞ்சாபி அணிவது தவறானது அல்ல. எனவே ஆலயங்களுக்கு பஞ்சாபி அணிந்து வருதல் சரியானது.

**ராஜசோபனா பரமயோகநாதன்**
18, புதுமை மாதா கோவில் மேற்குவீதி,
யாழ்ப்பாணம்.

## "க்ளோஸ் ஃபிரெண்ட்" வேணுமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆகவே கலவரப்படாதீர்கள்! எப்போதும் போல் சாதாரணமாக இருங்கள். மாறு வேடம் போடுவதால் பயனில்லை யதார்த்தமாக இயல் பாக இருப்பதை விட ஒருவரிடமுள்ள விரும்பத்தக்க குணங்கள் வேறெதுமில்லை. உண்மையிலேயே சந்தோஷமாக இருப்பவர்கள் பாசாங்கு செய்ய அவசியமில்லை, மற்றவர்களைக் கவரவும் அவசிய மில்லை. நாம் நாமாக இருப்பதன் மூலம் மட்டுமே யதார்த்தமான நட்பை அனுபவித்து மகிழலாம். அதேபோல் மற்றவர்களும் அவ்வாறே இருக் கும்படி விட்டு விடுவது அவசியம். மகிழ்ச்சியாக இருப்பவர்கள் மற்றவர்களை அவர்கள் இருக்கும் வண்ணமாக ஏற்றுக் கொள்கிறார்கள், சிறு சிறு குறைகளுக்குக் கவனம் செலுத்துவதில்லை. தங்களுடைய சொந்தக் கருத்துகளுக்கு ஏற்ப தங்களது நண்பர்களை மாற்ற முற்படுவதில்லை அப்படிப்பட்ட மகிழ்ச்சியுள்ள குறை காணாத நபராவதற்கு முயலுங்கள்.

நல்ல நண்பர்களைப் பெறுவதற்கு ஒரே வழி சுயநலமற்றவர்களாக இருப்பதும், நீங்கள் தாமே கொடுக்கும் நண்பராக இருப்பதும் தான். வேறு வார்த்தைகளில் சொன்னால், நண்பரைப் பெறுவதற்கு, நண்பராக இருக்க வேண்டும். இதில் வெற்றிகாண, கைமாறு கருதாமல் தன்னையே அளிக்க முன்வர வேண்டும். நம் நண்பர்களின் தேவை களை நம்முடைய விருப்பங்களுக்கும் வசதிகளுக்கும் மேலாகக் கருத வேண்டும். நெடுநாள் நண்பர்களாக இருந்து சந்தோஷம் காண்பதற்கு ஒருவரை யொருவர் மதித்து நடப்பது மற் றொரு அம்சமாகும். மதித்து நடப்பதற்கு, மற்றவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து நடப்பது அவசியம். உங் களுடைய நண்பர்களின் விருப்பங்களும் அபிப்பிராயங்களும் வித்தியாசப்படும் போது அவர்கள் சாதுரியமாகவும் விவேக மாகவும் நடந்து கொள்ள வேண்டுமென நீங்கள் விரும்புவீர்கள் இல்லையா? அப்படியானால் நீங்களும் அப்படித்தானே அவர்களிடம் நடந்து கொள்வீர்கள்? (வளரும்)



ஞா.சுகந்தி, கல்வயல்

## இளவல்கள் வட்டம்

'விவாத மேடைக்கு' விவாதங்களை அனுப்பிய அனைவருக்கும் நன்றிகளும், பாராட்டுக்களும். தொடர்ந்து விவாத மேடைக்கு உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். வாக்கு எண்ணிக்கையின் முடிவின் படி எந்த அணி வெற்றி பெற்றது என்பதனையும் சிறந்த ஆக்கமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விவாதத்தை அனுப்பிவரின் பெயரையும் அடுத்தவார இளவல்கள் வட்டத்தில் எதிர்பாருங்கள்.

### விவாதமேடை

மொபெட்ரக (49 CC) வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் போன்ற நடைமுறைகள்

தேவையா — தேவையற்றதா

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே "மொபெட்ரக(49cc)" வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள் தேவையா? தேவையற்றதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

### வேலை

பத்திரிகையில்
பதவி வெற்றிடம்
பார்த்துப் பார்த்து
நொந்துபோன - என்னிடம்
பல்கலைக் கழக
பட்டச் சான்றிதழ்
இப்போதுதான் தெரிகிறது
பட்டத்தை விட
பணமும், பரிவுமே
வேலை பெற்றுக் கொடுக்குமென...

**சோ.கிருபா**
மண்டைதீவு



கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

### இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

"மொபெட்ரக (49cc)" வாகனங்களுக்கு புதிதாய் அறிமுகப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள்

தேவையா ☐ தேவையற்றதா ☐

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
அடையாள அட்டை இல........................

உங்கள் தீர்ப்புகளை 30.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவாக, பிறப்பு, இறப்பு, காணி உறுதிப் பத்திரங்களைப் பெற இடம்பெயர்ந்த மக்கள் முல்லைத்தீவுக்கு அலைய வேண்டாம்

## சேவைகள் தொடர்பாகப் பிரதிப் பதிவாளர் நாயகம் விளக்கம்

முல்லைத்தீவு,ஓக 26

முல்லைத்தீவு மக்கள் விவாக, பிறப்பு, இறப்பு, காணி உறுதி என்பவற்றைப் பெறுவதற்கு முல்லைத்தீவுக்குப் போய் அலைய வேண்டியதில்லை. மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை காணிப் பதிவகங்களுடன் தொடர்பு கொண்டு அல்லது பிரதேச செயலகங்களில் மேலதிக மாவட்டப் பதிவாளருடன் தொடர்புகொண்டு வழிகாட்டல்களையும் வேண்டிய படிவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

நான் 17.08.2010 அன்று முல்லைத்தீவு சென்றிருந்தபோது மாவட்டப் பதிவகத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்தும் பருத்தித்துறையில் இருந்தும் வவுனியாவில் இருந்தும் மக்கள் வந்திருந்தனர். பிறப்புச் சான்று ஒன்றின் பிரதியை பெறுவதற்காக ஒரு பெண்மணி பருத்தித்துறையில் இருந்து வந்திருந்தார். காணி உறுதிபற்றி அறிந்து கொள்வதற்காக ஒரு வயதான பெரியவர் வவுனியாவில் இருந்து வந்திருந்தார். பதிவாளர் நாயகம் திணைக்களம் மக்களுக்காக பல வசதிகள் செய்திருக்கும் போதும் அறியாமை காரணமாக பணத்தையும் காலத்தையும் விரயமாக்கி கஷ்டப்படும் மக்களை நினைக்க வேதனையாக உள்ளது.

வசதிகள் மிக்க கொழும்பு போன்ற அலுவலகங்களிலேயே ஒரே நாளில் அலுவல்களை செய்து கொள்ளமுடியாத போது முல்லைத்தீவில் ஓரிரு மணியில் அலுவல்களை செய்ய முடியும் என எதிர் பார்த்து யாழ்ப்பாணத்தில் காலையில் பஸ் எடுத்து மதியம் 10,11 மணிக்கு முல்லைத்தீவு வரும் மக்கள் மாலை 3 அல்லது 4 மணிக்கு மீண்டும் பஸ் எடுத்து திரும்ப வேண்டும். அறியாமையில் மக்கள் கஷ்டப்படுவதைப் பார்க்கும்போது அவர்களுக்காகச்செய்யப்பட்டுள்ள வசதிகளை அவர்கள் முறையாகப் பயன்படுத்தாமை வேதனையாக உள்ளது.

தாங்கள் வசிக்கும் பகுதிக்குரிய மாவட்டப் பதிவகங்கள் மூலம் மக்கள் தங்கள் தேவையை சிரமமின்றி நிறைவேற்றலாம். சிறிது கால அவகாசம் தேவைப்படும் மக்களே விவாக, பிறப்பு, இறப்பு தொடர்பில் காணி உறுதி தொடர்பில் முல்லைத்தீவுக்குப் போய் அலையாமல், கஷ்டப்படாமல் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை காணிப் பதிவகங்களுடன் தொடர்பு கொண்டு அல்லது பிரதேச செயலகங்களில் மேலதிக மாவட்டப் பதிவாளருடன் தொடர்புகொண்டு வழிகாட்டல்களையும் வேண்டிய படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விவாக, பிறப்பு, இறப்புப் பத்திரங்களின் பிரதிகளை தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் உதவிப் பதிவாளர் நாயகத்தை சந்தித்து வேண்டிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். நூற்றுக்கு நூறு வீத சேவைகளை வழங்க முடியாத போதும் எம்மாலான சேவைகளை எமது சக்திக்குட்பட்ட வரையில் வழங்குவோம்.

வடக்கு மாகாண அலுவலகங்கள் யாவும் ஆளணிப் பற்றாக்குறையுடன் செயற்படுபவை என்பது யாவரும் அறிந்ததே. அதே பற்றாக்குறை மாவட்டப் பதிவகங்களிலும் உண்டு. அங்கு கடமையாற்றும் அலுவலர்கள் ஓய்வின்றி இரவிலும் விடுமுறை நாள்களிலும் கடமையாற்றியே மக்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஆதலால் மக்கள் அவசரப்படாமல் தங்கள் தேவைகளுக்கான விண்ணப்பங்களை கால அவகாசத்துடன் சமர்ப்பித்து தேவையை நிறைவேற்றுதல் பொருத்தமானதாகும்.

எமது திணைக்களம் தொடர்பில் சரியான முறையில் தங்கள் தேவை நிறைவேறாதவிடத்தும் நீண்ட காலதாமதமாகும் போதும் தலைமை அலுவலகத்துடன் தமிழ்மொழிமூலமே தொடர்பு கொள்ளலாம்.- என்றார். (த)

## பூநகரியில் நடந்த ஏர்பூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.26

பூநகரி, செல்லையா தீவில் ஏர்பூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் இலங்கை கமநல அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-எ-10)

## முல்லைத்தீவு மக்கள் வங்கியின் பணவைப்புக்கள் மீளளிக்கப்படும்

முல்லைத்தீவு,ஓக 26

முல்லைத்தீவு மக்கள் வங்கிக்கிளை மூடப்படுவதற்கு முன்னர் தங்க நகைகளை அடகு வைத்த மற்றும் பண வைப்பீடுகளை மேற்கொண்டிருந்த வாடிக்கையாளர்களுக்கு அவற்றின் பெறுமதிகளை மீளளிப்பதற்கு மக்கள் வங்கி தயார் நிலையில் இருப்பதாக மக்கள் வங்கித் தலைவரான டபிள்யூ. கருணாஜீவ தெரிவித்துள்ளார்.

அண்மையில் மக்கள் வங்கியின் முல்லைத்தீவு கிளை மீளவும் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி வங்கிக் கிளை 1963 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டிருந்தது. பின்னர் போர் உச்சம் பெற்றதோடு 1980 களில் அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## முழங்காவில் வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா

முழங்காவில், ஓக.26

முழங்காவில், கிருஷ்ணாநகர் வெங்கடேசப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாலயத்தின் உற்சவமூர்த்தி வேங்கடேசப் பெருமான் போரின்போதும் இடப்பெயர்வின்போதும் மக்களோடு சேர்ந்து இடம்பெயர்ந்து அபயமளித்தார். அத்துடன் இராமநாதன் இடைத்தங்கல் முகாமிலும் எழுந்தருளியிருந்தார்.

மக்கள் மீளக் குடியமர்ந்ததைத் தொடர்ந்து ஆலயம் புனரமைக்கப்பட்டு திருக்குடமுழுக்குப் பெருவிழாவிற்கான ஆயத்தங்களை அடியவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி செவ்வாய்க்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் மறுநாள் கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளன.

கும்பாபிஷேகத்தன்று மாலை 5 மணிக்கு உறியடி உற்சவமும் இடம் பெறவுள்ளது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் உள்ளிட்ட சமயப் பெரியார்களும் அரசியல் பிரமுகர்களும் கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (த)




## மன்னார் வாழ் முஸ்லிம்களுக்கு நோன்பு கால உணவுப் பொதிகள்

மன்னார், ஓக 26

முஸ்லிம்களின் புனித ரம்ழான் நோன்பு காலத்தை ஒட்டி மன்னார் வாழ் முஸ்லிம் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

மன்னாரில் மீள்குடியேறிய நிலையில் வாழ்ந்துவரும் முஸ்லிம் குடும்பங்களுக்கு அவர்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் உள்ள ஜும்மாப் பள்ளிவாயில்கள் ஊடாக இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் றிஷாட் பதியுதீனின் ஏற்பாட்டில் இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருவதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வழங்கப்பட்டு வரும் உலர் உணவுப்பொதியில் 10 கிலோ அரிசி, ஒரு கிலோ சீனி, ¼ கிலோ தேயிலை , ஒரு கிலோ பருப்பு மற்றும் ஒரு கிலோ பேரீச்சம்பழம், 400 கிராம் பால்மா பக்கெற் என்பனவும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேறியிருக்கும் சுமார் இரண்டாயிரம் முஸ்லிம் குடும்பங்களையும் இலக்காகக்கொண்டு இவைகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-80)

## கிளிநொச்சியில் செவ்வாயன்று மக்கள் மீள்குடியேற்றம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் நேற்று முன்தினம் மேலும் ஒரு தொகுதி மக்கள் மீள் குடியேற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் தங்கியிருந்தவர் கள் நேற்றையதினம் மீள்குடியேற்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என கிளிநொச்சி மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், கனகபுரம், மற்றும் ஜெயந்திநகர் ஆகிய பகுதிகளிலேயே நேற்று மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை வவுனியா மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து மெனிக் ஃபார்ம் நிவாரண முகாமில் தங்கியிருந்த அனைவரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ர)



அண்மையில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட மட்ட ஆங்கிலதினப் போட்டியில் முதலிடங்களைப் பெற்றுக்கொண்டபோட்டி நிகழ்வுகள் மாவட்டமட்ட அதிபர்கள் முன்னிலையில் காட்சிப்படுத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்களின் பிறந்தநாள் பரிசு நாடகத்தில் ஒரு காட்சியையும், முழங்காவில் மகாவித்தியாலய மாணவர்களின் குழுப்பாடல் நிகழ்வின் காட்சியையும் முதலிரு படங்களிலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: உமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.09.1993

* விடுதலைப் புலிகளுக்கு 800கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு வரும் இரு கப்பல்கள் இந்து சமுத்திரத்திற்குள் பிரவேசித்திருப்பதாக 'இன்ரர்போல்' எனப்படும் சர்வதேச பொலிஸ் பிரிவு இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.
* கடந்த வாரம் அமைச்சர் தொண்டமான் திடீரென இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

17.09.1993

* அனுராதபுரத்திலிருந்து கடந்த சில நாள்களாக மேலதிக துருப்புகள் நாளாந்தம் பலாலிக்கு அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.
* சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச மதிய உணவுத் திட்டம் அடியோடு நிறுத்தப்பட்டு விட்டதாக நேற்று அரச தரப்பு அதிகாரி ஒருவர் தெரிவிப்பு.

18.09.1993

* நிதியமைச்சர் பதவியை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தொடர்ந்து தம்வசம் வைத்திருப்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே பிணக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள முகாம்களிலும், கிராமங்களிலும் வாழும் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 93சதவீத மானவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

19.09.1993

* தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் முயற்சியைக் கைவிட்டு அரசியல் தீர்வொன்று காண முயற்சி மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைச் சந்தித்த யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வலியுறுத்து.
* ஐ.நா.பொதுச்சபையின் 48ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத் தலைமையிலான குழு நியூயோர்க் புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிப்பு.

20.09.1993

* முல்லைத்தீவு மாவட்டம் மாத்தளன் கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்த பொது மக்கள் மீது 'புக்காரா' விமானங்கள் நடத்திய தாக்குதலில் 13 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானதாகத் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்றுடனேயே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்த இனிமேல் யாழ்ப்பாணம் செல்வேன் என அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவிப்பு.

21.09.1993

* பாடசாலை மாணவர்களை இராணுவத்தில் சேர்க்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாக இராணுவ உயரதிகாரி ஒருவர் வவுனியாவில் வைத்துத் தெரிவிப்பு.
* நாட்டில் நிலவுவது தீவிரவாதப் பிரச்சினையே ஒழிய இனநெருக்கடி அல்ல என்ற ஜனாதிபதி விஜேதுங்காவின் பேச்சுக்கு சிங்கள பாதுகாப்புச் சங்கத் தலைவர் காமினி ஜெயசூரிய பாராட்டுத் தெரிவிப்பு.

22.09.1993

* ஜே.வி.பியினரும் தமது சகோதரர்களே எனத் தெரிவித்திருப்பதன் மூலம் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, ஜே.வி.பியினரையும் தம் பக்கம் திருப்பும் முயற்சியில் ஈடுபட்டு இருப்பதாக விமர்சிப்பு.
* யாழ்.குடாநாட்டில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிப்பு.

23.09.1993

* இப்போது இணைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரித்து தனித்தனி மாகாண சபைகள் அமைக்க வேண்டுமென இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையில் சிபார்சு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.
* இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கும் வாய்ப்புக்கள் குறித்து ஆராயவென சுவீடனில் இருந்து மூவர் கொண்ட குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிப்பு.

24.09.1993

* இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது நடத்தும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகத்தில் பெரும் போராட்டம் வெடிக்கும் என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எச்சரிக்கை.
* நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வல்லாது பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்படவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீத் தெரிவிப்பு.

25.09.1993

* வடக்குக் கிழக்கு யுத்தத்தை வேகமடையச் செய்வதற்காக அரசு படையினருக்கான சேமநல வாய்ப்புக்களை ஊக்குவிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.
* மன்னார் - மடு அகதி முகாமில் தங்கியுள்ள செட்டிகுளம் பகுதி மக்கள் நேற்று முன்தினம் நிவாரண நிறுத்தத்தை ஆட்சேபித்து ஐ.நா. தூதரக அலுவலகம் முன்பாக நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக அப்பகுதியிலுள்ள ஐ.நா.அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

26.09.1993

* மட்டக்களப்பு மாவட்டம் - வெலிக்கந்த பிரதேசத்தில் உள்ள பொலிஸ் காவல் நிலை மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அதிரடிப் படையின் ஏழு கொமாண்டோக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.
* யாழ்.மாவட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகள் குறித்து யாழ்.அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

27.09.1993

* எமது இறைமையை நிலைநாட்ட தரைப்படை, கடற்படை என்பவற்றுக்கு மேலதிகமாக விரைவில் விமானப்படை ஒன்றை அமைக்கப் போவதாக நேற்று நல்லூரில் நடந்த தியாகி திலீபன் நினைவுக் கூட்டத்தில் கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆதவன் தெரிவிப்பு.
* திருகோணமலை மாவட்டம் மொறவெவ விமானத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் பல படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

28.09.1993

* ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, மன்னார் மற்றும் முல்லைத்தீவுப் பகுதியை ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* சர்வதேச விழிப்பு இயக்கத்தின் உயர் பிரதிநிதியான செல்வி பிலிப்சன் இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிப்பு.

29.09.1993

* சாவகச்சேரி - சங்கத்தானையில் 'புக்காரா' விமானம் நடத்திய தாக்குதலில் மரக்காலை ஒன்றிலிருந்த பதுங்குகுழி இடிந்து மண்ணினால் மூடப்பட்டதில் அப்பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்திருந்த 20 பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.
* நந்தாவில் அம்மன் கோயில் மண்டபத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் மூன்று பெண்கள் உடல் சிதறிப் பலியானதாகத் தெரிவிப்பு.

30.09.1993

* பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று காலை முதல் நண்பகல் வரை மேற்கொள்ளப்பட்ட செல் தாக்குதலில் 7பேர் உயிரிழந்ததாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிப்பு.
* நேற்று இரண்டாவது நாளாகவும் ஆனையிறவு இராணுவத் தளத்திலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 60இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

# நல்லூர் ஆலயத்தின்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய சிறப்புகள் பொருந்திய ஒரு ஆலயத்தை உள்ளூரிலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இந்து மதத்தவர்கள் மட்டுமல்ல, பிற மதத்தவர்களும் வந்து தரிசிப்பது என்பது உண்மையில் வரவேற்கத்தக்கதே. ஆயினும் இன்று நல்லூர் முருகன் ஆலய வீதிகள் எல்லாம் தென்பகுதியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகளால் நிறைந்து காணப்படுகின்றன. வாகன நெரிசல், அடுப்புப் புகைகள் என்று விடுமுறை தினம் வந்தாலே விழாக்கோலம் பூணுகின்றது. நல்லூர் ஆலய சுற்றாடல் கோயில் உட்பிரகாரத்திலும் வெளி வீதிகளிலும் சிங்கள மற்றும் முஸ்லிம் இன மக்கள் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர். எமது மதத்துக்கு என ஒரு கலாசாரம் உள்ளது. பண்பாடு, விழுமியம் கூட உண்டு. அவையெல்லாம் பேணப்பட வேண்டும் என்பதை நாம் விரும்புவது இயற்கையே.

வேற்றிடங்களில் இருந்து வருகை தருவோர் தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்து வருதல் தவறல்ல. ஆயின் எமது சமய நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகின்றது. புலால் மறுத்தல் எமது சமயம் கூறும் வாழ்வியல் தத்துவம். இன்று பலரும் புலாலை மறுக்க மறுத்தாலும் ஆலயத்துக்குப் புலால் மறுத்தே செல்கின்றனர். நம்மவர்கள் குளித்துத் தோய்த்துலர்ந்த ஆடை தரித்து ஆலயம் சென்றாலோ அயலில் நிற்பவர் மாமிசம் புசித்து விட்டு (குளித்துத் தோய்த்துலர்ந்த ஆடை தரிப்பதை விட) வந்து நிற்பது மனதிற்கு மிக வேதனை தருவதாக உள்ளது.

அது மட்டுமன்றி எமது மதத்தில் பெண்கள் மாதவிலக்குக் காலங்களில் ஆலயம் செல்வதும், மரணம், பிறப்பு போன்ற கருமங்கள் நிகழ்ந்தால் 31 நாள்கள் உட்பிரவேசியாததும் கட்டாயமாக் கப்பட்டது. இவ்வாறான நடைமுறைகள் வருகின்ற வெளியாருக்கும் தெரியாமல் இருக்கலாம். அவற்றைத் தெரியப்படுத்தும் போது பல வேண்டாத விளைவுகள் தவிர்க்கப்படமுடியும்.

பல்லினச் சமூகம் வாழும் இந்நாட்டில் மதப் பொறை என்பது மிக அவசியமானதாகும். ஆக நிர்வாகத்தினர் ஆலயங்களின் நடைமுறைகளை, அங்கு தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை மூன்று மொழிகளிலும் உரிய முறையில் விளம்பரப்படுத்துதல் அவசியமானது. அத்துடன் இந்து கலாசாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மூலமாக இந்து சமய நடைமுறைகள் நாடாளுமன்றம் வரை எதிரொலிப்பதன் மூலம் இக் கோவிலுக்கு வருகை தருகின்ற வெளியார் இங்கு கடைப்பிடிக்கப்படவேண்டிய நடைமுறைகள் குறித்துத் தெரிந்து கொள்ள வழியேற்படும். அதன் மூலம் இந்து மக்களின் மனங்களில் மூளாத் தீப்போல் புகைந்து கொண்டிருக்கும் விடயங்களைச் சுலபமாகத் தீர்த்துக் கொள்ள முடியும். எல்லோரும் இன்புற்றிருக்க மத ரீதியாக ஏற்படக் கூடிய மனக் கசப்புகள் நீக்கப்படல் கட்டாயமானது.




யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கொய்யாத்தோட்டம், புதுவீதி

**திருவருள் ஸ்ரீ ஞானச்செல்வ விநாயகராலய**

**புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ**

**மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து

விநாயகப் பெருமான் அடியார்களே!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்கள விகிர்தி வருடம் ஆவணி மாதம் 13 ஆம் திகதி (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியும், ரேவதி நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 6 மணி 20 நிமிடம் முதல் 7 மணி 20 நிமிடம் வரையுள்ள சிங்க லக்ன சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீஞான செல்வ விநாயகரிற்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் அன்றும் அதற்கு முதல் மூன்று நாள்கள் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து விநாயகரருளினால் எல்லாச் செல்வங்களும் பெற்றுச் சிறப்புற வாழ்வார்களாக.

மஹா கும்பாபிஷேக கிரியைகள் யாவும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

## கிரியா கால நிகழ்வுகள்

**ஆவணி மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (27.08.2010)**

காலை 6மணிக்கு கும்பாபிஷேக கிரியாரம்பம்: விநாயகர் வழிபாடு அனுக்ஞை முதல் வாஸ்துசாந்திவரை, பி.ப. 3 மணிக்கு இரட்சா வந்தனம், கடஸ்தாபனம், கலாகஷணம், யாகாரம்பம், நவாக்னிபூஜை, தீபாராதனை, 7 மணி 27 நிமிடம் முதல் 8 மணி 27 நிமிடத்துக்குள் தூபி, தீப, யந்திர, விம்பஸ்தாபனங்கள் அஸ்டபந்தனம் தைலாப்யங்கள்,

**ஆவணி மாதம் 12 ஆம் திகதி (28.08.2010) சனிக்கிழமை**

காலை 6 மணிக்கு பக்தர்கள் எண்ணெய்க் காப்பு ஆரம்பம்
காலை 7 மணிக்கு யாகபூசை, விசேட திரவிய கோமம், யாகதீபாராதனை,
மாலை 3 மணிக்கு பக்தர்கள் எண்ணெய்க்காப்பு பூர்த்தி, ஆலயசுத்தி, பிம்ப சுத்தி, ரட்சாபந்தனம், பூர்வசந்தானம், பச்சிம சந்தானம், யாகதீபாராதனை, குருமார்களுக்கு வஸ்த்ர, உத்தரீய உஷ்ணீச விபூதிப் பைகள் வழங்கிக் கௌரவித்தல்.

**ஆவணி மாதம் 13 ஆம் திகதி (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை**

அதிகாலை 5.30 மணிக்கு மகா பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சிணம், 6.20 மணிக்கு தூபிகள் கும்பாபிஷேகம், 7.20 மணிக்குள் நடைபெறும்.

மகா கும்பாபிஷேகம் தரிசனம், ஆசீர்வாதம் நடைபெறும் மஹாபிஷேக தீபாராதனை, விநாயகர் திருவீதியுலா, பிரசாதம் வழங்கல் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பவர்
**சிவஸ்ரீ மா.சோமசுந்தரக் குருக்கள்** (காயத்திரி பீடம், இணுவில்.)

குறிப்பு : கும்பாபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர், இளநீர், கரும்பு, பழவகைகள், நெய், தேன் என்பவற்றை ஆலயத்தில் கொடுத்தும் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகத்தில் கலந்துகொண்டும் எம்பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொள்வீர்களாக.



விநாயகர் தொண்டில் நிற்கும்:
ஆலய பரிபாலன சபையும் இந்து இளைஞர் மன்றமும்

அன்பர்கள், அடியார்கள், உபயகாரர்கள்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

புதுவீதி கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(திரு.கோ.தியாகராஜா, தலைவர்)
(திரு.கு.இராஜசிங்கம், செயலாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் வீரர்கள் கலந்துகொள்ளும் பயிற்சி முகாம் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில்

## தேசிய பயிற்றுவிப்பாளர்களும் வருகிறார்கள்

வலி.வடக்கு,ஓக.26

இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படவுள்ள பாடசாலை அணிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருக்கான பயிற்சி முகாம் அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி முகாமை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வடமாகாண கல்வித் திணைக்களத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

இப்பயிற்சி முகாமில் இலங்கை தேசிய பயிற்றுவிப்பாளர்களுடன் ஏனைய தென்னிலங்கைப் பயிற்றுவிப்பாளர்கள், வடமாகாணப் பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இப்பயிற்சி முகாமில் சுமார் 300 வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஆண்டை விடக் கூடிய பெறுபேறுகளைத் தேசிய மட்டத்தில் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

## உடுவில் சிந்து வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக26

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 2010ஆம் ஆண்டுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் செவ்வாய்க்கிழமை உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

இதில் இணுவில் இந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி களம் இறங்கியது.

இதில் உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணியை 7:3 புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டது. (6-23)




## உதயசூரியன் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக.26

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தின் 59 ஆவது நிறைவையொட்டி தீவக ரீதியில் நடத்தப்பட்ட 4 பேர் பங்கு கொண்ட ஓவர்கேம்' கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அம்பிகை நகர் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

இதில் அம்பிகைநகர் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழக அணியை அம்பிகைநகர் உதயசூரியன் அணி 20:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.26

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் கனகரத்தினம் பாலகிருஷ்ணா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

மாலை 6.30 மணி

* அச்சுவேலி ஸ்ரார் வி.க. எதிர் யாழ். பல்கலைக்கழக அணி

இரவு 8 மணி

* அச்சுவேலி அம்மன் வி.க. எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. (த-23)

# குருநாகலில் அடுத்த மாதம் வலைப்பந்தாட்டம்; யாழ்ப்பாணத்திலிருந்து 9 அணிகள் களமிறங்கும்

வலி.வடக்கு,ஓக.26

இலங்கை விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை குருநாகல் வெலகெதர விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து 9 அணிகள் பங்குபற்றவுள்ளன.

15,17,19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள இப்போட்டிகளில் சுமார் 345 வீராங்கனைகள் ஒன்பது மாகாணங்களில் இருந்தும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

வடமாகாணத்திலிருந்து 15 வயதுப் பிரிவில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அணிகளும்-

17 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் அணிகளும்,

19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி,மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றின் அணிகளும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளன.

வடமாகாணப் பாடசாலைகளின் சார்பாக அனைத்துப் பிரிவுகளிலும் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளே கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-86)

## எழுவை தீவு பற்றிமாவை வென்றது றெட்-றேஞ்சர்ஸ்

யாழ்ப்பாணம்,ஓக26

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தின் 59 ஆவது தின ஆண்டு நிறைவையொட்டி தீவகரீதியில் நடத்திய 6 பேர் கொண்ட 'செற்ரப்' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

இதில் ஊர்காவற்றுறை றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எழுவைதீவு பற்றிமா விளையாட்டுக்கழக அணிமோதியது.

இதில் எழுவைதீவு பற்றிமா விளையாட்டுக்கழக அணியை ஊர்காவற்றுறை றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

## பல்கலைக்கழக அணியுடனான ஆட்டத்தில் 73 ஓட்டங்களுக்குள் சுருண்டது பற்றீசியன்ஸ்

யாழ்ப்பாணம்,ஓக26

யாழ். பல்கலைக்கழக அணியுடனான ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 73 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 ஓவர் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி, 24.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது.

விதுபாலா 10 ஓட்டங்களையும், சுதர்சன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். பல்கலைக்கழக அணி வீரர்களான சஞ்ஜீவன் 7 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும், ஜெயறூபன் 5 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

74 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய யாழ். பல்கலைக்கழக அணி ஒரு விக்கெட்டினை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெயறூபன் 35 ஓட்டங்களையும், பிரகாஷ், லவன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 28,25 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரரான முரளி 2 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். (த-23)

## தேசியக் கரப்பந்தாட்ட அணியில் மகாஜனக் கல்லூரி மாணவி புகழரசி

யாழ்ப்பாணம்,ஓக26



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி பாலச்சந்திரன் புகழரசி இலங்கை கனிஷ்ட பெண்கள் கரப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய கரப்பந்தாட்ட அணிக்குத் தெரிவான முதல் தமிழ்ப் பெண் இவராவார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை வியட்நாமில் நடைபெறவுள்ள 15 ஆவது ஆசிய கனிஷ்ட பெண்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குகொள்வதற்காக அங்கு பயணமாகும் இலங்கை அணியில் இவரும் இடம்பெற்றுள்ளார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த புகழரசி பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் சிறப்பாக விளையாடித் திறமைகளை வெளிக்காட்டிப் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

டி.எஸ்.ஐ நிறுவனத்தால் அண்மையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் இவர் சிறப்பாகச் செயற்பட்டதையடுத்து இவரது திறமையை இனங்கண்ட யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினர் இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு இவரைத் தேசிய அணியில் இணைத்துக் கொள்ளச் சிபார்சு செய்தனர். இதனையடுத்து கனிஷ்ட பெண்கள் அணியில் இடம்பெற இவருக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவரின் கரப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளர்களாக சி.தயாளபாலன், சி.கமலமோகன் ஆகியோர் விளங்குகின்றனர். (த-23)





வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஹொக்கிப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட யாழ். மாவட்டப் பெண்கள் அணியினரையும், இரண்டாம் இடத்தைப்பெற்ற வவுனியா மாவட்டப் பெண்கள் அணியையும் படங்களில் காணலாம். (படங்கள்:தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை - பன்னாலை
திருவருள் மிகு வரத்தலம்
# கற்பக விநாயகர்
தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம்

விகிர்தி வருடம் - 2010

**உற்சவகால நிகழ்வுகள்**

★ ஆவணித் திங்கள் 12 ஆம் நாள் (28.08.2010) சனிக்கிழமை மு.ப. 10.45 மணி கொடியேற்றம் பி.ப. 5மணி மஹா யாகாரம்பம்
★ ஆவணித் திங்கள் 19 ஆம் நாள் (04.09.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணி வேட்டைத் திருவிழா
★ ஆவணித் திங்கள் 21 ஆம் நாள் (06.09.2010) திங்கட்கிழமை இரவு 8 மணி சப்பறம்
★ ஆவணித் திங்கள் 22 ஆம் நாள் (07.09.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணி தேர்
★ ஆவணித் திங்கள் 23 ஆம் நாள் (08.09.2010) புதன்கிழமை மு.ப. 10 மணி தீர்த்தம்
★ ஆவணித் திங்கள் 24 ஆம் நாள் (09.09.2010) வியாழக்கிழமை மு.ப.9 மணி பிராயச்சித்த அபிஷேகம்; பி.ப.3 மணி வைரவர் பொங்கல்.

குறிப்பு : காலை 8.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் உற்சவம் தொடர்பான நிகழ்வுகள் ஆரம்பமாகும்

அடியார்கள் வருக! ஐங்கரன் அருள் பெறுக!!

பன்னாலை,
தெல்லிப்பழை.

பிரம்மஸ்ரீ ம.மகேந்திர சர்மா, பிரம்மஸ்ரீ ச.கணேசானந்த சர்மா பிரம்மஸ்ரீ க.சிவானந்த சர்மா, திருமதி லலிதா சிவானந்த சர்மா, ஆதீனகர்த்தாக்கள்.
(570153)


# சோலை வரி மதிப்பீடு ஆரம்பம்

சண்டிலிப்பாய், ஓக.26

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் கிராமத்தில் சோலைவரி மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து வந்த உத்தியோகத்தர்களும் மானிப்பாய் கிராம அலுவலக உத்தியோகத்தர்களும் இணைந்து இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகச் சோலைவரி மதிப்பீடு செய்யப்படாமல் இருந்ததினால் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு வலி.தென்மேற்கு பிரதேசபை செயலாளர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையினால் தற்பொழுது சோலை வரி மதிப்பீட்டு வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வீடு வீடாகச் செல்லும் உத்தியோகத்தர்கள் வீட்டு விஸ்தீரணம் மற்றும் விவரங்களையும் பதிவு செய்து வருகிறார்கள்.

(ஒ-115)

## பாம்பு வடிவில் வேப்பமரக் கிளை

முறிகண்டி,ஓக.26

கிளிநொச்சி அக்கராயன்குளம் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கங்காதரன் குடியிருப்பில் வேப்ப மரத்தில் பாம்பு வடிவில் கிளையொன்று காணப்படுகிறது.

இதனைப் பார்க்க அங்கு மக்கள் கூட்டம் தினமும் சென்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1219 நீலம்

08 15 27 54 — 24-08-2010 — மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 144,255 | 20/- | 2,885,100/- |
| 2 இலக்கங்கள் | 13,237 | 40/- | 529,480/- |
| 1 இல. + லக்கினம் | 13,148 | 60/- | 788,880/- |
| 2 இல. + லக்கினம் | 1,213 | 200/- | 242,600/- |
| 3 இலக்கங்கள் | 346 | 1000/- | 346,000/- |
| 3 இல. + லக்கினம் | 36 | 10,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | - | 200,000/- | - |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 5,152,060/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 389 | | 294,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 172,624 | | 5,446,060/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,644,100/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

02 07 09 24 — தனுசு

ஜக்பொட் பரிசு ரூபா. 1,300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 388 | 500/- | 194,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 100,000/- | 100,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 389 | | 294,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,400,000/-



## ஆள் தேவை

AAA Ventures Pvt Ltd நிறுவனத்திற்கு கணனியில் தமிழ் Typing தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும் (பெண்) முன் அனுபவமும் ஆங்கில அறிவும் விரும்பத்தக்கது. தொ.பே. 0213734742, 0213207386

## மணமகள் தேவை

யாழ்.நகரில் சொந்தமாகக் கடை நடத்தும் 50 வயது, இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு 40 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். 021 2227217, 077 0711365, 0775396682

## கணனி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணனிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்கள் வீடுகளுக்கு வந்து உரிய முறையில் திருத்தித் தருகின்றோம். (Computer Repair).

அழையுங்கள்: 0777485840

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் தொடர்ச்சியாக 3வருட கட்டட வேலைக்காக மேசன், கூலியாள்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 9788781
077 9116207
0778001987






#92 Brown Road, Jaffna 021 373 4742, 021 320 7386 aaamoviesintl@hotmail.com


## நன்றி செலுத்தும் ஆராதனை

மண்ணுலகில்:
11.06.1946

விண்ணுலகில்:
28.07.2010





### திருமதி
### கிருபாநிதி பவசிங்கம்

*ஏன்? எதற்கு? இப்போது?*
*இப்படியுமா? உங்களுக்கா?*
*கேள்விகள் ஆயிரம் எழுந்தன மனதில்*
*விடைதான் இன்னும் கிடைக்கவில்லை அம்மா!*
*இறைபதம் அடையும் ஆவலா? - இல்லையேல்*
*துணைவனைப் பிரிந்த சோகமா?*
*புரியவில்லை அம்மா!*
*குடும்பத்தின் ஒளிவிளக்காய் - எமக்கு*
*எல்லாமாய் இருந்த நீங்கள் - இன்று*
*இல்லாது போனதென்ன?*

*உங்கள் சிரிப்பை, நடையை, அன்புப் பார்வையை, கனிவான கண்டிப்பை, ஆசை வார்த்தையை,மெல்லிய தொடுகையை, அரவணைப்பை, ஆற்றலை, ஆளுமையை, அறிவை, பண்பை, பாசத்தை இழந்த நாம் இன்றும் திகைத்து நிற்கிறோம் நடைப்பிணமாய் வாழ்கிறோம்.*

*அம்மா! ஒன்றுமட்டும் சத்தியம்*
*உங்களைப்போல் இவ்வுலகில் எங்களுக்கு இனி யாருமில்லை.*

*கடந்த 28.07.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்பு அன்னையின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டோருக்கும் அஞ்சலிகள் செலுத்தியோருக்கும் உரிமையுடன் தோள்கொடுத்து உதவியோருக்கும் எமது இதயங் கலந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (26.08.2010) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எமது உடுவில் இல்லத்தில் நடைபெறும் அன்னாரது வாழ்க்கைக்காக நன்றிசெலுத்தும் ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

டச்சு வீதி, உடுவில். (102459) பிள்ளைகள்.


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

24.08.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2283

வெற்றி எழுத்து N — வெற்றி எண்கள் 3 2 4 7 9 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | N | 3 | 2 | 4 | 7 | 9 | 4 | ரூபா.20,166,890/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 3 | 2 | 4 | 7 | 9 | 4 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 2 | 4 | 7 | 9 | 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் 08 |
| 3 பரிசுகள் | | | | 4 | 7 | 9 | 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 88 |
| 4 பரிசுகள் | | | | | 7 | 9 | 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 821 |
| 5 பரிசுகள் | | | | | | 9 | 4 | ரூபா. 100/= | பரிசுகள் 8541 |
| 6 பரிசுகள் | | | | | | | 4 | ரூபா. 20/= | பரிசுகள் 84286 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 3 | 2 | 4 | 7 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 08 |
| 8 பரிசுகள் | | 3 | 2 | 4 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 84 |
| 9 பரிசுகள் | | 3 | 2 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 842 |
| 10 பரிசுகள் | | 3 | 2 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 8398 |
| 11 பரிசுகள் | N | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 33706 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 8,383,040.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 20,610,770.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னமும் கண்ணீரில்தான் வன்னி மக்களின் வாழ்வு



''எப்பிடி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்'' என்று நகைச்சுவை நடிகர் விவேக் ஒரு படத்தில் சொல்கின்ற பிரபல்யமான வசனம் வன்னிக்குள் நுழைகின்ற ஒவ்வொருவர் மனதிலும் இயல்பாகவே தோன்றிவிடும். ''எப்படியிருந்தவர்கள் இப்படியாகிவிட்டார்களே'' என்று வெப்பம் நிறைந்த பெருமூச்சொன்றை



நகை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்...

உதிர்க்காமல் வன்னியை விட்டு வரமுடியாது. அந்தளவுக்கு அங்குள்ள மக்களின் வாழ்வினைத் தன் தீநாக்குகளால் கொழுந்து விட்டெரித்த போர், கீலம் கீலமாக கிழித்துப் போட்டிருக்கிறது.

பரந்தன் சந்தியை அண்மித்தது முதல் வன்னிக்குள் செல்லும் ஒவ்வொரு கணமும் துயர் மிகுந்ததாகவே பட்டது. கடைகள், விரைந்தோடும் வாகனங்கள், புது வாழ்வுக்கான எத்தனங்கள் என்பன தொடர்ச்சியாக நிகழ்ந்து வருவதால் வெளிப்பார்வைக்கு கிளிநொச்சி மீண்டும் களை கட்டுவது போல தோன்றினாலும் உண்மையில் அதன் அடியில் சொல்லமுடியாத ஒரு துயரிசை படிந்தே கிடக்கிறது. 'ஒய்யாரக் கொண்டடையாம் உள்ளே ஈரும் பேனுமாம்' என்று சொல்லக்கூடியது போல வெளிப்பூச்சுக்கு மீண்டெழும் வன்னிப்பகுதியே - ஏ9 வீதியின் இருமருங்கிலும் - தென்பட்டாலும், பெருநிலப்பரப்பின் ஆத்மாவாக விளங்குகின்ற கிராமப்புறங்கள் எல்லாமே இன்னமும் அவதிக்குள் தான் மூழ்கிக் கிடக்கின்றன.

இயந்திர கதியோடு நகர்ந்துகொண்டிருந்த கிளிநொச்சி நகரின் மையப்பகுதியில் மிகநீண்ட வரிசையில் வாடி வதங்கியபடி நூற்றுக்கணக்கான மக்கள் கண்களில் ஏக்கங்களோடு நின்றிருந்தனர். ஒரு சில தாய்மார்களின் கைகளில் கைக்குழந்தைகள் வேறு. அவை நீண்ட நேரமாக தாயின் கைகளிலேயே இருந்தமையால் சினங்கொண்டு எவ்வித சமரசங்களுக்கும் இடங்கொடாமல் வீரிட்டு அழுவதிலேயே கவனமாக இருந்தன. ஏதோ நிவாரணத்தைப் பெறுவதற்காக நின்ற கூட்டமென்று நினைத்துக்கொண்டு அணுகியபோதுதான் உண்மை புரிந்தது.

கிளிநொச்சி நகரில் உள்ள வங்கியொன்றில் போர்நிகழ்வதற்கு முன்னர் நகைகளை அடகுவைத்தவர்களுக்கு நஷ்டஈடாக பணம் அல்லது அவர்களின் நகை என்பவற்றை வழங்குவதாகவும் அடகுவைத்த பற்றுச்சீட்டை கொண்டுவர வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி செவ்வாய்க்கிழமை - போயாநாளில் - மப்பும் மந்தாரமாக வானம் 'இந்தா பார் மழையை அனுப்புகிறேன்' என்று வெருட்டிக்கொண்டிந்த சூழலிலும் அதிகாலை நான்கு மணி முதலே குறித்த வங்கியை மக்கள் சூழத்தொடங்கினர்.

கிட்டத்தட்ட 600 பேர் மிகநீண்டவரிசையில். இனிமேல் கிடைக்கவே கிடைக்காதென்றும் நினைத்திருந்த நகைகளோ அல்லது அவற்றின் பெறுமதியான பணமோ மீளக்கிடைக்கப்போகிறது என்று

## பதிவு 1

ஒருவித சந்தோசத்தோடு காத்திருத்தலின் வலியையும் லட்சியம் செய்யாது அவர்கள் நின்றிருந்தனர். ஒவ்வொருவராக வங்கிக்குள் செல்வதும் புன்னகை முகத்தோடு மீள்வதுமாக நடவடிக்கைள் நிகழ்ந்துகொண்டிருந்தன. ஆனாலும் சில சம்பிரதாயபூர்வமான நடவடிக்கைகளால் ஒவ்வொருவரும் உள்ளே சென்றுவர மிக நீண்டநேரம் எடுத்தது. காத்திருந்ததோ பலநூறுபேர்.

இத்தனை பேருக்கும் ஒரேநாளில் நஷ்டஈட்டையோ நகைகளையோ வழங்கிவிடமுடியாது என்பது வங்கி அதிகாரிகளுக்கு கூட்டத்தைப் பார்த்தவுடனேயே புரிந்திருக்கவேண்டும். அதற்கு மாற்றீடான வழி ஒன்றை அவர்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தியிருந்தால் பல மணித்தியாலங்களாக கால்கடுக்க மக்கள் நின்றிருக்கவேண்டிய அவலம் நேர்ந்திருக்காது. வழமையான அரச அதிகாரிகளின் மெத்தனத்துக்கு தாமும் விதிவிலக்கல்ல என்பது போல மாலை இரண்டு மணியவில்தான் ''இன்றைக்கு 150 பேருக்கு மட்டும்தான் பணம் வழங்குவோம்'' என்ற அறிவிப்பு வங்கி அதிகாரிகள் மூலம் மக்களுக்கு விடுக்கப்பட்டது.

காத்திருந்த வலியும், ஏமாற்றமும் ஒன்றுசேர ஆக்ரோஷநிலையில் மக்கள், வங்கிக் காவலாளிகளை இடித்துத் தள்ளிக்கொண்டு உள்ளே செல்ல முயன்றனர். வரிசை குழம்பியது. ஒரு கலவரம் நிகழ்வது போன்ற பிரமை அந்தச் சூழலில் தோற்றம் பெற்றது. நிலைமை கட்டுமீறிப்போவதை உணர்ந்த வங்கி அதிகாரிகள் காலம் கடந்தபின் ஞானோதயம் பெற்றவர்கள் போல அவசர அவசரமாக எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் 250 பேருக்கு 'டோக்கன்' வழங்கப்பட்டு அவர்களுக்கான நஷ்டஈடு அல்லது நகை வழங்கப்படும் என அறிவித்தனர். இவ்வளவு நேரமும் காத்திருந்தவர்கள் ஒன்றும் அதிகாரிகள் இல்லையே; சாதாரண மக்கள்தானே. முணுமுணுத்தபடி கலைந்துசெல்வதைத் தவிர மக்கள் வேறென்ன செய்வார்கள்.

மழையின் சுவடுகள் ஏ9 வீதியின் இருபுறமும் அப்பட்டமாகத் தெரிந்தன. வெள்ளம் திட்டுத் திட்டாக ஆங்காங்கே குடிகொண்டிருந்தது. வெள்ளத்தால் கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்தோர் பலரும் இன்னல்களை அனுபவிப்பதாக தகவல் வந்திருந்தது. எங்கெங்கே மக்களுக்கு மழையினால் சேதம் என்பதை அறிய கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு விரைந்தோம். அரச அதிபர் ஏர்பூட்டும் விழாவுக்காகப் பூநகரிக்குப் போயிருந்தார். ஒரு சில அதிகாரிகள் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தனர். போயாநாளிலும் அக்கறையோடு தமது கதிரைகளில் அமர்ந்திருந்த அதிகாரிகளைப் பார்க்கையில் ஆனந்தமாகத்தான் இருந்தது. அது சில விநாடிகள் மட்டுமே நீடித்தது.




அரசு தந்த தறப்பாள், சிலாகை என்பவற்றைக் கொண்டு இதைத்தான் கட்டமுடியும்.

ஓர் பெண் அதிகாரியிடம் ''மழையால் மீள்குடியமர்ந்தோருக்கு ஏதும் பாதிப்பா?'' என்று கேட்டதுதான் தாமதம், அந்த அதிகாரி இதற்காகவே காத்திருந்தது போல பொரிந்துதள்ளத் தொடங்கினார். ''உந்தச் சனங்கள் இப்படித்தான். எது குடுத்தாலும் அடங்காதுகள். அரசாங்கம் எல்லாத்தையும் செய்யமுடியுமோ? அவைக்கு தறப்பாளும் சிலாகைகளும் குடுத்திருக்கு. அதை வச்சுக்கொண்டு கொஞ்சம் மண்போட்டு மேடாக வீட்டைக் கட்டியிருந்தால் வெள்ளம் ஏன் போகப்போகுது? அரசாங்கத்தை மட்டும் நம்பாமல் சனங்களும் முயற்சிசெய்யவேணும். அதை விட்டுவிட்டு ஒழுகுது, வெள்ளம் வருகுது என்று நெடுகச் சொல்லிக்கொண்டிருக்கிறதில நியாயமில்லை'' என்று மூச்சுவாங்கும் அளவுக்கு கூறி முடித்தார்.

ஆன்ாலும் பக்கத்தில் இருந்த இன்னோர் அதிகாரி அவரது கருத்தை உடனேயே மறுதலித்தார்.

''தறப்பாள் காத்துக்கும் மழைக்கும் எப்பிடி நின்றுபிடிக்கும். சனங்களுக்கு கூரைத் தகடு குடுத்திருந்தால் தங்கட வீடுகளை அதுகள் ஒழுங்காக் கட்டியிருக்குங்கள். தறப்பாள வைச்சு 'ரென்ட்'தான் (கூடாரம்) போடமுடியும். உயரமா மண்போட்டு கட்டினாலும் வெள்ளம் போகத்தான் செய்யும்.'' மக்கள் பக்கமாக - யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு - அந்த அதிகாரி தன் கருத்துக்களை எம்மிடம் பகிர்ந்துகொண்டார். கூடவே இந்த மழையால் சாந்தபுரம் பகுதியே அதிகம் பாதிக்கப்பட்டதாக கூறி வழியும் காட்டினார். பயணம் சாந்தபுரத்தை நோக்கித் திரும்பியது.

வாழ்க்கையில் எந்தவிதமான துன்பங்களையெல்லாம் அனுபவிக்கக் கூடாதோ அவற்றையெல்லாம்



இதற்குப் பெயர்தான் சமையலறையா?

வேண்டியளவுக்கு அனுபவித்து விட்டு நடைப்பிணங்களாக மீள் குடியேற்றப்பட்ட வன்னி மக்களுக்கு தமது வீடுகளை அமைப்பதற்கு கொடுக்கப்பட்டதென்னவோ தறப்பாளும், சிறு சிலாகைகளும் தான். எறித்தால் சுடுவெயில்; பெய்தால் பெருமழை என்கிற காலநிலையைக் கொண்டிருக்கும் வன்னியில் இந்தத் தறப்பாளையும், சிலாகைகளையும் வைத்துக் கொண்டு முற்றாகத் தூர்ந்து போன வீட்டினை மீளமைப்பதென்பது இயலாத காரியமே. ஆனாலும் இருப்பதைக் கொண்டு வாழ்வை எப்படியாவது ஓட்டிவிட வேண்டும் என்ற ஒரேஒரு பிடிமானத்தோடு காடுமண்டிக் கிடந்த வளவுகளைத் துப்புரவாக்கி தறப்பாளால் சிறு கூடாரம் அமைத்து ஒரு நல்ல காலம் பிறக்காதா என வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கிற மக்களை சாந்தபுரம் நோக்கிய பயணத்தில் இடையிடையே சந்திக்க நேர்ந்தது.

**ஔண்யன் — தமிழரசன்**

திருவையாறுப் பகுதியில் கிளிநொச்சிக் குளக்கட்டை அண்டியதாக சிறு குடிசையொன்றுக்கு பூவரசந்தடிகளால் முட்டுக்கொடுத்துக்கொண்டிருந்த முதியவர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. கடந்த சில தினங்களில் பெய்த மழையின் வடுக்களால் நிலமெங்கும் சேறாகிக் கிடந்தது. சின்ன வயதில் விளையாட்டுக்கு நாங்கள் கட்டிய வீடு கூட அந்தப் பெரியவரின் வீட்டைவிட விசாலமானதும் வசதியானதாகவும் பட்டது. அந்தளவுக்கு மிக ஒடுக்கமான ஒரு கூடாரம். அதனை அண்டியதாக நாலைந்து கிடுகுகளை நான்கு தடிகளின் மேல் சொருகி விட்டு அதனை ஒரு திறந்தவெளிச் சமையலறையாக மாற்றி சுடுநீர் வைத்துக் கொண்டிருந்தாள் அவரது பேத்தி. பெரியவரிடம் பேச்சுக்கொடுத்தோம். இதற்காகவே காத்திருந்தவர் போல - மடைதிறந்த வெள்ளமாய் - தன் உள்ளத்தில் கிடந்ததை எல்லாம் ஒரே மூச்சில் வார்த்தை வழியே, வெளியே கொட்டினார்.

தன்னுடைய கையறு நிலையை முள்ளிவாய்க்கால் வேதனை தந்த வலியின் உந்துதலால் ஆக்ரோஷத் தோடு அவர் வெளிப்படுத்தினார்.

(பயணம் தொடரும்)



வெள்ளத்தை எதிர்பார்த்து வெட்டப்பட்ட வாய்க்காலுடன் ஒரு குடும்பத்தின் இருப்பிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநில அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடுவதற்கு தி.மு.க. கண்டிப்பு

சென்னை,ஒக.26

மாநில அரசின் அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடுவதை தி.மு.க. கண்டித்துள்ளது. முதல்வர் கருணாநிதி தலைமையில் நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்த அக்கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில், மத்திய அரசின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திடீரென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. எம்.பிக்கள் கூட்டம், அறிவாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை நடந்தது. கட்சித் தலைவரும், முதல்வருமான கருணாநிதி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், தி.மு.கவைச் சேர்ந்த லோக்சபா, ராஜ்யசபா எம்.பிக்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சட்டசபைத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், திடீரென எம்.பிக்கள் கூட்டம் கூட்டப்பட்டதால் அரசியல் வட்டாரத்தில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள மத்திய அரசு முடிவெடுத்து, வரைவு சட்ட முன்வடிவைத் தயாரித்து மாநிலங்களுக்கு அனுப்பியது. அந்தச் சட்ட முன்வடிவு குறித்து, தமிழக முதல்வர் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி, அது மாநில அரசுகளின் வரி விதிக்கும் உரிமையை நீர்த்துப்போகச் செய்வதாகவும், கூட்டாட்சித் தத்துவத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

அதன்படி, சட்டமுன்வடிவை மத்திய அரசு திருத்தி அமைத்தது. அதுவும், நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமில்லாததாக அமைந்திருந்தது. இதனால் ஏற்படும் பாதிப்புகளைக் கடிதங்கள் மூலமாக பல முறை மத்திய அரசுக்கு முதல்வர் தெரிவித்தார். இதன்பின்னர் ஒருமனதான ஒப்புதலின்றி சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வது சாத்தியமாகாது என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அண்மையில் அறிவித்திருப்பது ஆறுதலை அளிக்கிறது.

இந்த அறிவிப்பை எம்.பிக்கள் கூட்டம் வரவேற்பதுடன், உறுதியாகவும், இறுதியாகவும் கல்வி, வரி விதிப்பு போன்ற துறைகளில் மாநில அரசின் உரிமைகளைப் பாதிக்காத அளவுக்கு மத்திய அரசின் அணுகுமுறைகள் தொடர்ந்து இருக்க வேண்டும் என கூட்டம் வலியுறுத்துகிறது.

மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு பொது நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்து மறுபரிசீலனை செய்து நல்ல முடிவு மேற்கொள்ளுமாறு பிரதமருக்கும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சருக்கும், முதல்வர் கடிதம் எழுதினார். அகில இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு நடத்தும் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் சமூக நீதிக்கு சேதம் ஏற்படாமல் தடுத்த மத்திய அரசுக்கு நன்றி. - இப்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# அருணாச்சல பிரதேசத்தில் ரூ. 1,000 கோடி ஊழல் வழக்கில் முன்னாள் முதல்வர் கைது

## பொலிஸார் அதிரடி

அருணாச்சலபிரதேசம், ஒக.26

1000 கோடி ரூபா ஊழல் வழக்கில் அருணாச்சலப் பிரதேச மாநில முன்னாள் முதல்வர் கெகொங் அபாங் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

வடகிழக்கு இந்தியாவில் சீனாவை ஒட்டியுள்ள இந்தியாவைச் சேர்ந்த மாநிலம் அருணாச்சலப் பிரதேசம். இந்த மாநிலத்தின் முன்னாள் முதல்வராக இருந்தவர் கெகொங் அபாங். இவர் முதல்வராக இருந்த போது ரேசன் மூலம் மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை வழங்குவதில் பெரிய அளவில் மோசடி நடந்தது.

இந்த மோசடி ரூபா 1000 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த 'ஊழல் தொடர்பாக கவுகாத்தி உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்குத் தொடரப்பட்டு, சிறப்பு புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக சிறப்பு புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் முன்னாள் முதல்வர் கெகொங் அபாங்குக்கு 3 முறை நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை அவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் சிக்கிய மற்றொரு முக்கிய நபரின் வாக்குமூலமும், சில பொருள்களை ஆதாரமாக வைத்தும் அவர் கைதுசெய்யப்பட்டார் என சிறப்புப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அப்போது வழக்குத் தொடர்பாக விசாரணை நடத்தத் தயாரிக்கப்பட்ட 65 முக்கிய கேள்விகள் கெகொங் அபாங்கிடம் அளிக்கப்பட்டன. விசாரணையின் போது தன் மீதான குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்துள்ளார்.

தற்போது இந்த வழக்கு அசாம் மாநிலத்தின் வடக்கு லக்கிம்பூர் பகுதியில் உள்ள சிறப்பு நீதிபதிக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி அங்கு 7 நாள்கள் பொலிஸாரின் காவலில் அவர் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் அவர் பிணையில் வரமுடியாத சட்டப்பிரிவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

# இந்திரா காந்தியின் வேடத்தில் நடிக்கிறார் பிரியங்கா சோப்ரா

மும்பை,ஒக.25



இந்திரா காந்தியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் திரைப்படத்தில், இந்திராவாக நடிகை பிரியங்கா சோப்ரா நடிக்கிறார்.

இந்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, 'இந்திரா காந்தியின் கதை' என்ற பெயரில் பொலிவுட்டில் திரைப்படம் தயாராகிறது. முன்னதாக, இந்தப் படத்தில் நடிகை மாதுரி தீட்சித் நடிப்பதாக தகவல் வெளியானது. தற்போது, இந்திராவின் வேடத்தில், பிரியங்கா சோப்ரா நடிக்க உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரமாண்டமாக தயாராகும் இந்தப் படத்தை இயக்குபவர் கிருஷ்ணா ஷா. இவர் ஏற்கனவே, 'ஷாலிமார்' மற்றும் 'ஹார்ட் ராக் ஷாம்பே' ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

'இந்திராகாந்தியின் கதை' படம் குறித்து கிருஷ்ணா ஷா கூறியவை வருமாறு -

இந்திராகாந்தியின் வாழ்க்கை குறித்து, ஏற்கனவே திரைக்கதை எழுதி வைத்திருந்தேன். வங்கதேச போர் தொடர்பாக, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சனின் பேச்சுகள் அடங்கிய ஒலி நாடா எனக்கு கிடைத்தது. அதை வைத்து, எனது திரைக்கதையை மாற்றி அமைத்துள்ளேன். இதற்காக பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டேன். இந்திரா காந்தி வேடத்தில், நடிகை பிரியங்கா சோப்ரா நடிக்கிறார். இந்திராவின் முகத்துடன், அவரது முகம் கிட்டத்தட்ட ஒத்திருப்பதால், மேக்கப் உதவியுடன் அவர் இந்திராவாகவே தெரிகிறார். - இப்படி கிருஷ்ணா ஷா கூறினார்.

# இலங்கையிலிருந்து சென்னை வந்த கப்பலில் பொறியியலாளர் மர்ம சாவு

இராயபுரம், ஒக.26

இலங்கையில் இருந்து சென்னை வந்த கப்பலில் தலைமை பொறியியலாளர் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

பர்மாவைச் சேர்ந்த 'பைபன் லீடர்' என்ற கப்பல் கடந்த 20 ஆம் திகதி இலங்கையில் இருந்து சென்னை துறைமுகத்திற்குப் புறப்பட்டது. அந்தக் கப்பலில் கொன்ரெய்னர்கள் இருந்தன. இந்தக் கப்பல் 22ஆம் திகதி சென்னைத் துறைமுகத்திற்கு வந்தது.

பின்னர் கப்பலின் கப்டன் கப்பலைச் சுற்றிப் பார்த்தார். அப்போது கப்பலில் ஒருவர் இறந்து கிடந்தார். இதுபற்றி கப்பலில் இருந்த கப்டன் துறைமுகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார். உடனே துறைமுகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குணவர்மன் மற்றும் பொலிஸார் சென்றனர்.

அப்போது பொலிஸார் நடத்திய விசாரணையில் இறந்து கிடந்த நபர், பர்மாவைச் சேர்ந்த தலைமைப் பொறியியலாளர் எனைங் லாத் (வயது - 47) என்பது தெரியவந்தது. பின்னர் பொலிஸார் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிரகாஷ்ராஜ் - போனிவர்மா திருமணம் இந்து முறைப்படி மும்பையில் நடந்தது

சென்னை,ஒக. 26



நடிகர் பிரகாஷ்ராஜுக்கும், நடன ஆசிரியை போனிவர்மாவுக்கும் மும்பையில் நேற்றுமுன்தினம் திருமணம் நடந்தது. இந்தத் திருமணத்தில் இரண்டு பேரின் நண்பர்களும், உறவினர்களும் கலந்து கொண்டார்கள்.

'டூயட்' என்ற படத்தில் இயக்குநர் கே. பாலசந்தரால் வில்லனாக அறிமுகம் செய்யப்பட்டவர் பிரகாஷ்ராஜ். கர்நாடகாவைச் சேர்ந்த இவர், நடிகர் ஆவதற்கு முன்பு நடிகை டிஸ்கோசாந்தி வீட்டில் தங்கியிருந்து வாய்ப்பு தேடி வந்தார். அப்போது இவருக்கும், டிஸ்கோசாந்தியின் தங்கை லலிதாகுமாரிக்கும் இடையே காதல் ஏற்பட்டது. லலிதாகுமாரியும் சில படங்களில் நடித்திருக்கிறார்.

பெற்றோர்கள் சம்மதத்துடன் பிரகாஷ்ராஜும், லலிதாகுமாரியும் திருமணம் செய்து கொண்டார்கள்.

பிரகாஷ்ராஜ் - லலிதாகுமாரி தம்பதிக்கு 2 பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்தன. ஆண் குழந்தை கீழே விழுந்ததில், தலையில் அடிபட்டு இறந்து விட்டது. அதன் பின்னர் பிரகாஷ்ராஜ் - லலிதாகுமாரி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இருவரும் விவகாரத்துச் செய்து கொண்டார்கள். லலிதாகுமாரி 2 மகள்களுடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறார். விவாகரத்தான பின்னர் அவர் மீண்டும் நடிக்க ஆரம்பித்து இருக்கிறார். பிரகாஷ்ராஜ் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய 5 மொழிப் படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், பிரகாஷ்ராஜ் ஒரே ஒரு ஹிந்தி படத்தில் மட்டும் நடித்திருக்கிறார். அந்தப் படத்தில் நடித்தபோது, ஹிந்தி நடன ஆசிரியை போனிவர்மாவுடன் பிரகாஷ்ராஜுக்கு நட்பு ஏற்பட்டது. நாளடைவில் இருவரும் காதலர்களாக மாறினார்கள். இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்கள்.

## இந்தியச் செய்திகள்

# என் மீது குறைகாண முடியாமல் உளுத்துப் போன குற்றச்சாட்டு

## கருணாநிதிக்கு விஜயகாந்த் பதில்

சென்னை,ஒக.26



வேறு எந்தக் குறையும் காண முடியாததால் கறுப்புப் பணம் இருப்பதாக உளுத்துப் போன குற்றச்சாட்டை முதல்வர் கருணாநிதி கூறியிருக்கிறார் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

சினிமாவில் நடிப்பதற்காக வாங்கும் சம்பளத்தில் பெரும்பகுதியை வருமான வரி கட்டாமல் கறுப்புப் பணமாக வாங்குகிறார் என விஜயகாந்த் மீது கருணாநிதி குற்றம் சாட்டியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் விஜயகாந்த் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கதாநாயகனாக நடித்து நான் வாங்குகின்ற சம்பளத்தில் பெரும்பகுதியை வருமான வரி கட்டாமல் கறுப்புப் பணமாக வாங்குகிறேன் என முதல்வர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் முதல்வர், நேரடியாகக் கூறாமல் 'கூறப்படுகிறது' என்று சொல்லி தப்பித்துக் கொள்வது ஏன்? இவர் இப்படி கூறுவது முதல் முறையல்ல. எம்.ஜி.ஆர். மீதும் இதே குற்றச்சாட்டைத்தான் கூறினார். வேறு எந்தக் குற்றம், குறையும் காண முடியாததால் உளுத்துப்போன குற்றச்சாட்டை கூறி வருகிறார்.

முதல்வர் கருணாநிதியின் குடும்ப வாரிசுகள் வாரத்துக்கு ஒரு திரைப்படம் எடுக்கின்றனரே, அது என்ன வெள்ளைப் பணமா? இரவு பகல் பாராமல் உழைப்பதில் வரி கட்டியதுபோக மீதிப் பணத்தை ஏழை, எளிய மக்களுக்கு வழங்கி வரும் என்னைக் குறை கூறும் முதல்வர், அவரது குடும்பத்தினர் உலக பணக்காரர்கள் வரிசையில் போட்டியிடும் அளவுக்கு செல்வம் வந்தது எப்படி என்பதை விளக்குவாரா? கதை வசனம் எழுதுபவர்கள் எல்லாம் கோடீஸ்வரர்கள் ஆனதில்லை.

60 ஆண்டு பொதுவாழ்வில் 55 ஆண்டுகளுக்குப் பிறகுதான் திடீரென தர்மம் செய்ய வேண்டும் என்கின்ற ஞானோதயம் அவருக்கு ஏற்பட்டது. அதுவும் பணத்தில் ஏழைகளுக்கு உதவ வேண்டுமென்று நான் கேட்ட பிறகுதான் நன்கொடை பட்டியலை அவர் வெளியிட்டார். எத்தனையோ பட்டங்களை வாரி வழங்கும் தி.மு.கவினர் கூட கருணாநிதியை வள்ளல் என்று அழைப்பதில்லை. அப்படி அழைப்பதற்கு அவர்களின் மனசாட்சி இடம் தரவில்லை.

ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்கின்ற எண்ணம் இயல்பாகவே ஏற்பட வேண்டும். வருமானத்தை ஈட்டுவது முக்கியமல்ல, அதனை எவ்வாறு செலவு செய்கிறோம் என்பதே முக்கியம். என்னைப் பொறுத்தவரை, சம்பாதிப்பதில் பெரும் பகுதியை ஏழைகளின் வயிற்றில்தான் வைக்கிறேனே தவிர, இரும்புப் பெட்டியில் அல்ல. ஆனால், மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்து ஊழல் செய்தவர்கள் ஏழைகளுக்கு என்ன செய்தனர்? காமராஜர் என்றால் கல்விக் கண் திறந்தவர்; எம்.ஜி.ஆர் என்றால் வள்ளல் என்ற அடையாளம் மக்களிடம் நிலைத்துவிட்டது. கருணாநிதி என்றால் ஊழல்வாதி என்ற அடையாளமே மக்கள் மனதில் நிலையாக நிற்கிறது - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் நிறுத்தத்துக்கு தடையாக நான் இருந்தேனா?

# துரோகம் புரிந்த கே.பி, கருணாவுக்கு மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை



## குமுறுகிறார் வைகோ

சென்னை, ஓக. 26

''இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படாமல் போனதற்கு நான்தான் காரணம் என்று குமரன் பத்மநாதன் குற்றம் சாட்டுவது அப்பட்டமான - வடிகட்டிய பொய்.''

- இவ்வாறு தமிழகத்தின் பழுத்த அரசியல்வாதியும், ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோ சீறியுள்ளார்.

தன் தவறை உணர்ந்த ஜூதாஸுக்கே மன்னிப்பு இல்லை என்றால், குமரன் பத்மநாதன், கருணா போன்ற துரோகிகளுக்கு மன்னிப்பே கிடையாது - என்றும் அவர் குமுறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தீவில் போர்நிறுத்தம் ஏற்படாமல் போனதற்கு வைகோதான் காரணம் என்று இலங்கை அரசின் விருந்தாளியாக தற்போது கொழும்பில் இருக்கின்ற குமரன் பத்மநாதன் (கே.பி.) என் மீது குற்றம்சாட்டி இருக்கிறார். வைகோவின் தேர்தல் பேராசையால், விடுதலைப் புலிகள் பலியாக நேர்ந்தது என்று ஆலகால விஷத்தை அவர் கக்கியிருக்கிறார்.

இப்படிக் கூறிய குமரன் பத்மநாதன், 2002 ஆம் ஆண்டு இறுதியில், சர்வதேசப் பொறுப்பில் இருந்து பிரபாகரனால் நீக்கி வைக்கப்பட்டவர். பகைவர்களுக்குக் கையாளாகி விடக்கூடாதே என்ற நிலையில், 2008 ஆம் ஆண்டில் இவர் சர்வதேச ஊடகத் தொடர்பாளராக அறிவிக்கப்பட்டவர்.

ரத்தத்தாலும் கண்ணீராலும் எழுதப்படும் தமிழ் ஈழ மக்களின் போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட துரோகப்படலத்தின் தொடர்ச்சியாக, தற்போது குமரன் பத்மநாதன் தமிழ் ஈழ விடுதலைக்கு எதிராக - மஹிந்த ராஜபக்ஷ அரசின் கைக்கூலியாக - தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்கிறார்.

இலங்கையில் போரை நிறுத்துவதற்கு தி.மு.க. தரப்பிலே முயற்சிக்கப்பட்டது எனவும், இந்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் அதற்கான ஒரு திட்டத்தைச் சொன்னார் எனவும், இந்தத் திட்டம் குறித்து, வைகோவுக்கும், பழ.நெடுமாறனுக்கும் தெரிவிக்கக் கூடாது என்றும், தேர்தல் காலமாதலால் போர் நிறுத்தம் ஏற்பட்டால் காங்கிரஸ் - தி.மு.கவுக்கு பெயர் வந்துவிடும் என்றும், அதனால் இந்தத் திட்டத்தைப் புலிகள் ஏற்க விடாமல் தடுக்க முயல்வோம் என்றும், புலிகளின் அரசியல் பிரிவுச் செயலாளர் நடேசனிடம் கூறப்பட்டது எனவும், நடேசன் அதனை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரனிடம் கூறியதால், மகேந்திரன் என்னிடம் கூறி விட்டாராம்.

தமிழ் ஈழ விடுதலைக் கோரிக்கையைப் புலிகள் கைவிட்டால், விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் ஆதரவு தரமாட்டோம் என்று நடேசனிடம் நான் கூறிவிட்டதால், இந்தப் போர் நிறுத்த முயற்சி கைகூடாமல் போனது எனவும் பத்மநாதன் என் மீது பழி சுமத்தியுள்ளார்.

பத்மநாதன் கூறியவை ஜமுக்காளத்தில் வடிகட்டிய அப்பட்டமான பொய். போர்நிறுத்தம் ஏற்பட்டால், என்னைவிட, பழ.நெடுமாறனை விட நிம்மதி அடைகிறவர்கள் யாரும் இருக்க முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலில் பதவி ஆசைக்காக நான் போர் நிறுத்தத்தைத் தடுத்தேன் என்று குமரன் பத்மநாதன் உளறியிருக்கிறார். மத்திய அமைச்சர் பதவிகள் என்னை நாடி வந்தபோதும் அவற்றை நான் நிராகரித்தவன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை எதிரிகளுக்குப் பிடித்துக் கொடுத்தான் ஜூதாஸ். 30 வெள்ளிக் காசுகளுக்காக இத்துரோகத்தைச் செய்த ஜூதாஸ், தனது குற்றத்தை உணர்ந்தவனாக உள்ளம் உடைந்து, முப்பது காசுகளை வீசி எறிந்துவிட்டு, மரக்கிளையில் கழுத்தில் சுருக்கிட்டு கொண்டு தற்கொலை செய்து கொண்டு மடிந்தான். ஆனால், தன் துரோகத்தை உணர்ந்து வருந்தி தற்கொலை செய்து கொண்டான் என்று உலகில் எவரும் சொல்வது இல்லை.

தன் தவறை உணர்ந்த ஜூதாஸுக்கே மன்னிப்பு இல்லை என்றால், குமரன் பத்மநாதன், கருணா போன்ற துரோகிகளுக்கு மன்னிப்பே கிடையாது. மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

## தென்மராட்சியில் அதிரடி சோதனை

# 'கள்ளக் கரண்ட்' பெற்ற 31 பேருக்கு அபராதம், இழப்பீடு 6 ½ லட்சம் ரூபா!

தென்மராட்சி,ஓக.26

தென்மராட்சி பிரதேசத்தில் சட்ட விரோதமான மின்சாரம்(கள்ளக் கரண்ட்) எடுத்த 31 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் அபராதமாகவும் மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்பீடாகவும் ஆறு லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி பிரிவினரும் கொடிகாமம் பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் இரவு 9 மணி தொடக்கம் வரணி, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, கெற்பேலி, கச்சாய் தெற்கு, மந்துவில் ஆகிய இடங்களில் திடீர் சோதனைகளில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 31 பேரை கைதுசெய்து மின் இணைப்புப் பெற்ற சாதனங்களையும் கைப்பற்றினர்.

இந்த 31 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை 25 பேருக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதமும் ஆறுபேருக்கு தலா எட்டாயிரம் ரூபா வீதம் அபாராதம் விதித்து அபாரதத் தொகை செலுத்தத் தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் -

அத்துடன் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதால் மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்பாக 11 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் எட்டுப் பேருக்கு தலா 11 ஆயிரம் ரூபாவும் ஏழுபேருக்கு தலா 12 ஆயிரம் ரூபாவும் இருவருக்கு தலா 14 ஆயிரத்து 500 ரூபாவும் மேலும் மூவருக்கு முறையே 15 ஆயிரம் ரூபா, 10ஆயிரத்து 500 ரூபா, 8ஆயிரம் ரூபாவும் - மொத்தமாக 3லட்சத்து 44ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

# பிக்குகளின் எதிர்ப்பையும் மீறி முன்னேஸ்வரத்தில் மிருக பலி

சிலாபம்,ஓக.26

பிக்குகளின் எதிர்ப்பையும் மீறி சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மிருகபலி வேள்வி பூஜைகள் நேற்று வழமைபோல் விமரிசையாக நடைபெற்றன.

முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்குள் நுழைய முயன்ற சுமார் 30 பிக்குகளைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். மிருகபலி வேள்வி பூஜையை நிறுத்தும்படியும் அப்படி நிறுத்தாவிட்டால் போராட்டம் நடத்தப்போவதாகவும் தேசிய பிக்குமார் சம்மேளனம் தெரிவித்திருந்தது. இதையடுத்து அகில இலங்கை இந்து மாமன்றமும் மிருகங்கள் பலியிடப்படுவதை நிறுத்தவேண்டும் என்று அறிக்கை விடுத்திருந்தது.

ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மிருக பலி வேள்வித் திருவிழா ஆரம்பமாவதற்கு சற்று முன்னர் சுமார் 30 பௌத்த பிக்குமார் பதாகையை வீதிக்கு குறுக்கே பிடித்தவாறு ஸ்ரீபத்திரகாளியம்மன் கோவிலை நோக்கி ஊர்வலமாக வந்தனர்.

மிருகபலி வேள்வி தொடர்பான சர்ச்சை நிலவியதால் ஆலயத்தின் முன்னால் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். கலகத் தடுப்புப் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பிக்குமார் ஊர்வலம் ஆலய வாயிலை வந்தடைந்தபோது பொலிஸார் ஆலயத்துக்குள் நுழைய விடாது தடுத்தனர். இதையடுத்து பொலிஸாருக்கும் பௌத்த பிக்குகளுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பொலிஸார் ஆலயத்துக்குள் செல்ல விடாத காரணத்தால் பௌத்த பிக்குமாரும் மேலும் சிலரும் பதாகைகளுடன் வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் மேற் கொண்டனர்.

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வழமைபோல் மிருகபலி வேள்விப் பூஜை எதுவித இடையூறுமின்றி நடைபெற்றது.

இதேவேளை, செ. இராஜதுரை இந்து கலாசார அமைச்சராக இருந்தபோது ஆலயங்களில் மிருக பலிக்குத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)



சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் மிருக பலி வேள்வியை நிறுத்தும்படி பௌத்த பிக்குமார் வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்கின்றனர்.

# ஆடைத் தொழிற்சாலை எதுவுமே இதுவரையிலும் மூடப்படவில்லை

## பிரதி அமைச்சர் யாப்பா கூறுகிறார்

கொழும்பு,ஓக.26

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ரத்துச் செய்யப்பட்டதால் எந்தவொரு ஆடைத் தொழிற்சாலையும் மூடப்படவில்லை. எந்த ஆடைத் தொழிற்சாலை ஊழியரும் வேலையை இழக்கவில்லை. எதிர்க்கட்சிகள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ரத்துச் செய்யப்பட்டதை பூதாகரமாகக் காட்ட முயற்சி செய்கின்றன.

பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்று இவ்வாறு குற்றஞ்சாட்டினார். தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் தயாரிக்கப்படும் ஆடைகளில் 70 சதவீதம் அமெரிக்காவுக்கே அனுப்பி வைக்கப்படுகின்றன. எஞ்சிய தொகையே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதேவேளை, தயாரித்த ஆடை ஏற்றுமதி எமது மொத்த ஏற்றுமதியில் 1.4 சதவீத மாத்திரமே.

எனவே, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை ரத்துச் செய்யப்பட்டதால் பொருளாதார ரீதியாக எதுவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அத்துடன், ஆழிப்பேரலை அனர்த்தத்தை அடுத்தே இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இச்சலுகை ரத்தாகிவிடும்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் சில ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதற்கு ஜி.எஸ்.பி. பிளஸ் ரத்தானது காரணமல்ல. நிர்வாகக் குளறுபடியே காரணமாகும். - என்றார்

(ஒ-சி)

# 2,800 மதுபான நிலையங்களுக்கு கடந்த ஆண்டில் மட்டும் அனுமதி

## இந்த லட்சணத்தில் மதுவுக்கு முற்றுப்புள்ளியா?

கொழும்பு,ஓக.26

மதுவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போவதாகக் கூறிவரும் அரசு கடந்த வருடம் மாத்திரம் 2 ஆயிரத்து 800 புதிய மதுபானசாலைகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கியுள்ளது என்றும் அந்த வருடம் மாத்திரம் மதுவிற்பனை மூலம் 2 ஆயிரத்து 800 கோடி ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது என்றும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக கூறியவை வருமாறு:-

மதுவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போவதாக அரசு கூறிவருகின்றது. மஹிந்த சிந்தனையிலும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மறுபுறம் மதுபாவனை ஊக்குவிக்கப்படுகின்றது.

2009ஆம் ஆண்டு மாத்திரம் 2 ஆயிரத்து 800 மதுபானசாலைகளுக்குப் புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கலால் திணைக்களத்தின் நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 2009ஆம் ஆண்டு மதுவரி மூலம் அரசுக்கு 2 ஆயிரத்து 800 கோடி ரூபா இலாபம் கிடைத்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தர்ம ராஜ்யம் ஒன்றை அமைப்பதற்காக ஜனாதிபதியை வழிநடத்தப் போவதாகக் கூறிக்கொண்டு அரசுடன் இணைந்துக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய இதுவிடயத்தில் மௌனமாகவுள்ளது.


அரசு வெறும் பிரசாரத்துக்காக மாத்திரமே மதுவுக்கு முற்றுப்புள்ளி என்ற பேச்சை முன்வைக்கின்றது. மறுபுறம் மதுபாவனையை ஊக்குவித்துக்கொண்டு அரசு இலாபம் பெறுகின்றது. - என்றார். (ஒ-சி)

**CSE COLOMBO STOCK EXCHANGE**

| | |
|---|---|
| பங்குச்சந்தை - ஆவணி | 25,2010 |
| பங்குச்சந்தைச்சுட்டிகள் | |
| அனைத்துப்பங்கு(ASPI) | 5,582.87↑ |
| மிலங்கா(MPI) | 5,876.38↑ |
| உரிமைமுதல் தகவல்கள் | |
| வியாபாரப்புரள்வு(Rs.) | 1,892.57Mn |
| பங்குகளின் அளவு(No.) | 45.75Mn |
| வியாபாரம்(No.) | 16,902 |
| சந்தை முதல்(Mkt.Cap) | 1,834.49Bn |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | |
| அதிகரிப்பு(Top 5 gainers)விலை | Rs. |
| டி. எ.ப்.சீ. சீ. வங்கி | 325.60 |
| எல்.ஒ.எல்.சி. | 784.70 |
| போ(க)ட் லான்ட் | 157.40 |
| கொழும்பு பார்மசி | 585.60 |
| பெ(க)கர்ஸ் ஹொட்டல் | 67.40 |
| குறைவு(Top 5 losers) - விலை | Rs. |
| குட்ஹோப் | 593.00 |
| என்வயர்மென்ரல் றிசோசஸ்(w3) | 46.10 |
| செலிசிங் | 555.00 |
| என்வயர்மென்ரல் றிசோசஸ்(w2) | 48.40 |
| என்வயர்மென்ரல் றிசோசஸ்(w6) | 46.90 |
| மேலதிக தகவல்கள் - | www.cse.lk |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து அணியைத் தோற்கடித்து இறுதி போட்டிக்கு முன்னேறியது இந்தியா



கொழும்பு, ஒக. 26

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடந்த போட்டியில் இந்தியா அணி நியூஸிலாந்தை 105 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இந்தியா, இலங்கை, நியூஸிலாந்து அணிகள் பங்குபற்றும் முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டி தம்புள்ளை ரன்கிரி சர்வதேச மைதானத்தில் நடந்துவருகிறது. நேற்று நடந்த கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதின. இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணியே இறுதிப்போட்டிக்குள் நுழையும் என்பதால் இந்தப் போட்டி இரு அணிகளுக்கும் முக்கியமான போட்டியாக இருந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது. கார்த்திக் - ஷேவாக் ஆகியோர் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகக் களமிறங்கினர். கார்த்திக் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினார்.

மறுமுனையில் இருந்த ஷேவாக் அதிரடியாக விளையாடி இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். ஷேவாக் நின்று அதிரடியாக ஆடிக்கொண்டிருந்தாலும் மறுமுனைக்கு அடுத்தடுத்து வந்த வீரரர்கள் அவருக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் அடுத்தடுத்து வெளியேறினர்.

இந்திய அணித் தலைவர் டோனி 38 ஓட்டங்களை எடுத்தார். ஏனைய வீரர்கள் குறுகிய ஓட்டங்களுடன் வெளியேறினர். கார்த்திக் (0), ஷேவாக் (110), விராட் கோக்லி (8), யுவராஜ் சிங் (6), ரெய்னா (1), ரவீந்திர ஜடேஜா (17), பிரவீன் குமார் (6), அசீஷ் நெஹ்ரா (0), இஷாந்த் சர்மா (8), முனாப்பட்டேல் (7) ஓட்டங்களுடன் வெளியேறினர். இந்திய அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களை எடுத்தது.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சாளர்களான மில்ஸ் (2), சவுத்தி (4), மேக்கே (1), மைக்கலம் (3) விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

224 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது நியூஸிலாந்து அணி. ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களாக வாட்லிங் - குப்தில் களமிறங்கினர். இந்த வீரர்கள் வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினர். இவர்களைத் தொடர்ந்து வந்த வீரர்களும் அடுத்தது வெளியேறினர். நியூஸிலாந்து வீரர்களில் மில்ஸ் மாத்திரமே 50 ஓட்டங்களைக் கடந்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சாளர்களான பிரவீன் குமார் (3), நெஹ்ரா (2), முனாப்பட்டேல் (3), சர்மா (1), ரவீந்திர ஜடேஜா (1) விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்திய அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தனர். இந்தப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றதன் மூலம் 4 புள்ளி மற்றும் போனஸ் 1 உடன் சேர்த்து 5 புள்ளிகளைப் பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 26

உயரப்புலம் கிராமத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு உயரப்புலம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெற உள்ளது.

யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (எ-314-318)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக. 26

சமூக சேவைகள் அமைச்சின் தொழிற்பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படும் கண்காட்சி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டை தொழில் பயிற்சி நிலையத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தலைமையில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்திரனராக சமூக சேவைகள் அமைச்சின் தொழிற்பயிற்சி பிரிவு அதிகாரி என்.கோணேஸ்வரனும் சிறப்பு விருந்தினராகச் சண்டிலிப்பாய் பிரதேச கணக்காளர் தங்கராசா தயாளினி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வேலாயுதம் பிள்ளைநிரஞ்சலா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கண்காட்சியில் தொழிற்பயிற்சியாளர்களினால் செய்யப்பட்ட ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-314-318)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாங்கேணி, போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 35 இற்கும் மேற்பட்ட யுவதிகள் அண்மையில் மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு வாகனங்களில் கொண்டு வரப்பட்டனர். தென்னிலங்கையில் உள்ள ஆடைத் தொழிற்சாலை நிறுவனங்களைச் சேர்ந்த சிலரால் இவர்கள் அழைத்துவரப் பட்டனர். இது குறித்து அன்று கொழும் பில் நின்ற எனக்கு உடனே தகவல் கிடைத்தது. நான் உடனே நடவடிக்கையில் இறங்கினேன்.

மட்டக்களப்பு ரயில் நிலையத்திற்கு எனது ஆதரவாளர்கள் சிலரைப் போகும்படியும் கூறினேன்.

உடனே அங்கு சென்ற எனது ஆதரவாளர்கள் யுவதிகள் ரயில் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டதற்குரிய காரணத்தை ஆடைத்தொழிற்சாலை நிறுவனத்தைச் சேர்ந்தோர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள், தென்னிலங்கையில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு வழங்குவதற்காக யுவதிகள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் எனப் பதிலளித்தனர். யாரிடம் அனுமதி பெறப்பட்டது என்பதை அவர்கள் கூற மறுத்தனர். உடனே எனது ஆதரவாளர்கள் இதற்குக் கடும் எதிர்ப்பைக் காட்டினார்கள். இதனையடுத்து யுவதிகளை அழைத்துச்செல்லும் முயற்சியை அவர்கள் கைவிட்டார்கள்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு படுவான்கரை - பெரிய போரதீவுப்பற்று காளிகோயிலடிப் பகுதிக்குச் சென்ற தென்னிலங்கை ஆடைத்தொழிற்சாலை நிறுவனங்களைச் சேர்ந்த சிலர் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அங்கு சென்ற அவர்கள் ஆலய நிர் வாக சபைத் தலைவர், கிராமத் தலைவர் மற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி யுள்ளார்கள்.

யுவதிகளுக்குத் தென்னிலங்கை ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக அவர்கள் கலந்துரையாடியுள்ளார்கள்.

இந்த வேலை வாய்ப்புக்கு இளைஞர்களை ஏன் ஈடுபடுத்த முயற்சிக்கவில்லை என அவர்களிடம் மக்கள் பிரதிநிதிகள் கேட்ட போது அதற்கு அவர்கள் ஆண்களை வேலைகளில் ஈடுபடுத்தமாட்டோம் என்று பதிலளித்துள்ளார்கள். இதனையடுத்து அந்தப் பகுதி மக்கள் பிரதிநிதிகள் இதற்குக் கடும் எதிர்ப்பைக் காட்டியதையடுத்து அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள்.

எனவே, வடக்குக்- கிழக்கு மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும். எமது யுவதிகளின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஆடைத் தொழிற்சாலை நிறுவனத்தின் நம்பகத் தன்மை எதுவும் தெரியாமல் பெண் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவது மிகவும் ஆபத்தானது.

எமது வடக்குக் - கிழக்குப் பகுதிகளில் யுத்தம் முடிவுக்கு வந்த நிலையில் இந்தப் பகுதிகளில் ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவி இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப் பதையே நாம் விரும்புகிறோம் - என்று அரியநேத்திரன் எம்.பி தெரிவித்தார். (அ-சி)

## மீள்குடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயகௌரவத்தோடு வாழவேண்டும் என்பதற்காக, இந்திய அரசு பல்வேறு வகைகளில் உதவி செய்து வருகிறது. விவசாய தொழில்களை எளிதாக மேற்கொள்ள அதி நவீன வேளாண்மைக் கருவிகளை இலங்கை தமிழர்களுக்கு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வேளாண்மைத்துறை நிபுணர் குழு தமிழர் பகுதிகளில் சென்று ஆய்வு மேற்கொண்டது. விவசாயத்தை தொடங்குவதற்கு தேவையான ஆரம்பக் கட்ட உதவிகள் செய்யப்பட்டன. மேலும் விதைகள், டிராக்டர்கள் போன்றவகைகளும் தமிழர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு பகுதியில் மீள்குடியேறியுள்ள தமிழர்களுக்கு இந்தியா சார்பில் 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. முதல் கட்டமாக ஆயிரம் வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும்'' - இப்படி எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்தார்.

## அரசு எழுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி முறைமை, 17ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாணசபைத் தேர்தல் முறைமை போன்றவை தொடர்பாகப் பேசுவதற்காக ஜனாதிபதி எம்மை 23ஆம் திகதி அழைத்திருந்தார்.

மேற்படி விடயங்களுள் மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பான அரசியல் நிலைப்பாடு எமக்கு அரசால் ஏற்கனவே எழுத்துமூலம் வழங்கப்பட்டது. அது தொடர்பான எமது நிலைப்பாட்டையும் நாம் அரசுக்கு வழங்கிவிட்டோம். அது தொடர்பான தெளிவுபடுத்தலுக்காக பேச்சுகள் இடம்பெறுகின்றன.

ஏனைய இரண்டு விடயங்களான நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குதல் மற்றும் 17ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் போன்றவை தொடர்பான அரசின் நிலைப்பாட்டை எழுத்துமூலம் எமக்குத் தருமாறு நாம் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டோம்.

**எழுத்துமூலமான யோசனைகள் கிடைக்கும் வரை பேசமாட்டோம்**

இந்த வாரத்துக்குள் அவை எழுத்து மூலம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி எமக்கு வாக்குறுதியளித்தார். அவ்வாறு யோசனைகள் கிடைக்கப்பெற்றதும் நாம் அவற்றைச் செயற்குழுவில் ஆராய்ந்து எமது நிலைப்பாட்டை அரசுக்குத் தெரிவிப்போம்.

எழுத்துமூலமான யோசனைகள் எமது கைகளுக்குக் கிட்டும்வரை அவை தொடர்பில் அரசுடன் பேசுவதில் பயனில்லை. அதனால், அந்த யோசனைகள் எமக்கு வழங்கப்படும்வரை நாம் அவை தொடர்பில் அரசுடன் பேச்சுகளில் ஈடுபடமாட்டோம்.

நாம் அரசின் பங்காளிகள் அல்லர். அரசின் ஊழல், மோசடிகளை நாம் என்றும் எதிர்த்தே வருகின்றோம். அதேபோல், அரச செயற்பாடுகள் எல்லாவற்றையும் நாம் எதிர்க்கப்போவதுமில்லை.

அரசமைப்புத் திருத்த யோசனைகளைத் தனித்து நின்று நிறைவேற்றினால் ஏற்படப்போகும் பிரச்சினைகளை நன்கு அறிந்து அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவே அரசு எமது உதவியை நாடுகின்றது.

குடும்ப அரசமைப்பாக இல்லாது நாட்டு மக்களுக்கான அரசமைப்பாக இருந்தால் நாம் நிச்சயம் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவோம்- என்றார். (அ-சி)

## எதிர்வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியேற்றம் செய்த இடங்களில் இந் திய அரசு 500 கோடி ரூபா செலவில், 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தர உள்ளது. இத்திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

இந்தியா - இலங்கை இடையேயான சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுகுறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கவே டில்லி வந்துள்ளேன்.

- இப்படி பஸில் ராஜபக்ஷ கூறினார்.

இதேவேளை வேளாண்துறை அமைச்சர் சரத்பவார், சுற்றுலாத்துறை அமைச்சர் குமாரி ஷெல்ஜா ஆகியோரையும் இலங்கை அமைச்சர் பஸில் சந்தித்துக் கலந்துரையாடினார். (அ-சி)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் மீளக்குடியேற்றப்படுவர் என்றும் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறுகின்ற மக்களுக்காக 18 ஆயிரம் புதிய வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அவற்றில் 4 ஆயிரத்து 780 வீடுகளைக் கட்ட உலக வங்கி நிதியுதவி வழங்கியுள்ளது என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ஒ-319)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்கு ஜனாதிபதியுடன் சமரச இணக்கப்பாட்டுக்கு வரும் சாத்தியம் உள்ளது. இது தொடர்பாக எதிர்க் கட்சிகள் தரப்பில் ஒரு பரந்த அணுகு முறையைக் கையாள வேண்டும் - என் றார்.

இவ்வாறான ஒரு சந்திப்பை மீண்டும் ஒருமுறை மேற்கொள்வீர்களா? எனக்கேட்டதற்கு - தேவை யேற்படும் போது சந்தித்துப் பேச இருப்பதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேசும் விடயம்பற்றி ஐ.தே.க. தலைவர் ரணிலுக்கு தாம் முன்னரே தெரிவித்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.


**A/L - 2010 மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கும்**

பொதுச்சாதாரண பரீட்சை வழிகாட்டி
இலவசப்பிரதியுடன்
P.கமல்தாசன் & உமாசங்கர்
சகல புத்தகசாலைகளிலும்

**வாடகைக்கு**

வி.எஸ். மஹால்
320, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மாடி வீடுடன் கூடிய இரண்டு கடைகளும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் :-
021 222 5952
077 5320589
071 1773617

**விற்பனைக்கு**

★ புதிய டெலிபோன் பூத்.
★ பழுதடைந்த சிசில் குளிரூட்டி.

பரணி தொழில் நுட்ப சேவை
166, நாவலர் வீதி, யாழ்.
T.P. : 0718474325

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில், நெல்லியடியில் இயங்கிவரும் பிரபல கணனி நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர், தொழில் நுட்பவியலாளர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
26.08.2010 - 10 முதல் 04.00 மணி வரை.
27.08.2010 - 02 முதல் 05.30 மணி வரை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு :- 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இ/570155)

**உடனடி தேவை**

நான்கு வர்ண மற்றும் இரு வர்ண அச்சியந்திரத்தில் பணிபுரிவதற்கு அனுபவம் வாய்ந்த ஆள்கள் உடன் தேவை.
பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.
ஆர்வமுள்ளோர் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.
தொடர்பு: முகாமையாளர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org